# தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் வெளியேற்றப்பட்டனர்

Registered as a Newspaper in Ceylon    வார மலர் ★ ★ விலை சதம் 20




ஈழநாடு
EELA-NADU

இவ்வருடத்துக்குரிய விளம்பரநிதி யாவும் முடிவடைந்துவிட்டமையால், தயவுசெய்து விளம்பரத்துக் கௌவந்து சிரமம் தரவேண்டாமென்று மிகவும் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
அதிபர்
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

மலர் 11    சௌமிய சித்திரை 26    ஸா 20    (8-5-69)    வியாழக்கிழமை    இதழ் 86

வெள்ளவத்தை, விழாழன்

கட்டுபெத்தை தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த 200 மாணவர்கள் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

நேற்று முன்தினமிரவு மேற்படி கல்லூரி மாணவர் விடுதியையும் வார்டனின் விடுதியையும் சேதப்படுத்தியதாகவும் இங்குள்ள விலையுயர்ந்த மின்சார உபகரணங்களைச் சேதப்படுத்தியதாகவும் இவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் வெளியேற்றப்பட்டதாக அறியப்படுகிறது.

கல்லூரி டைரக்டர் இவர்களை வெளியேறும்படி உத்தரவிட்டபோது இதற்கு இவர்கள் மறுப்புத் தெரிவித்ததால் பொலிஸார் வரவழைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. கல்லூரி மாணவர் விடுதியில் வழங்கப்படும் உணவு தரக்குறைவாக இருப்பதை ஆட்சேபிக்குமுகமாகவே மாணவர்கள் இவ்வித ஆர்ப்பாட்டத்தைச் செய்தனரென்றும் உணவு தரக்குறைவு பற்றி மாணவர்கள் சில காலமாகத் தெரிவித்துவந்த குறைபாடு கவனிக்கப்படாததாலேயே அவர்கள் இவ்விதம் செய்ததாகவும் மாணவர் தரப்பில் கூறப்பட்டது.

## வடக்கில் டி. ஐ. ஜி. 12 தினங்கள் நிற்பார்

யாழ்ப்பாணம், வியா.

12 நாட்களை உத்தியோக பூர்வமாக வடக்கில் கழிப்பதற்காக இங்கு வருகிறார் டெப்பியூட்டி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. டெடிகம. உத்தியோக பூர்வமாக குருநகர் கத்தோலிக்க தேவாலய சம்பவத்தின் போது மட்டும் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த திரு. டெடிகம இரண்டாவது தடவையாக அடுத்த மாதம் 9-ம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்.

வடபகுதியிலுள்ள 19 பொலிஸ் நிலையங்களையும் பார்வையிடுவதற்காக இங்கு வரும் திரு. டெடிகம அடுத்தமாதம் 9-ம் திகதியிலிருந்து 14-ந் திகதி வரையும், பின்னர் 23-ம் திகதியிலிருந்து 28-ம் திகதி வரையும் இங்கு தங்கி நிற்பார்.

இத் தினத்தில் யாழ்ப்பாணம் ஸ்ரேடியம் மைதானத்தில் பொலிஸாரினதும், பொலிஸ் நாய்களினதும், பொலிஸ் மோட்டார் சைக்கிள் வீரர்களதும் விளையாட்டுக்களையும், கண்காட்சியையும் நடாத்துதற்கும் ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது. (கா. நி)

### மாவிட்டபுரம் ஆலய விவகாரம்

# ஜூன் 4-ம் திகதி இடைக்கால தடை உத்தரவு மனுத் தீர்ப்பு

## முன்னாள் எம். பி சுந்தரலிங்கம் நீதி மன்றத்துக்கு வரவில்லை

### வழக்கறிஞர்கள் தொகுப்புரை முடிந்தது

யாழ்ப்பாணம், வியாழன்

**மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குள் தன்னைச் செல்லவிடாமலும் வணங்குவதற்கும் திரு. சி.சுந்தரலிங்கம் விதிக்கும் தடைக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று கணேசன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் தீர்ப்பு அடுத்த மாதம் 4-ம் திகதி வழங்கப்படவிருக்கின்றது.**

இம் மனுமீதானவிசாரணை நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் திரு. எம். இஸ்மெயில் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது இரு தரப்பு வழக்கறிஞர்களும் தொகுப்புரையை நிகழ்த்தினர்கள்.

உள்வீதிக்குள் பிரவேசித்து வழிபாடு செய்யமுடியாது. இந்தப்பழக்கம் சட்டத்தில் உண்டு. உயர்ந்த சாதி மக்களுக்கும் தாழ்ந்தசாதி மக்களுக்கும் இடையேயுள்ள பிரச்னைகளை தேசவழமைச் சட்டத்தின் 4-ம் பிரிவின்

சமயத்திலுள்ள பழக்க வழக்கத்தைச் சரி பிழை என்று சொல்லச் கோர்ட்டுக்கு அதிகாரமில்லை. அந்தப்பழக்கத்தை எதுவென்று அறிந்து நிலைநாட்டுவது தான் நீதிமன்றத்தின் பொறுப்பு. இது சமயத்தி

கொடுத்த அதிகாரமுமுண்டு ஆகவே இடைக்கால தடை உத்தரவு மனு தள்ளப்படவேண்டும்.

மனுதார் தரப்பு வழக்கறிஞரான திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை தமது தொகுப்புரையில் தெரிவித்ததாவது:-

எதிரியின்குறிப்பிட்டபழக்கத்தை சமயத்தின் அங்கம் என்றோ நம்பிக்கையின் அங்கம் என்றோ எதிர் மனுவில் சொல்லவில்லை. இதை ஒரு சமயப் பிரச்னை என்று கூறி சாட்சியத்திலும் அதை ஒப்பேற்றவில்லை. ஆகவே இது சமயப் பிரச்னை அல்ல. அதனால் அமைப்புத் திட்டத்தின் 29-ம் பிரிவின் முதலாவதின் 'ஏ' யின் விதி இங்கு இயங்குகிறது.

சமூக குறைப்பாட்டு விலக்குச் சட்டத்திலும் முன் இல்லாத புதிய உரிமைகளை உண்டாக்கவில்லை என்று ஒப்புக்கொள்கிறோம். ஆனால் அதுசமூகத்திலுள்ள பிரிவினையான சமூக குறைபாடு

சட்டமல்ல. பிள்ளைகளைச் சுவீகரித்து வளர்க்கும் சட்டத்திலே எந்தச் சாதியைச் சேர்ந்த பிள்ளையும், வளர்த்தவனின் சாதியை ஏற்றுக் கொள்ளும் என்பது தேசவழமைச் சட்டம். இதனால் சாதி மாறிய தன்மையைத் தேசவழமைச் சட்டம் ஏற்றுக்கொள்கின்றது.

எந்தப் பழக்கமும் சட்டமாவதற்கு நியாயமானதாகவும், நிச்சயமானதாகவும், இடையறுததாகவும் இருக்கவேண்டும். இந்த 3 அம்சங்களும் இந்தப் பழக்கத்தில் இல்லை. ஆகவே சாதி காரணத்தால் வந்த இப்பழக்கம் சட்டம் ஆகமாட்டாது. இன்னும் நாட்டின் சட்டத்துக்கு மாறான எந்தப் பழக்கமும் சட்ட அமுல்பெறமுடியாது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பொதுச் சொத்து. அங்கு வழிபாடு செய்ய எந்[illegible]னுக்கும் உரிமை [illegible] வழக்காளி 2[illegible] டம் வழிபட்டுவந்தவர்.

[illegible]ன்றத்திற்குச் சமுகப் கொடுத்திருந்தார்.

மனுதார் தரப்பில் வழக்கறிஞர்கள் எஸ். கதிரவேலுப்பிள்ளை, எஸ். பொன்னையா ஆகியோர் புரக்டர் மகாதேவாவின் அனுசரணையுடனும், எதிரிதரப்பில் வழக்கறிஞர்கள் ஏ. வி. குலசிங்கம், எஸ். ஆர். கனகநாயகம், ரி. சோமசுந்தரம் ஆகியோர் புரக்டர் சண்முகநாதனின் அனுசரணையுனும் ஆஜராகியிருந்தார்கள்.

சுமார் 3 மணிநேரம் வழக்கறிஞர்கள் இருவரும் தொகுப்புரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து மனுவிற்கான தீர்ப்பு வழங்குவதை மாவட்ட நீதிபதி அடுத்த மாதம் 4-ம் திகதிக்கு ஒத்திவைத்தார், (கா. நி)

## கந்தபுராண விரிவுரை

யாழ்ப்பாணம், வியாழன்

வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியா

## விபத்தில் சிக்கிய வாலிபர் அனுமதிக்கும்போதுமரணம்

யாழ்ப்பாணம், வியாழன்

லொறிவிபத்தினல் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கவெனக் கொண்டுவரப்பட்ட வாலிபர் ஒருவர் அனுமதிக்கும்போதே மரணமானார்.

முல்லைத்தீவில் நடைபெற்ற லொறி விபத்தொன்றில் சிக்கிய புதுக்குடியிருப்பைச்சேர்ந்த சி. கே. பியதாஸா என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த பியதாஸா, அங்கிருந்து 'அம்புலன்ஸ்' வண்டிஒன்றில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு நேற்று முன்தினம் மாலை கொண்டுவரப்பட்டபோதே அவர் மரண[illegible]

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிப் பொலிசாரும், முல்லைத்தீவுப்பொலிசாரும் விசாரணை நடத்திவருகின்றனர். (கா நி)

## ஹுசேன் சகோதரர் நிலை

புதுடில்லி, மே 7

மார்புநோய் காரணமாக நேற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த காலஞ்சென்ற ஜனதிபதி டாக்டர் ஸாகிர்ஹுசேனின் சகோதரரான முகம்மது ஹுசேனின் உடல்நிலை இப்போது தேறிவருவதாக அறிவிக்கப்பட்டது.

திரு. முகம்மதுவைப் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஆஸ்பத்திரிக்குச் சென்று நேற்றிரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட நீதிமன்றத்தில் திரு. எம். இஸ்மெயில் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது இரு தரப்பு வழக்கறிஞர்களும் தொகுப்புரையை நிகழ்த்தினர்கள்.

எதிரி தரப்பு வழக்கறிஞரான திரு. ஏ. வி. குலசிங்கம் தமது தொகுப்புரையில் தெரிவித்தாவது:-

வழக்காளி சைவன் என்றும், மாவிட்டபுரம் ஆலயம் பொதுவானது என்றும், வழக்காளி கோவிலில் வழிபட உரிமையுள்ளவரென்றும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனல், உள்வீதியில் பிரவேசித்து வழிபாடுசெய்ய அவருக்கு உரிமையில்லை. அவர் உள்வீதியில் பிரவேசம் செய்து வழிபாடுசெய்ததென்பதும் உண்மையல்ல.

கோவிலில் பூசை முறைபடி தாழ்ந்த சாதி மக்கள் இந்தப்பழக்கம் சட்டத்தில் உண்டு. உயர்ந்த சாதி மக்களுக்கும் தாழ்ந்தசாதி மக்களுக்கும் இடையேயுள்ள பிரச்னைகளை தேசவழமைச் சட்டத்தின் 4-ம் பிரிவின்படி தீர்ப்பது முறை தர்ம சொத்துச் சட்டத்தின் 106-ம் பிரிவின்படி தர்ம சொத்து நிர்வாகத்தைப் பற்றியசில கட்டுப்பாடுகள் கோவிலில் உள்ள பழக்கப்பட தீர்க்கதேண்டும்.

1909-ம் ஆண்டு ஒரு சிகை அலங்கரிப்பவர் ஒரு கோவில் மனேஜர் மீது தாக்கல்செய்த வழக்கில் சிகை அலங்கரிப்பவர் கோவிலுள் செல்ல முடியாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. கர்ப்பக்கிரகம், மகாமண்டபம், அர்த்த மண்டபம் ஆகிய இடங்களில் பிராமணர் மட்டும் போகலாமென்று நீதிமன்றத் திர்ப்பு உண்டு.

என்று சொல்லக் கோர்ட்டுக்கு அதிகாரமில்லை. அந்தப்பழக்கத்தை எதுவென்று அறிந்து நிலைநாட்டுவது தான் நீதிமன்றத்தின் பொறுப்பு. இது சமயத்திலுள்ள பழக்கமாதலினால் சமூகக்குறைபாடு வழக்கச் சட்டம் இங்கு செல்லுபடியாகாது. அமைப்புத்திட்டச் சட்டத்தின் 29-ம் பிரிவின் 1-வதின் 'ஏ'யின்படி சமயத்தைப் பாதிக்கும் சட்டமாக இருப்பதால் சமூகக் குறைபாடு விலக்குச்சட்டம் பலமற்றது. அச்சட்டம் முன்னில்லாத புதிய உரிமைகளை ஒருவருக்கும் கொடுக்கவில்லை என்று சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு உண்டு. ஆகவே வழக்காளிக்கு உள்வீதியில் பிரவேசித்து வழிபட உரிமை இல்லை. அவரைத் தடுக்க எதிரிக்கு உரிமையுண்டு. எதிரிக்கு தர்மகர்த்தா

குச் சட்டத்திலும் முன் இல்லாத புதிய உரிமைகளை உண்டாக்கவில்லை என்று ஒப்புக்கொள்கிறோம். ஆனல் அது சமூகத்திலுள்ள பிழையான சமூக குறைபாடு ஒன்றை நீக்கி அதைத் தண்டனைக்குரிய குற்றம் ஆக்காது. எதிரியினுடைய சாட்சியம் இப்படியான ஒரு வழக்கம் ஆலயத்தில் உண்டென்று ஒப்பேற்றவில்லை. இந்தப் பழக்கத்தை அமுல் நடத்தவோ, கோவிலுக்கு வருபவர் யாரென்று அறிந்து தடைசெய்யவோ தர்மகர்த்தா நிர்வாகம் எந்த ஒழுங்கும் செய்யவில்லை. ஆகவே இது தர்ம சொத்து நிர்வாகப் பிரச்னை அல்ல. தர்மசொத்துச் சட்டத்தின் 106-ம் பிரிவு இங்கு செல்லுபடியாகாது.

தேசவழமையின் 4-ம் பிரிவில் சொன்ன பழக்கங்கள் இந்த வழக்கத்தைக் குறித்தனவல்ல. தேச வழமையில் இந்தப் பழககம் சொல்லப்படவில்லை.

தேச வழமை சாதியைக் கட்டிப்பிடிக்கும் மோட்டுச் கோவில் பொதுச் சொத்து. அங்கு வழிபாடு செய்ய எந்தச் சைவனுக்கும் உரிமை உண்டு. வழக்காளி 20 வருடம் வழிபட்டுவந்தவர். நாட்டின் சட்டம் தீண்டாமை தொடர்பான வழக்கத்தைக் குற்றமாக்கியது.

எதிரி வழக்காளியை இந்தப் பழக்கத்தின் பெயரால் தடுக்க முடியாது. எதிரிக்குக் கோவிலில் எந்த உரிமையுமில்லை. அவரும் வழக்காளியைப்போல ஒரு சைவன் தான். வழிபட வந்தவரே. ஒரு சைவன் இன்னெரு சைவனைத் தடுக்க முடியாது.

தான் தடுக்க அதிகாரம் உண்டென்று தர்மகர்த்தாவின் அதிகாரத்தை எதிரி ஒப்பேற்றவில்லை. ஆகவே வழக்காளியை எதிரி தடை செய்யாமல் இடைக்காலத் தடை உத்தரவு விதிப்பது நீதியாகும்.

மனுவின் எதிரியான திரு. ஸி. சுந்தரலிங்கம் நேற்று நீதிமன்றத்திற்குச் சமுகம் கொடுக்கவில்லை. மனுதாரான கணேசன் மட்டும் நீதி

## விரிவுரை

யாழ்ப்பாணம், வியாழன்

வண்ணர்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இன்றுதொடக்கம் 12 தினங்களுக்கு மாலை 5 மணிக்கு கயப்பாக்கம் சித்தாந்த வித்தகர் திரு. சோமசுந்தரம் செட்டியார் சித்தாந்தக்கருத்துக்களுடன் கந்தபுராண விரிவுரை நிகழ்த்துவார். யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

## இன்று

ஆனைகோட்டை, வியா

ஆனை கோட்டை மகாஜன சனசமூக நிலையத்தின் 18-வது ஆண்டு நிறைவுவிழா இன்று நடைபெறுகிறது. விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இடம்பெறும் இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ் மாவட்ட உதவி அரசாங்கஅதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை கலந்துகொள்வார்.

'அம்புலன்ஸ்' வண்டி ஒன்றில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு நேற்று முன்தினம் மாலை கொண்டுவரப்பட்டபோதே அவர் மரணமடைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## யாழ். நகருக்கு புதிய டாக்சிகள்

வெள்ளவத்தை, செவ்.

யாழ்ப்பாண நகருக்கு மேலும் 15 புதிய டாக்சிகள் வரவிருக்கின்றன. வெகு விரைவில் கொழும்பு துறைமுகத்தில் இறக்குமதியாகவிருக்கும் புதிய டாக்சிகளில் சில யாழ்ப்பாணத்திற்கு வருகின்றனவாம்.

பட்டது.

திரு. முகம்மது வைப் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஆஸ்பத்திரிக்குச் சென்று நேற்றிரவு பாாவையிட்டார். தமது மனைவி பிள்ளைகளை வரவழைத்துத் தமக்குக் காட்டுமாறு அவர் பிரதமரிடம் கேட்டுக்கொண்டார். உடனடியாகப் பாகிஸ்தானிலுள்ள இந்திய தூதுவருடன் தொடர்பு கொண்டதன் பேரில் திருமதி டாக்டர் முகம்மது இன்று காலை விமானமூலம் புதுடில்லி வந்தடைந்துள்ளார். அவருடன் கராச்சிலிருந்து அவரது உறவினர் ஒருவரும் வந்திருந்தார்.

# வடக்கே மத்திய துப்பறியும் பொலிஸ் பகுதி வேண்டும்

## பொலிஸ் அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

**வடபகுதியில் அதிகரித்து வரும் கள்ளக்கடத்தல், குற்றச்செயல்கள் ஆகியவற்றைத் தடுக்க வடமாகாணத்துக்கென தனியான ஒரு 'மத்திய துப் றியும் பொலிஸ் பகுதியை'' உடனடியாக நிறுவ உதவுமாறும், இதற்கென பிரத்தியேகமாகக் கடமையாற்ற 3 பொலிஸ் இன்ஸ்பெக்டர்களையும், 5 சார்ஜண்டுகளையும், 25 பொலிஸ் கான்ஸ்டபிள்களையும், 2 பொலிஸ் ஜீப், ஒரு அதிவேக இயந்திரப்படகு ஆகியவற்றையும் தந்துதவுமாறும் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம், பொலிஸ் இன்ஸ்பெக்டர்ஜெனரலிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

வட பகுதியில் அண்மைக் காலத்தில அதிகரித்துவரும் குற்றச் செயல்கள் பற்றிப் புள்ளிவிபரத்துடன் தகவல் கொடுத்துள்ள பொலிஸ் சுப்பிரிண்டன்ட் வடமாகாணத்துக்கு ஒரு மத்திய துப்பறியும் பொலிஸ் பகுதி நிறுவ வேண்டியதன் அவசியம் பற்றியும் இங்குவலியுறுத்தியுள்ளார்.

வடக்கில் பொலிசாரின் கடமை அதிகரித்துள்ளதாகவும் முக்கியமாக மற்றைய எந்தப் பொலிஸ்நிலையத்துக்கும் இல்லாதவாறு கள்ளக்கடத்தல் ஆலயப் பிரவேச தீண்டாமை ஒழிப்பு வேலைகளையும் வடக்கில் பொலிசாரேகவனிக்கவேண்டிய நிலையிலுள்ளதாகவும் இவர் தெரிவித்துள்ளார்.

1968-ம் ஆண்டில் கள்ளக் கடத்தலை தடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் கடற்படை, இராணுவம், சுங்கப்பகுதி அரசாங்கப் பகுதி, பொலிஸ் ஆகிய பலவழிகளில் மொத்தம்150 கள்ளக் கடத்தல் முயற்சிகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இதில் மிகக் கூடுதலான தொகையாக 89 கள்ளக் கடத்தல்களை பொலிசாரே கைப்பற்றியதாகவும் இதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

பொலிஸ் சுப்பிரிண்டன்ட் தெரிவித்துள்ள புள்ளிவிபரப்படி கடந்த வருடம் 39 கள்ளக்கடத்தல்களை சுங்கப் பகுதியினரும், பத்தை இராணுவத்தினரும், மூன்றைக் கடற்படையினரும், ஒன்றைகலால் இலாகாவினரும் இன்னென்றைகிராமசேவையாளர் ஒருவரும், பொலிசாரும் சுங்க இலாகாவினரும் சேர்ந்த நான்கும் இராணுவத்தினரும் சுங்கஇலாகாவினரும் சேர்ந்து ஒன்றும் இராணுவத்தினரும் கடற்படையினரும் சேர்ந்து இரண்டும் கைப்பற்றியதாகவும் தெரியவந்துள்ளது.

கள்ளக்கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளைப் பொலிசாரே கூடுதலாக மேற்கொள்வதாலும், கொலை, கொள்ளை, களவு போன்ற பலவழக்குகள்வடக்கில் இன்னமும் துப்புத்துலக்கப்படாமல் இருப்பதாலும் வடக்கில் ''மத்திய துப்பறியும் பொலிஸ்பகுதி'' ஒன்றை உடனடியாக நிறுவவேண்டியது அவசியம் மென்றும் பொலிஸ் சுப்ரீன்டன், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளார். காநி

## அந்தியக் கிரியை அழைப்பு

காலம்சென்ற யாழ்ப்பாண கனிஷ்ட ''ஆணழகன் செந்தில்'' செந்தில்நாதனுடைய அந்தியக் கிரியை வருகிற திங்கள் முதல் நாள் (14-5-69) புதன் கிழமை காலை 7 மணிக்கு கீரிமலையிலும் பகல் 11 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும். கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு சுற்றத்தாரையும்நண்பர்களையும்கேட்டுக்கொள்கின்றேம்.

**அவரின் சகோதரர்கள்:** ஆரியரர்சா, குகநாதன், சண்முகநாதன், மலர்மகள், திருமகள்.

பெற்றேர்

20, புளியடி ஒழுங்கை, கந்தர் மடம், யாழ்ப்பாணம். — திரு. வி. செல்லத்துரை, (தலைமை ஆசிரியர்) திருமதி செல்லத்துரை.

1563

ஈழநாடு பத்தாண்டு நிறைவு விழா

# ஜூனின் 12, 13, 14ம் திகதிகளில் யாழ்ப்பாணநகரில் நடைபெறும்

## வர்த்தக, சரித்திர பவனி ஊர்வலம்; நடன, நாடக நிகழ்ச்சிகள், வாணவிளையாட்டு

யாழ்ப்பாணம், வியாழன்

**ஈழநாட்டின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா அடுத்த மாதம் 12-ம், 13-ம், 14-ம் திகதி ஆகிய மூன்று நாட்களும் யாழ்ப்பாணநகரில் மிகவும் கோலாகலமாக நடைபெறவிருக்கின்றது.**

12-ம், 13-ம் திகதி ஆகிய முதல் இரு நாட்களும் வர்த்தக பவனி, சரித்திரக் கண்காட்சி பவனி, விளையாட்டுப்போட்டி ஆகியவற்றையும், 14 ம் திகதியான இறுதி நாளன்று யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் பிரமாண்டமான கலைவிழாவையும் நடாத்துவதென்று நேற்று நடைபெற்ற விழா மத்திய கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மூன்ரும்நாள் விழாவில் முக்கிய நிகழ்ச்சியாக வாணவிளையாட்டை நடாத்தவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மகளிர் கல்லூரிகளின் மாணவிகளின் நாட்டிய நிகழ்ச்சி கலைவிழாவில் மிக முக்கியமானதாக இடம்பெறும்.

முதலியார் செ. முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக்கமிட்டிக்கூட்டத்தில் வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் பொதுவேலைப் பகுதி சுப்ரின்டன்டிங் என்ஜினியர் திரு. பத்மநாதன், இ. போ. ச. பிராந்திய அதிகாரி திரு. வேலுப்பிள்ளை தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. மாணிக்கம், காரியாதிகாரிகள் திரு. எச். ஈ. புள்ளைநாயகம், திரு. எல். பற்றிக், சமூகசேவைப்பகுதி உதவிஅதிகாரி திரு. என். சிவசிதம்பரம், வழக்கறிஞர் அல்பிரட் துரையப்பா, வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி தம்பையா, இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஆறுமுகம், இந்துக்கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம், 'ராஜா' தியேட்டர் உரிமையாளர் திரு. தியாகராஜா, திருவாளர்கள் ஏ. ஈ. தம்பர், கே. சதாசிவம், ச. அம்பிகைபாகன், எஸ். கே. வேலாயுதபிள்ளை, ஏ. சரவணமுத்து, சி. இரத்தினசபாபதி ஆகியோர் உட்பட இன்னும் பலர் சமுகம் கொடுத்தனர்

(கா. நி)

## நமது நோக்கு

இந்தியக் குடியரசின் புதிய தலைவர் யார்? அங்கு மன்னர் ஆட்சி நடப்பதாயின் இந்தப் பிரச்னையே இராது. மன்னருக்கு அடுத்தபடி பட்டத்து இளவரசர்தான்.

ஆனல் ஜனநாயகக்குடியரசான இந்தியாவிலே, மக்களின் பிரதிநிதிகளே தலைவரைத் தெரிவு செய்யவேண்டியிருக்கும். தேர்தல் என்றதுமே போட்டிகளும் எதிர்ப்புகளும் கிளம்புகின்றன.

நாட்டிலேஎல்லாமக்களின் நம்பிக்கையையும் மதிப்பையும் விசுவாசத்தையும் பெறவேண்டிய தலைவர் பலத்த போட்டி மூலம் தெரிவுசெய்யப்படும்போது, நாட்டின் ஒரு பகுதியினரின் எதிர்ப்பும் கூடவே இருக்குமாதலால் இவ்வித தேர்தல்முறை நல்லதா என்பது முக்கிய கேள்வி.

அமெரிக்க ஜனுதிபதி, பலத்த தேர்தல் போட்டி மூலமே தெரிவுசெய்யப்படுவதால் அவருக்குப் பலத்த போட்டிகளும் எதிர்ப்புகளும் ஆரம்பத்திலேயே கிளம்புகின்றன. கென்னடிபோன்றவர்கள் எதிரிகளால் சுட்டுக்கொல்லவும் படுகிறார்கள். பிரிட்டனிலே மன்னர்கள் வழிவழியாக அப்பதவிக்கு வருவதால், இவ்விதஆபத்து அவர்களுக்கு இல்லாததுடன் எல்லா மக்களுக்கும் அவர் பொதுவானவராகவும் இருக்கமுடிகிறது. இதனல் மன்னரே நாட்டின் ஒற்றுமைக்கும், மரியாதைக்கும் சின்னமாக விளங்கமுடிகிறது. தேர்தல் மூலம் தலைவராகும் ஒருகுடியரசுநாட்டின் தலைவருக்கு இந்த வாய்ப்பு இருக்க முடியுமா?

''மன்னன் கோன்முறை அரசுசெய்க'' என்பதுதான் தமிழரின் பாரம்பரிய பிரார்த்தனை. நாட்டிலே ஒரு தனி மனிதருக்கு மட்டுமல்ல ஒரு மாட்டுக்கும்கூட நீதி வழங்க வேண்டிய பொறுப்பு மன்னனைச் சார்ந்தது. ஆனல் ஜனநாயகமெனும் இன்றைய ஆட்சியிலே பெரும்பான்மையினர் சேர்ந்து என்னசெய்தாலும் கேள்விமுறைஇல்லை. தம்மைத்தெரிவு செய்த பெரும்பான்மையினரின் ஆட்சிக்கு மாருக ஜனுதிபதி ஏதும்செய்வாராயின், அவரே அப்பதவியில் நீடித்திருக்க முடியாதுபோகும்.

இவ்விதம் பார்க்கையில் மன்னரின் ஆட்சி முறையே மேலெனத் தோன்றினும்இக் காலத்தில் அது பிற்போக்கானதென்று கருதப்படுவதுடன், அதைப் பொதுவாக மக்கள் இன்றைய மனநிலையில் வரவேற்கமாட்டார்கள். ஆகவே கூடுமானவரை போட்டியில்லாமல் இப்பெரிய பதவிக்கு தக்கவரைத்தெரிவு செய்வதுதான் பல விதங்களிலும் விரும்பத்தக்கது.

இந்தியாவிலே உபஜனுதிபதியே, தலைவர் பதவிக்கு அடுத்த வார்ஸ் என்ற சம்பிரதாயம் ஏற்பட்டுள்ளதால் திரு. வி. வி. கிரி அவர்களே தலைவராகவும், உப தலைவர் பதவிக்கு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவரே தெரிவு செய்யப்பட வேண்டுமென்றும்சொல்லப்படுகிறது. இது எப்படியாயினும் தேசிய ஒருமைப்பாட்டையும், அமைதியையும், தனி ஒருவரின் நன்மையையும் பாதுகாக்கக்கூடிய முறையில் ஜனுதிபதி பதவி வகிப்பவருக்கு விசேஷ அதிகாரமும் செல்வாக்கும் இருந்தாலே நாட்டுக்கு நன்மை ஏற்படமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் உணர்ச்சி உள்ள இடமெல்லாம் தமிழ்நாடு பரவியிருந்தது

## மரபு, மதம், இலக்கியம் வளர்த்தவன்

**தமிழ் நாட்டின் தலைநகராம் சென்னை மாநகரில் கடந்த ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற 2வது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை ஆரம்பித்து வைத்து இந்திய ஜனாதிபதி டாக்டர் ஸாகிர் ஹுசேன் நிகழ்த்திய உரையின் தொகுப்பு இங்கே தரப்படுகிறது.**

இந்த உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுடன் தொடர்புகொள்வதை ஒரு பேறாக நான் கருதுகிறேன். இந்த மகாநாடு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. அத்துடன் நமது கலாச்சாரத்தின் பலதரப்பட்ட அம்சங்களையும் அதன் ஊடே இழையும் ஒற்றுமையையும் பற்றிய என்னுடைய சொந்த அறிவை ஆழ்ந்ததாக்குவதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டதாக நான் கருதுகிறேன்.

நமது மொழிகளிடையே தமிழ் மாண்புமிக்கதொரு இடத்தை வகிக்கிறது. வடக்கிற்கும் தெற்குக்குமிடையேயுள்ள முக்கிய தொடர்புகளை அது இணைத்திருக்கிறது. நம்முடைய நாட்டிற்கும் வெளியே அது பேசப்படுவதால் தமிழ் ஒரு சர்வதேசமொழியாகவே இருக்கிறது. தென்கிழக்காசியாவில் ஆக்கமுள்ள பரந்த கலாச்சாரத்தின் ஒருகளஞ்சியமாக தமிழ்விளங்குகிறது. மலேயா பல்கலைக்கழகத்தில் மலேஷியா அரசாங்க ஆதரவில் முதலாவது உலக மகாநாடு கோலாலம்பூரில் நடைபெற்றதில் வியப்பில்லை. இந்த மகாநாட்டைத் துவக்கிவைக்கும்படி என்னை அழைத்ததன் மூலம் உண்மையில் நாம்எவ்வாறு ஒருவரையொருவர் சந்தித்திருக்கிறோம் என்பதையும், கலாச்சார ஆன்மீக ஒற்றுமைபற்றிய உண்மையான ஆராய்ச்சி, ஒற்றுமை உணர்வை எவ்வாறு வளர்க்கமுடியும் என்பதையும் மேலும்தீவிரமான முறையிலும் புதிதாகவும் நான் தெரிந்துகொள்ளும்படி அழைத்திருக்கிறீர்கள்.

**தமிழ் நாட்டின் எல்லை**

தமிழ்நாட்டின் எல்லைகள் பழமையானவை. நில எல்லைகளையும் கலாச்சார எல்லைகளையும்தாண்டிச்செல்கின்ற ஒரு பண்பாட்டையும் பெற்றிருந்தது. தமிழ் உணர்ச்சி இருந்த இடமெல்லாம்தமிழ்நாடு பரவியிருந்தது. வடக்கில் இமயத்தையும், கிழக்கிலும் மேற்கிலும் திரைகடல்களையும், அந்தக் கடல்களுக்கு அப்பாலுள்ள நிலங்க

கம்பராமாயணம் ஒரு மாபெரும் காவியமாகும் உலகின் மிகப்புகழ்பெற்ற இலக்கியப் படைப்புகளில் ஒன்றாக இது திகழ்கிறது. அதேபோன்று தற்காலஇலக்கியமும் செழிப்புற்று விளங்குகிறது. கவிஞர்கள் கதாசிரியர்களின் பட்டியலில் சுப்பிரமணிய பாரதியின் பெயர் குறிப்பிடத்தக்கது. நமது நாட்டு விடுதலைப் போராட்டக்கவியான அவர் புதியதொரு சுதந்திரசகாப்தத்தை முன்னமே அறிவிக்கக் கூடிய தீர்க்கதரிசனத்தைப் பெற்றிருந்தார்.

**மரபு, மதம், இலக்கியம்**

தமிழ்மரபு பழமையானது மட்டுமன்றிப் பரந்த உணர்வையும் பெற்றிருந்தது. தமிழ்மரபு எல்லா வகையிலும் சிறப்புற்றிருப்பதால் அதில் எந்த அம்சம் அதி சிறப்பு வாய்ந்தது என்பதைக் கூறுவது கடினம். சமஸ்கிருத மொழிக்குத் தொல்காப்பிய ஆசி

### ஜனாதிபதி டாக்டர் ஸாகிர் ஹுசேன்

ரியர் விஞ்ஞான ரீதியில் இலக்கண அடித்தளத்தை அமைத்திருக்கிறார். ஆனால் தமிழ் சிந்தனையாளர்களும் எழுத்தாளர்களும் தங்களுடைய மொழியை வளம்படுத்தியதும் அதன் சொல்வளம் இனிய பண்புகளைக் கண்டு பிடித்ததோடு இந்திய சமயம், தத்துவம், கவிதை ஆகியவற்றின் மொழியாக விளங்கும் சமஸ்கிருதத்தைப் பயிலுவதன் அவசியத்தையும், அனுகூலத்தையும் உணர்ந்திருந்தார்கள். வேறுமொழிகளை அறிந்து தன்னுடைய அறிவாற்றலைப் பல்வேறு விதங்களில் வெளிக்காட்டுதற்குத் தமிழன் பேரார்வம் கொண்டிருந்தான்.

வில்லை. ஏனெனில் பெயர்களையும் நூல்களையும்பற்றிய நீண்டதொரு பட்டியலைக் கொடுக்கநேரும்.

சமஸ்கிருத இலக்கியத்திற்குத் தமிழர் ஆற்றிய பணியைக்குறிப்பிடுகையில் அது நம்மைச் சமயத்திற்கும்தத்துவத்திற்கும் கொண்டுபோய்ச் சேர்க்கும். தமிழரின்பரந்த உணர்ச்சி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. சைவம், வைஷ்ணவம், பக்தி ஆகியவற்றின் மூலமும், த்வைதம், அத்வைதம் முதலிய தத்துவங்களின் மூலமும் தமிழர்கள் ஹிந்துமதத்தை வளம்படுத்தியிருக்கிறார்கள். அதுமட்டுமன்றி அதற்கப்பாலும் பல பணிகளையும் ஆற்றியிருக்கிறார்கள். குந்தஞசாரியார் தெற்கில் சமணத்திற்கு அடித்தளம் அமைத்தார். அதோடு சமணசமயத்தின் ஆசிரியராக விளங்குகிறார். விக்ஞன வாதா பௌத்த மதத்தை திக்னவாகவும்

அவருடைய சீடர் தம்மவாலரும் தெற்கில் நிலைநாட்டினார்கள். அவர்கள் நாளந்தாவில் போதித்து வளர்த்தவர்களாயினும், காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர்கள். சென்புத்த சமயத்தின் தந்தையாக விளங்கும் போதிதர்மர் இந்தப் பண்டைய நகரத்தைச் சார்ந்தவர். இஸ்லாமிய மதத்தைப் பரப்பியவர்களும் இல்லாமலில்லை. தமிழ்ப் புலவரான உமர், ஐயாயிரம் பாடல்களில் சீருபுராணம் என்னும் நூலை எழுதியிருக்கிறார். ஸ்தாபனங்களைத் தோற்றுவிப்பதில் தமிழர் ஒரு தனிச்சிறப்பைத் தோற்றுவித்திருக்கிறார்கள் சுகாதார அமைப்புக்களைப்பற்றிஇங்கு

விப்பதில் ஆலயம் ஒரு மத்திய கேந்திரமாக விளங்கி வந்தது. மக்கள் தொகை அதிகமுள்ள பட்டணங்களில் இவ்வசதிகளை ஆலயம் அதிகமாக அளித்தது.

'கடிகா' அல்லது பல்கலைக்கழகம் பெருமதிப்புடன் விளங்கியதுமட்டுமன்றி, அரசியல்துறையில் செல்வாக்குப் பெற்றிருந்ததாகவும் நாம் அறிகிறோம். உதாரணமாக அரசவாரிசு இல்லாமல் இருந்தபோது இரண்டாவது நந்திவர்மனை ஆட்சிபீடத்திலமர்த்துவதில் காஞ்சிபுரத்திலிருந்த பல்கலைக்கழகம் முக்கியபங்கு ஆற்றியது. மதம், சரித்திரம் ஆகியவற்றை நேரடியாகப் போதிக்கும் ஒரு ஸ்தாபனமாகவும் ஆலயம் இருந்தது. காஞ்சிபுரத்தில் வைகுந்தநாத பெருமாள் கோவிலில் உள்ள சிற்பங்கள்,' பல்லவ மன்னர்களின் சரித்திரத்தைத் தெளிவுடன் விளக்குகின்றன என்பதையும் தஞ்சாவூரில் ராஜராஜேஸ்வர ஆலயத்திலுள்ள ஓவியங்கள், புகழ்பெற்ற ராஜ ராஜனின் சாதனைகளைச் சித்திரிக்கின்றன என்பதையும்நீங்கள் அறிவீர்கள்.

பலவகைப்பட்டதும் மிக்க சிறப்புகளுடன் கூடியதுமான கருத்தை ஈர்க்கும் தமிழர்களின் படைப்புகளைப்பற்றி விசேஷ நிபுணத்துவம் பெற்றிராத நான் கூட ஒரு சமயம் பேசிக் களித்துக் காலத்தையே மறந்திருக்க முடிகிறது.

சங்ககால இலக்கியத்தில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற அழகான பாடல் ஒன்று வருகிறது. இப்பாடலில் 'ஊர்' என்பதைக் கவனியுங்கள். என் இச்[illegible]ப்படி வாழக்கூடிய வீடு[illegible]ல்ல உலகம்; என் கடவுளுக்கு உரியதாக இருக்க வேண்டும். உலகம் எனக்குச் சொந்தமில்லை. உலகம் என்[illegible] இருப்பதற்கும் ஒவ்வொரு

# தமிழ்ப் பண்டிதராகவும் ஆங்கில ஆசிரியராகவும் 16 வயது நாவலர்

## வேதாகமங்களையும் சைவசித்தாந்தங்களையும் கற்றுத் தேறினார்

பார்சிவல் துரை மகனார் நாவலர் பெருமானின் ஒழுக்கத்தையும், கல்வித்திறமையையும் அதிநூதன விவேகத்தைக்கண்டு மெச்சினார், வியந்தார். அத்துடனில்லாமல் நாவலர் பெருமானைக் கீழ்வகுப்புகளுக்கு ஆங்கிலமும், மேல் வகுப்புகளுக்குத் தமிழும் கற்பிக்க அமர்த்திக்கொண்டதுடன் தமக்குத் தமிழ்ப்பண்டிதராயும் அமர்த்திக்கொண்டார். பதினாறு வயதில் இந்த மூன்று பதவிகளையும் தாங்கிச்செய்தவர் இந்த நிலவுலகில் அன்றும் கிடையாது. இன்றும் கிடையாது. நாவலர் பெருமான் விபூதி உருத்திராக்கம் அணிபவர். சைவப்பழம், சைவசீலம், சைவஒழுக்கம் தவறாதவர். சைவர்களைக்

### ஐந்தாங்குரவர் ஆறுமுகநாவலர்

கிறிஸ்தவராக மாற்றவந்த ஆங்கிலத்துரை மகனை பீற்றர்பார்சிவல் துணிந்து இத்தகைய நாவலர் பெருமானுக்கு இப்பதவிகளை அளித்துப் பெயர்பெற்றார். இச்சம்பவம் நாவலர் பெருமானின் ஒப்பற்ற வாழ்க்கையில் அதிமுக்கியமான ஒன்று. கலாநிதி பீற்றர் பார்சிவல்துரை மகனுக்கும் நாவலர்பெருமானுக்குமிடையில் அன்பும் நன்மதிப்பும் வளர்ந்துவந்தது. துரைமகனார் விவிலியமென்னும் பைபிளைத் தமிழ்மொழியில் பெயர்க்கத் தொடங்கினார். ஆங்கிலமொழியைத் தமிழாக்கம் செய்வதற்கும் தமிழ்மொழியை ஆங்கிலத்தில் பெயர்ப்பதற்கும் நாவலர் பெருமானுக்கு ஒப்பாரெவரும் கிடையாதென்று துரைமகனார் கண்டார். கண்டு அவரைத் தனது [illegible]டுக்கு உதவியாகச் சேர்த்துக் கொண்டார் இது இறைவன் திருவருளென்றுசொல்லவும் வேண்டுமா? விவிலிய நூல்கள் பலவற்றைப்ப[illegible]க்க பெருமானுக்குச் ச[illegible]ம் வாய்த்தது. கிறிஸ்து

பரப்புவதற்கு எடுத்துக்கொள்ளும் வழிவகைகளைக் கூர்ந்துகவனித்தார். அவர்கள் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்தார்கள். பள்ளிக்கூடங்களுக்குப் பக்கத்தே தங்கள் கோவில்களைக்கட்டினார்கள். சிறுவர்களுக்கேற்ற அழகான சிறுநூல்களை வெளியிட்டார்கள். உபதேசிமார்களைக் கிராமங்கள்தோறும் அனுப்பித் தங்கள்சுவிசேஷத்தைப் பரப்பினார்கள். மருத்துவசாலைகளை ஸ்தாபித்து நோயாளர்களுக்கு வைத்தியம் செய்வித்தார்கள். அச்சுக்கூடங்கள் ஸ்தாபித்துப் பத்திரிகைகளை வெளியிட்டார்கள். மக்களுக்கு வேலைவாய்ப்புகள் அளித்தார்கள். கன்னியர்களுக்குக் கல்யாணத்திற்கு உதவினார்கள். இவற்றின் மூலம் தங்கள் சமயத்தைத் தெரிந்திராத, வறுமையுற்ற, சைவர்கள் மதம்மாறினார்கள். இதனால் நாம் மிஷனரிமார்களைக் குறைசொல்லலாமா?

கிறிஸ்துநாதர் இவ்வுலகத்தை நீத்தபொழுது, தமது சீடர்களுக்கிட்ட கட்டளை, 'எனது உபதேசத்தை உலகமெல்லாம் பரப்புங்கள்' என்பதே. அதைத்தான் பாதிரிமார்கள் ஆறாயிரம் கல் தொலைவிலிருந்து இங்கு வந்து செய்தார்கள். இது குற்றமில்லை. குற்றம் யாவும் நம்முடையதே. கிறிஸ்துமதம் ரோமர்களால் ஆங்கில நாட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கப்படுவதற்கு முன் ஆங்கிலேயர் மெத்தக் கீழ் நிலையிலிருந்தார்கள். மதஞானம் சிறிதுமில்லாதிருந்தனர். குருவிச்சையைத் தெய்வமென வணங்கினார்கள்.

ஈழத்துக்கு வந்த பாதிரிமார்களுக்கு இருக்கு, யசுர், சாம, அதர்வண வேதங்கள் நான்கும் தெரியுமா? உபநிடதங்கள் தெரியுமா? வேதாகமங்கள் முக்கியமாக சிவாகமங்கள் தெரியுமா? சிவஞானபோதம் தெரியுமா? சிவஞானசித்தியாரையும், பன்னிரு திருமுறைகளையும் தெரியுமா? சைவசித்தாந்தம் தெரியுமா? தெரியவே தெரியாது. எம்

### அறநெறிக் காவலர்

### முதலியார் செ. முத்துத்தம்பி

மவரில் சிலருக்குச் சைவமும் தமிழும் தெரியும். ஆனால் அவர்கள் அதைத் தங்களுக்குள்ளே வைத்துக் கொண்டார்கள். மன்பதையிடம் அஞ்ஞானமும் வறுமையும் குடிகொண்டிருந்தன. கிறிஸ்து மதத்தைப் பரப்புவதற்கு இதனிலும் பார்க்க ஒரு சிறந்த தருணம் பாதிரிமாருக்கு வாய்க்குமா?

இந்த அவல நிலைமைக் கிடையில் நாவலர்பெருமான் சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கையும் மற்றவர் உதவியின்றிக் கற்றார். வடகடல் தென்கடல் நிலைகண்ட சிவஞான சுவாமிகள்கூட வடமொழி உதவி பெற்றுத்தான் கற்றார். ஐந்தாம் குரவர்வடமொழியை யாருடைய உதவியுமின்றிக் கற்று சைவசிவாகமங்களை ஐயந்திரிபறத் தெளிந்தார். தேவார திருவாசகங்களைக் கற்றார், பெரியபுராணத்தைப் படித்தார். கந்தபுராணத்தையும், திருவிளையாடற்புராணத்தையும் கற்றுத்தெளிந்தார். சைவசித்தாந்த சண்டமாருதமானார்.

ஐந்தாம் குரவர் கிறிஸ்து மதத்தைத் துருவித் துருவி ஆராய்ந்தார். இரு சமயத்திலும் தமக்கு யாருமொப்பில்லாமல் உயர்ந்து நின்றார். வடமொழி, தென்மொழி, ஆங்கிலமொழி மூன்றிலும் பாண்டித்தியமுடையவராக விளங்கினார். சைவ ஒழுக்கமும், சைவசீலமும் நிறைந்து வாழ்ந்தார். சைவத்திற்காகத் தமிழுக்காகத் தம்மைத் தியாகம் பண்ணத் துணிவு கொண்டார்.

பெருமான் மேற்கொண்டிருந்த பைபிள் மொழிபெயர்ப்பு முடிவடைந்தது. சென்னையிலும் ஒருமொழிபெயர்ப்பு முடிவடைந்தது. இவற்றில் எதை ஏற்பது எதைத் தள்ளுவது என்பதே கேள்வி.

(தொடரும்)

# இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தரும் கேதார கௌரி விரதம்

ஆணும் பெண்ணும் ஐம்பதுக்கு ஐம்பது சமம் என்பது கேதாரகௌரிவிரதத்தத்துவம். 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே' என்றான் அமரகவி பாரதி.

பெறக்கூடிய பயனும் சைவசமயிகள் யாவரும் அறிந்திருப்பது மிக அவசியமாகும். சிவராத்திரி விரதம் சைவ உலகில் பரந்து அநுட்டிக்கப்படுவது போல, கேதாரகௌரி விரதமும் சைவசமயிகளால் அநுட்டிக்கப்பட

கேதாரகௌரி நோன்பு என்பது அன்னை பார்வதி கௌரி என்ற திருப்பெயருடன் திருக்கேதாரத்தில் எழுந்தருளியிருந்து சிவலிங்கம் ஸ்தாபித்து பூஜை செய்து தவமியற்றிச் சிவபெருமானை விட்டுப் பிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு பரவியிருந்தது. வடக்கில் இமயத்தையும், கிழக்கிலும் மேற்கிலும் திரை கடல்களையும், அந்தக் கடல்களுக்கு அப்பாலுள்ள நிலங்களையும் அது கண்டது. தமிழர்கள் அரேபியா, எகிப்து, ரோமாபுரி ஆகியவைகளுடன் வர்த்தகம் நடத்தினார்கள். வலிவை மிக்க வர்த்தக சங்கங்களின் பெயர்கள் உலகம் முழுவதும் வியாபித்திருந்தன. மதிப்பரிய வர்த்தகப் பண்டங்களுடன் கப்பல்கள் தங்கிய பல்லவர்களின் மாமல்லபுரம் துறைமுகத்தைப் பற்றிய வர்ணனை ஆழ்வார்களின் பாடல்களில் காணப்படுகின்றது. தமிழ் நாட்டிற்கும் தென் கிழக்காசிய நாடுகளுக்குமிடையே செழிப்பான வர்த்தகம் நடைபெற்றது பற்றி சுமத்ராவில் கண்டெடுக்கப்பட்ட 11-வது நூற்றாண்டுத் தமிழ்க்கல்வெட்டுகளிலிருந்து தெரிகிறது. தமிழ்மன்னர்களின் கடற்படை இந்து மகாசமுத்திரத்தை ஆண்டுவந்தது. புகழ்பெற்ற கடற்படையைப் பெற்றிருந்த ராஜேந்திர சோழன் சீனப்பேரரசுடன் ராஜீயவர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தான். மேற்றிசை நாடுகளுடன் வர்த்தகத்தொடர்பு கொள்வதற்காகப் பல நூற்றாண்டுகளுக்கு முன் பாண்டிய மன்னன் ஒருவன் ஆகஸ்தஸ் என்னும் ரோமாபுரிப் பேரரசனுக்குத் தூதுவர் ஒருவரை அனுப்பியிருக்கிறான். ஆனால் அதேசமயத்தில் கற்புத் தெய்வத்துக்கு ஒரு கோவில் கட்டுவதற்காகச் சேரமன்னன் ஒருவன் இமயமலையிலிருந்து கல் கொணர்ந்து கங்கையில் நீராட்டி அத்தெய்வத்திற்குச் சிலை அமைத்த வரலாற்றையும் நாம் அறிவோம்.

தமிழ்மொழி பண்பாட்டைப்பற்றி இங்கு குழுமியுள்ள பேரறிஞர்களைவிட அதிகமாக நான் கூறமுடியாது. எல்லோருக்கும் தெரிந்தவற்றை மீண்டும் கூறினால் அது ஒருமாபெரும் மரபுக்குச் செலுத்தும் அஞ்சலிதான். இந்த மரபுசுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உலகின் மிகப் பழமையான இலக்கிய அவை எனக் கருதப்படும் சங்க இலக்கியத்திலிருந்து ஆரம்பமாகிறது.

**பல நூற்றாண்டு கால வளர்ச்சி**

செழித்த பண்பட்ட இந்த இலக்கியம் பல நூற்றாண்டுகளாய் ஏற்பட்ட வளர்ச்சியைக் காட்டுகிறது. உலக அறிவின் புனிதக்களஞ்சியமாக விளங்குகிறது குறள். வான்மீகியின் கதையை [illegible]ாகக் கொண்ட

...றிந்து தன்னுடைய அறிவாற்றலைப் பல்வேறு விதங்களில் வெளிக்காட்டுதற்குத் தமிழன் பேரார்வம் கொண்டிருந்தான்.

**சமஸ்கிருதத்திற்கு தமிழர் பணி**

ஆழ்வார்களில் ஒருவரான குலசேகரப்பெருமான் திருமொழியின் ஆசிரியர் என்ற முறையில் தமிழ் இலக்கியத்தில் உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கிறார். அவருடைய முகுந்தமாலா சமஸ்கிருத இலக்கியத்தில் சிறந்ததொரு படைப்பாக விளங்குகிறது. ராமானுஜர், ஆண்டாளின் பக்திப்பெருக்கையும் நம்மாழ்வாரின் ஆன்ம தத்துவத்தையும் சமஸ்கிருதத்தில் விபரித்திருக்கிறார். சமஸ்கிருத இலக்கியத்திற்குத் தமிழர் ஆற்றியுள்ள பணிபற்றி மேலும் விபரித்துக்கூற நான் விரும்ப

ஸ்தாபனங்களைத் தோற்றுவிப்பதில் தமிழர் ஒரு தனிச்சிறப்பைத் தோற்றுவித்திருக்கிறார்கள் சுகாதார அமைப்புக்களைப்பற்றி இங்கு நாம் குறிப்பிடவில்லை. உயர் கல்விக்கான பல பள்ளிகளும் ஸ்தாபனங்களும் இங்கு இருந்தனவென்று தமிழ் நாட்டில் பல இடங்களிலுள்ள கல்வெட்டுகள் மூலம் நாம் அறிகிறோம். ஆலயம் இல்லாக்கிராமத்தில் குடியிருக்கக்கூடாது. ஏனெனில் ஆலயம் பூஜைக்குரிய இடம் மட்டுமன்றி, அது கல்விப் போதனைக்கான இடமுமாகும். இவ்விதம் தமிழர்களின் அறிவு மூதாட்டியான ஔவையார் கூறியிருக்கிறார். இலக்கியம், கலை, மதம், சமூக உறவுகள் முதலிய கலாச்சார வாழ்க்கைக்கான அநேகமாக எல்லா அம்சங்களையும் உருவாக்கி ஊக்கு

வேண்டும். உலகம் எனக்குச் சொந்தமில்லை. உலகம் என்[illegible]து ஊர். அங்கு வேலை செ[illegible]தற்கும் களிப்புடன் இருப்பதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. அங்கு எல்லா உறவுகளிலும் நேசத்தன்மை பொலிகிறது. அறநெறியுடன் கூடிய அழகான வாழ்க்கைக்கு அடிப்படையாக விளங்கும் இந்த நற்பண்புகளைத் திருக்குறள் போற்றியிருக்கிறது.

'ஒறுத்தார்க்கு
ஒருநாள் இன்பம்
பொறுத்தார்க்குப்
பொன்றும் துணை'

'உண்ணாது நோற்பார்
பெரியர் பிறசொல்லும்
இன்னாச்சொல்
நோற்பாரின் பின்'

'அறிவினுள் எல்லாம்
தலைஎன்பதீய
செறுவார்க்கும்
செய்யாவிடல்'

... இது இறைவன் திருவருளென்று சொல்லவும் வேண்டுமா? விவிலிய நூல்கள் பலவற்றைப்படிக்க பெருமானுக்குச் ச[illegible]ம் வாய்த்தது. கிறிஸ்து மதத்தை அவரறிந்தது போல வேறொருவர் தெரிந்திருக்கமாட்டார். இது அவர் கையில் அசைக்க முடியாத பெரிய படைக்கலமாயிருந்தது.

பெருமான், மிஷனரிமார் தங்கள் கிறிஸ்துமதத்தைப்

---

## 'ராதாகிருஷ்ணன்' வளர்த்த

# ஹூசேன்

சென்னையில் நடந்த இரண்டாவது உலக தமிழ் மகாநாட்டை ஆரம்பித்து வைத்து பாரத ஜனாதிபதி டாக்டர் சாகிர் ஹுசேன் 'வணக்கம்' என்று தமிழில் கூறியபோது மக்கள் ஆனந்தத்தில் ஆரவாரம் செய்தார்கள். அவர் தமது பேருரையில் பாரதியையும் சிலப்பதிகாரத்தையும் திருமுருகாற்றுப்படையையும் எடுத்துக்காட்டி தமிழின்சிறப்பை விளக்கியபோது மக்கள் மூக்கில் விரல்வைத்து வியப்பில் ஆழ்ந்தனர்.

காலஞ்சென்ற டாக்டர் ஹுசேன் பாரதப் பண்பாட்டின் சிகரமாக விளங்கினார். அறிவின் ஒளி அவரது அகத்திலும் முகத்திலும் பிரகாசித்தது. வங்கத்து கவிதாகூர், மௌலானா அபுல் கலாம் ஆஸாத், டாக்டர் ராதாகிருஷ்ணன், டாக்டர் சி. பி. ராமஸ்வாமி ஐயர் முதலிய பெருந்தகைகளுடன் அவரும் ஓர் ஒப்புயர்வற்ற கல்விமானாகத் துலங்கினார். ஆழ்ந்த அறிவினால் ஏற்படும் அடக்கமும் அமைதியும் எளிமையும் அவரை அலங்கரித்தன.

இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் வசிக்கும் 'அப்ரிடி' மலைவாசிகளின் பரம்பரையில் வந்த ஹுசேன் 1897-ம் ஆண்டு பெப்ரவரி 8 ம் திகதி

ஹைதராபாத்தில் உத்தியோகம் பார்த்த ஒரு நியாயவாதியின் மகனாகப் பிறந்தார். உயர் நிலைக் கல்வியை முடித்துக்கொண்டு அலிகார் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியானார். மருத்துவ டாக்டராக விரும்பிய ஹுசேன் கடைசியில் அந்த ஆசையை நிறைவேற்றாமலேயே வேறு துறையில் டாக்டர் என்ற கலாநிதிப்பட்டத்தைப்பெற்றார்.

அவருக்கு அரசியல்துறையில் அதிகம் ஈடுபாடு இல்லாவிட்டாலும் மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் அவர் மனதைக் கவர்ந்தது. காந்திஜியின்

வி. என். பி.

கல்விக் கொள்கைகளை நிறைவேற்றும்பொருட்டு அவர் ஜாமியா மில்லியா என்ற கல்வி நிலையத்தை ஆரம்பித்து பின்னர் அது பல்கலைக்கழகமானதும் அதன் துணை வேந்தரானார்.

தமது 29 வது வயதிலேயே இப்பெரும் பதவியை வகித்த டாக்டர் ஹுசேன் 22 வருடங்கள் அதில் கடமையாற்றிவிட்டு, நேருவும் மௌலானா ஆஸாத்தும் கேட்டுக்கொண்டதற்கிணங்க அலிகார் பல்கலைக்கழகத்தின் பொறுப்பை மேற்கொண்டார். இதன் துணை

வேந்தராக எட்டு வருடங்கள் கடமையாற்றினார்.

1957-ம் ஆண்டு ஜுலை மாதம் 6-ம் திகதி அவர் பீகார் மாகாணத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டு ஐந்து வருட சேவை முடிந்ததும் 1962-ம் ஆண்டு மே மாதம் 13 ம் திகதி பாரதத்தின் உப ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த கல்விமானாக விளங்கிய டாக்டர் ஹுசேன் டாக்டர் ராதாகிருஷ்ணனின் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்கழக கல்வி கொமிஷனில் அங்கத்தவராகவும், இந்துஸ்தானி தலாமி சங்கத்தின் தலைவராகவும். ஐக்கிய நாட்டு கல்வி கலாச்சார ஸ்தாபனத்தின் நிர்வாக குழு அங்கத்தவராகவும், பத்திரிகைக் கொமிஷன் அங்கத்தவராகவும் கடமை செய்து பாரத பூமியின் கல்வித் துறைக்கு அரிய பெரிய பணிகள் புரிந்தார்.

1937-ம் ஆண்டில் காந்திஜி தமது அடிப்படை கல்வித் திட்டத்தை ஆரம்பித்தபோது அடிப்படை கல்வித் திட்ட தேசிய கமிட்டியின் தலைவராக டாக்டர் ஹுசேனையே தேர்ந்தெடுத்தார். மக்களுடைய கல்வி புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டதல்ல, தொழிலையே அடிப்படையாகக் கொண்டது. இதுவே காந்தி

ஜியின் திட்டத்தின் கொள்கை.

இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்த மனிதர் ஒரு முறை டில்லி நகரசபைக்கு போட்டியிட்டு வெற்றிபெற முடியாமல் போய்விட்டது. அவர் சமர்ப்பித்த நியமனப் பத்திரத்தில் ஏதோ தவறு நிகழ்ந்துவிட்டது. பின்னர் காங்கிரஸ் கட்சி அவரை நாடாளுமன்ற தேர்தலுக்கு அபேட்சகராக நிறுத்தியது. ஆனால் வாக்காளர் பட்டியலில் அவருடைய பெயரைக் காணவில்லை. அதற்குப் பிறகு அவர் ராஜ்ய சபைக்கு நியமனம் செய்யப்பட்டார்.

டாக்டர் ஹுசேனுக்குஇவ்வுலகில் இரண்டு பெரிய பற்றுக்கள் இருந்தன. ஒன்று புத்தகங்கள்; மற்றது புஷ்பங்கள்.

அவருடைய இல்லத்தில் ஒரு பெரும் நூல்நிலையமே இருந்தது. ஓய்வு கிடைக்கும் நேரங்களில் புத்தகம் வாசிப்பதே அவருடைய பொழுதுபோக்கு. குழந்தைகளுக்கென்று அவர் பல நூல்களை புனைபெயர்களில் எழுதியுள்ளார். அவரது படைப்புகளில் மிகவும் பிரபல்யமானது, பிளேட்டோ எழுதிய 'குடியரசி'ன் உருது மொழிபெயர்ப்பாகும். 'நல்லதை தெரிந்தும் தீயதில் திருப்தியடைவதே பாபம்' என்பது அவருக்குப் பிடித்த ஒரு சுலோகம்.

அவர் உண்டுபண்ணிய ஜாமியா மில்லியா இஸ்லாமிய பல்கலைக் கழகத்திலும் பின்னர் ராஷ்டிரபதி பவனத்திலும் ரோஜா மலர்களை வளர்ப்பதில் அவருக்கு அசாத்தியமான பிரியம். நேருவைப்போல அவருக்கும் ரோஜாவில் ஆசை. தமது தோட்டத்தில் எத்தனையோ வகையான ரோஜாச் செடிகளை வளர்த்தார். அவற்றில் ஒன்றுக்கு 'ராதாகிருஷ்ணன்' என்று பெயருமிட்டார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் டாக்டர் ஹுசேனை ஜனாதிபதி பதவிக்கு வளர்த்தெடுத்தார். டாக்டர் ஹுசேன் 'ராதாகிருஷ்ணனை' வளர்த்தார்.

---

## ஈழத்துச் சைவர்களுக்கு
# திருக்கேதீஸ்வரம் வழிகாட்டவேண்டும்

— க. வை. ஆத்மநாதசர்மா —

மாசந்தோறும் அநுட்டிக்கும்படி அமைத்து வைத்த விரதங்களினால், மறுமையில் நாம் அடையக்கூடிய பலன்களிலும் பார்க்க இம்மையில் கிடைக்கும் பலன்கள் அளவிடமுடியாதன. வேதாகம சாஸ்திரங்கள் புராண இதிகாசங்கள் கூறுவனவற்றில் நம்பிக்கை கொள்ளாமலும், விரத அநுட்டானங்களை முறைப்படி கடைப்பிடியாமலும் நாம் மனம் போன போக்கில் வாழத்தலைப்பட்டமையாலேயே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் புகுத்தப்பட வேண்டியிருக்கிறது. புதிய புதிய நோய்கள் எம்மைப் பீடித்து வருத்துகின்றன இவற்றிலிருந்து எம்மை விடுவித்து எமது வாழ்வைச் சீராக்க வேண்டுமாயின் முதலில் சமயத்துறையில் நாம் நம்பிக்கை கொள்ளவேண்டும். சமயத்துறையில் முதலிடம் பெறுவன விரத அநுட்டானங்கள். சைவசமயிகளாகிய நாம், இருபதாம் நூற்றாண்டிலும் சமயவாழ்வை ஓரளவாவது கடைப்பிடிக்கிறோம் என்றால், அது எமது அன்னையர் குலத்தினாலேயே என்பது மிகையாகாது.

ஆடவரும் மகளிரும் ஒருமனப்பட்டு அநுட்டிக்க வேண்டியவிரதம் கேதார கௌரிவிரதமாகும். இந்த விரதம் பற்றிய வரலாறும், அதனை அநுட்டிக்கவேண்டிய முறைமையும், அதனால்

...பதுக்கு ஐம்பது சமம் என்பது கேதாரகௌரிவிரதத்துவம்.' ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே' என்றான் அமரகவி பாரதி. 'ஆண்கள் செய்யும் எல்லாச் செயல்களையும் பெண்கள் செய்துவிடமுடியாது. ஆண்கள் எப்போதும் ஆண்களே. பெண்கள் எப்போதும்பெண்களே. ஆனால் ஆண் இல்லாமல் பெண் இல்லை. பெண் இல்லாமல் ஆணில்லை. ஆகவே தான் ஆண்களிலும் பார்க்கப் பெண்களை ஒருபோதும் குறைத்து மதித்தல் ஆகாது' என்பதே பாரதியார் கூற்றின் தெளிந்த பொருளாகும்

சைவசமய விரத அநுட்டானங்களில் எத்தனையோ உண்மைகள் பொதியப்பட்டிருக்கின்றன. இயன்றவரையில் அவற்றைஅறிந்து அநுக்கிக் கடைப்பிடிப்போமாயின் எமது வாழ்வில் நேரும் எத்தனையோ சிக்கல்களை மிக இலகுவாகத் தீர்த்துக் கொள்ளலாம். தீர்க்கதரிசிகளான எமது முன்னோர்

...ருப்பது மிக அவசியமாகும். சிவராத்திரி விரதம் சைவ உலகில் பரந்து அநுட்டிக்கப்படுவது போல, கேதார கௌரி விரதமும் சைவசமயிகளால் அநுட்டிக்கப்பட வேண்டியது. இதனைச்சைவ சமயிகளிடையே பரப்ப வேண்டுமாயின் இவ்விரதச் சிறப்பு வழிபாடு சிவாலயங்கள் தோறும் கொண்டாடப்படவேண்டும் எமது ஈழத் திருநாட்டில் இந்த விரதத்தின் பெருமையைக்காட்டித் தொடக்கவேண்டிய உரிமை கௌரியன்னை பாகர் கேதீசுவரநாதர் எழுந்தருளியிருக்கும் கேதீசுவரத்துக்கே உரியது.

திருக்கேதாரம், திருக்கேதீசுவரம் என்னும் இரு திருப்பெயர்களும் தமிழிலே ஏறக்குறைய ஒன்றுபோல ஒலிககப்படினும் சொற்பொருளில் பேதம் இருக்கிறது. இரு பெயர்களையும் வட, மொழியில் உச்சரித்தால் ஒலிபேதம் உணரப்படும். திருக்கேதாரமும் திருக்கேதீசுவரமும் இருசிவ ஸ்தலங்கள். இரு ஸ்தலங்களும் ஆளுடைய பிள்ளையார், ஆலாலசுந்தரர் என்னும் இரு சமய குரவர்களாலும் தேவாரம் பாடப்பெற்றவை. இரு தலங்களிலுமெழுந்தருளியுள்ள அம்பிகையின் திருப்பெயர் கௌரியம்பிகை. இவையே ஒற்றுமைகள். இனி இரு தலங்களுக்கும் உள்ள வேற்றுமைகளாவன:- திருக்கேதாரம் வட இந்தியாவில் இமாலயத்தை அடுத்த மலைச்சிகரம் ஒன்றில் உள்ள சிவஸ்தலம். திருக்கேதீசுவரமோ ஈழத்திருநாட்டின் வடபாகத்தில் மன்னாருக்குச் சமீபமாக மாதோட்ட நகரம் எனப்படும் மாந்தையில் உள்ள சிவஸ்தலம் திருக்கேதாரத்தில் கோவில் கொண்டு சிவலிங்கவடிவாக எழுந்தருளிய சிவபிரானது திருப்பெயர் கேதாதீசுவரர் என்பது. திருக்கேதீசுவரத்தில் கோவில் கொண்டு எழுந்தருளிய சிவபிரானது திருப்பெயர் கேதீசுவரர் என்பது. (கே- சிரசில், தாரம்- மனைவி) சிரசில் கங்கையை மனையாளாகத் தரித்தவர் கேதாரீசுவரர். நவக்கிரகங்களுள் ஒன்றாகிய கேதுவினாலே பூஜிக்கப்பெற்றவர் கேதீசுவரர்.

கௌரி என்ற திருப்பெயருடன் திருக்கேதாரத்தில் எழுந்தருளியிருந்து சிவலிங்கம் ஸ்தாபித்து பூஜை செய்து தவமியற்றிச் சிவபெருமானை விட்டுப் பிரியாமல் அப் பெருமானது இடப்பாகத்தைப் பெற்ற சிறந்த விரதமாகும். இந்த விரதத்தை மக்கள் அனுட்டிப்பதனால் இவ்வுலகத்தில் சிறப்பாக வாழ்வர். மறுமையில் இறைவன் திருவடி நீழலை அடைவதாகிய பெரும்பேற்றையும் பெறுவர்.

இதுபற்றிய புராண வரலாறு- திருக்கைலாசத்தில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் கைலாசபதியை ஒருமுறை வணங்கச் சென்ற பிருங்கி என்னும் முனிவர் இறைவனை மாத்திரம் வலமாகச் சுற்றி வந்து வணங்கியபின் பார்வதியாரை வணங்காமல் மீண்டார். அதனைக் கண்ட பார்வதியார் சிறிது சினந்து பிருங்கி முனிவன் செய்த பிரிவுச் செயலின் காரணத்தைச் சிவபிரானிடம் கேட்டார். பிருங்கி முனிவன் உலகபோகத்தை விரும்பாது மோட்சத்தையே விரும்புவோனாதலால், உன்னைப் பிரித்துவிட்டு எம்மை மாத்திரம் வணங்கினான் எனக்கூறியருளினார். அதனைக் கேட்ட தேவி வெகுண்டு முனிவனை விளித்து, பிருங்கியே, உனது உடம்பிலுள்ள இரத்தம், தசையெல்லாம் சத்தியம்சம்; ஆதலின் அவற்றைத் திருப்பிக்கொடு' எனக் கட்டளையிட்டார். முனிவன் அப்படியே தனது உடலை உதறி இரத்தம், மாமிசம் என்பவற்றை இழந்தான். அதனால் முனிவன் எழுந்து நிற்கத்தானும் வலிமையில்லாது வருந்தினான். இறைவன் கருணை கூர்ந்து முனிவனுக்கு ஒரு ஊன்றுகோலை அருள அதன் உதவி கொண்டு பிருங்கி தனது ஆச்சிரமத்தை அடைந்தான்.

அன்னை பார்வதியார் இந்த அவமதிப்பை நீக்க வேண்டுமெனத் திருவுளங்கொண்டு கைலாசத்தை விட்டு நீங்கி, கர்மபூமியாகிய இப் பூவுலகிலே கௌதமமுனிவரது ஆச்சிரமத்தின் அருகிலே அம்முனி

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஒற்றன் உள்ளம் உருகியது

—கவியோகி சுத்தானந்த பாரதியார்—

ஜெர்மனி பசுந்திருநாடு; கலையின் து[illegible]மகாலு; கெத்தே வாழ்ந்த ஃப்ராங்க்ஃபோர்டு, காந்தே வாழ்ந்த கோனிங்ஸ்பெர்கு, மொஜார்டு வாழ்ந்தடிரெஸ்டன், ஐன்ஸ்டன் விளங்கிய பெர்லின். ஃபிரடரிக் மன்னனின் மௌனமாளிகை விளங்கும் போட்ஸ்டாம்- இவையெல்லாம் கண்கொள்ளாக்காட்சிகள். இந்தக் கலைத்திரு நகரங்களையெல்லாம் பார்த்துவிட்டு நான் கிழக்கு பெர்லினில் ஸ்ப்ரே நதிககரையில் உள்ள மாபெரும் ஓட்டலில் தங்கினேன். அதன் பெயர் ஜோனஷேஃப். அந்த ஓட்டல் முதலாளி ஷாமாஷ் ஒரு யூதர். இட்லர் அவரைக் கொல்லப்பார்த்தான். அவர் மாஸ்கோவுக்குத் தப்பிப் பிழைத்தார். இட்லர் அவர் ஓட்டலைக் கொள்ளையடித்து இடிக்கப்புகுந்தான். அதற்குள் அவன் உயிரையே காலன் கொள்ளையடித்தான்.

0 0 0

கிழக்கு பெர்லின் ரஷ்ய மண்டலம்; மேற்குபெர்லின் அமெரிக்கமண்டலம். இரண்டிற்கும் நடுவே இரும்பு வேலி உயரமாகப் போட்டிருக்கிறார்கள். இங்கே ரொட்டி மலிவு; அங்கே துணி மலிவு. கிழக்கு பெர்லின்காரர் மேற்குபெர்லினுக்கு துணிவாங்க வருவதுண்டு. மேற்குபெர்லின்காரர் கிழக்கு பெர்லினில் ரொட்டியும வெண்ணெயும் வாங்க வருவதுண்டு. இவர்களை + குறுகுறுவென்று கண்காணிக்க ஒற்றர் சுற்றிக்கொண்டிருப்பார்கள். ஆள் பிடிபட்டால் சிறையில்வாட வேண்டும் அல்லது செத்து மடியவேண்டும்.

0 0 0

இந்த ஒற்றர் இரக்கமற்ற இரும்புமனத்தர். கல்லாவது உருகும். இவர்கள் கல்நெஞ்சம் உருகாது. கிழக்கு ஜெர்மனியில் நமது இந்திய வீரர் வாழ்ந்த இடம்உண்டு. அதைப்பார்க்க நான் விரும்பினேன். அதற்கேற்ற நண்பரைத் தேடிக்கொண்டிருந்தேன். ஜே. ஸி. குமரப்பாவும் என்னுடன் இருந்தார். இருவரும் போட்ஸ்டாம் மௌன மாளிகையைப்

பெரிய ஜோடுகளை அணிந்து உள்ளே மெல்லச் செல்ல வேண்டும். அங்கே பீடரின் நூலகம், இசையரங்கம், விருந்தகம், அவனது கலைவாழ்வு எல்லாம்காணலாம். வால்தேர் இருந்த அறை மிக்க அழகானது. அதில் பறவைகள் கனியுண்பதுபோலச் சிற்பம் உள்ளது. அந்த அறைச் சாளரத்திலிருந்து நோக்கினால் பழங்களை உண்டுபாடியாடும் பலவிதப் பறவைகளைக் காணலாம். வால்தேர் இந்தப் பறவைகளை மிகவும் விரும்பிப்பாடுவானாம். என்னுடன் வந்த சிறுமி ''நான் அந்தப் பறவைப்பாட்டைப்பாடுவேன், ஆடுவேன்'' என்றாள். அப்போது ஓர் உரத்த குரல் நீ யாருடன் ஆடுவாய்; எங்கே உன் ஜோடி என்றது. அதுவே ஒற்றன் வில்லியின் குரல். ''இதோ'' என்று சொல்லுமுன் ஜன்னலுக்கு முன்னுள்ள அழகான கொடிப் பொதும்பரிலிருந்து ஒரு வாலிபன் சீழ்க்கையடித்துப் புன்னகைத்தான். ''அலீஸ், அலீஸ்அருகேவா'' என்று கூவினான்.

0 0 0

மாளிகையைப் பார்த்ததும் நாங்கள் வெளியே தோட்டத்திற்கு வந்தோம். அங்கே அந்த வாலிபன் (அவன்பெயர் வீலர்), அலிஸ் (அவளை அல்லி என்றே அழைத்தேன்) கையைப் பிடித்துக்கொண்டான். இருவரும் பாடினர், ஆடினர்; இன்னும் சில இளைஞரும் பாடி ஆடினர்.

சிட்டுக்குருவியைப்
போல்-ஒரு
சிக்கின்றி வாழேனோ
பட்டுநிலாவினிலே
-ஜிவ்வெனப்
பறந்து போகேனோ
கட்டுகளையுதறிக்

[illegible] அல்லியை ஆந்தைக் கண்ணால் பார்த்து ஏதோ பின்னால் ஒரு நோட்டில் குறித்துக் கொண்டான் இரும்புக் கைகளை இறுக்கி உதறினான்.

0 0 0

நாங்கள் தங்கிய ஜோனஷேஃப் ஓட்டல் சலவைச் செங்கலால் அமைந்து மழமழப் பொலிவுடன் விளங்கியது. அங்கே சமையலெல்லாம் உயர்ந்த மின்னடுப்பில், மின்னல் வேகத்தில் நடந்தன. விருந்தினர் பணந் தந்து, சீட்டு வாங்கவேண்டும். சீட்டுகளைச் சமையல் அதிகாரி பார்த்து உத்தரவிட்டதும் மின்னடுப்புகளில் பதார்த்தங்கள் தயாராகும் சமையல் தயாராகி மேஜை விரித்து தட்டுகளை வைத்து மணியடிப்பார்கள்; அல்லது ஃபோனில் அழைப்பார்கள். அதுகாறும் திரைப்படங்களைக் காட்டுகவார்கள்; கலை விருந்தளிப்பார்கள்.

0 0 0

இன்று ஓட்டலில் ஒரு திருநாள்; இட்லரின் கொடுமை ஒழிந்தநாள்; ஓட்டல் புதுமை பெற்று பொலிந்த நாள். முதலாளி எங்களுக்கு நல் விருந்தளித்ததுடன், ஒரு பெரிய படகை அமர்த்தி எல்லாரையும் ஸ்பிரே நதியில்உல்லாசப்பயணம்செய்ய இட்டுச் சென்றார். முதலாளி ஷாமாஷ் அங்கும் கனிரசங்களையும், இனிய பண்டங்களையும் அள்ளியளித்தார். வசந்தப்பச்சழகு கண்ணுக்கு விருந்தளித்தது. இரு கரைகளிலும் மக்கள் மேஜைகளைப்பரப்பி விருந்துண்டனர். எங்களை நோக்கிக் கனிகளை வீசினர். நாங்களும் பிஸ்கெட் பொட்டணங்களை வீசினோம். எங்கள் படகு ஆற்று வெள்ளத்தில் அன்னம்போலத் தவழ்ந்தது. பெர்லின் மக்களும் தங்கள் படகுகளில் உல்லாசமாகச் சென்றனர். இடுப்பளவு மெல்லாடையணிந்து காதலர் உல்லாசப் படகூர்ந்தனர். ஆற்றுப் பாட்டுடன் ஆசைப்பாட்டுகளும் சேர்ந்தன.

வில்லி சோவியத்-பெர்லின் ஒற்றன். அமெரிக்க-பெர்லினிலிருந்து வருவோரைக் கண்காணித்து இழுத்துச் சென்று கடுந் தண்டனை வாங்கித் தருவான். அதற்கென்றே ஒற்றர்சாலை உள்ளது. அது இருக்கும் இடம் ஸ்டாலின் அல்லே எனப்படும். அதுதான் முன்னே கைசர் வில்லியம் இருந்த மாளிகையிடம்; மாளிகையைப்போர் வெறியர் தகர்த்துத் தரைமட்டமாக்கினர். அதற்குக்கைசர் திடல் என்று பெயர் வழங்கியது. அந்தப் பெயரை மாற்றி இப்போது ஸ்டாலின் அல்லே என்று புதுப் பெயர் சூட்டினர். அங்கே தான்இராணுவவீரர்போர்ப் பயிற்சி பெறுகிறார்கள் அதைப் பார்த்தாலே மனம் கலங்கும். அதன் அருகே தான் கேரிங்கின் அலுவலகம் இருந்தது.

ஃ ஃ ஃ

வில்லி: நீங்கள் நல்லவர். இந்தியாவிலிருந்து வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு சுபாஷ்போசைத் தெரியுமா?

நான்: தெரியும்; பார்த்திருக்கிறேன். அவர் இங்கே வந்து இட்லர் உதவியால் ஜப்பானியர் நட்பைப் பிடித்து சிங்கப்பூரிலிருந்து இந்திய சுதந்திரத்திற்காக இரத்தப்போர் தொடுத்தார். உங்களுக்கு அவரைத் தெரியுமா?

வில்லி: ஆம், நானே எனது ஒற்றருடன் அவரை நீர்மூழ்கியில் சிங்கப்பூருக்கு அனுப்பினேன். எனக்கு இந்திய தேசாபிமானிகளையெல்லாம் தெரியும். ஜெனிவாவுக்கு வந்தபோது ரோமா ரோலான் வீட்டில் காந்தியைப் பார்த்தேன். 1910ம் ஆண்டு என் தகப்பனார் எத்தனையோ இந்தியத் தேசாபிமானிக்குப் புகல் கொடுத்தார்.

நான்: அப்படியானால் நீர் இந்திய நண்பரே; வ. வே. சு.ஐயர், திருமலாசாரியார், சாவர்கார், டிங்கிராகாமா முதலியோர் பெயரைத் தெரியுமா?

வில்லி: என் தகப்பனாரின் தினசரிக் குறிப்பில் இவர்கள் பெயரெல்லாம் உள்ளது. என் முதல்மனைவி இவர்களுக்குத் தொண்டு செய்ததுண்டு. மாதாம் காமா என்ற வீராங்கனை எங்க[illegible] பெர்லின் மகாநாட்டி[illegible]ான் இந்தியக் கொடியை உயர்த்தினாள். என் தந்தை அதைப்பற்றி பெருமையாகச் சொல்வதுண்[illegible] என் தந்தை லண்

நீர்களோ?

வில்லி: உங்க[illegible]ர மும் அறிவேன் — இதோ பாருங்கள். உங்களைப் பற்றிய ஆங்கிலநூல். yogi and his Works.

நான் வியந்து திகைத்தேன். என் வரலாறு; அதில் செங்கோடிட்டிருக்கிறது. நான் வ. வே. சு. ஐயருடன் இருந்ததெல்லாம் குறித்திருக்கிறது. ஒற்றர்திறமையை வியந்தேன். எனக்கும் அல்லியின் முழு விபரமும் அறிய வேண்டும் என்றிருந்தது. ஆதலால் பேச்சுக்கொடுத்தேன். ஒற்றன் வில்லியும் கேட்டுக்கொண்டே பின்புறம் ஏதோ சிறுகுறிப்பில் சுருக்கெழுதினான்.

நான்: என் அருமை அல்லி-வீலர் நாமெல்லாம் நண்பரானோம். இப்போது உங்கள் வரலாற்றைச்சொல்லவேண்டும். என் தினசரியில் குறித்துக்கொள்வேன். வரலாறு நன்றாயிருந்தால் ஒரு கதையும் புனைந்து அச்சிடுவேன்.

மிஸ்டர் வீலர் அல்லியார்? உங்களுக்கு எப்படி நேசம் உண்டானது.

வீலர்: அல்லியை நான் ஃப்ராங்க்ஃபோர்டில் கெத்தே பவனத்தில் சந்தித்தேன். இருவரும் முதலில் இலக்கிய உறவுகொண்டோம். பிறகு உள்ளுறவு கொண்டோம். இவள் வரலாறு அற்புதமானது. நான் கிழக்கு பெர்லின் ஆள்; இங்கிருந்து அவளுக்கு ரொட்டி கொண்டுபோவேன்; இவளுக்கு அங்கே ஆடைகள் வாங்கித்தருவேன். இருவரும் பெர்லினிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டோம். இவள் அடிக்கடி போட்ஸ்டாம் கூட்டுப்பண்ணைக்கு வருகிறாள்; அங்கே காய்கறிகள் வாங்கி விற்கிறாள். ஊர்ச்சந்தையிலேயே எல்லாம் விற்றுப்போகிறது. பணம் அவள் ஜேப்பில் குலுங்குகிறது. நான்பாடுவேன்; படம்பிடிப்பேன், மேடையில் நடிப்பேன்.

வில்லி: மேற்கு பெர்லின் பெண் கிழக்குப் பெர்லினுக்கு வரலாமா? இப்படி வியாபாரம்பண்ணலாமா? பணம் சம்பாதிக்கலாமா? இவள் அவனை மணந்தால் உடனேசிறையிலடைப்பேன் அல்லது சுடுவேன்!

அல்லி: விநோதமான கேள்விகள். ஐயா நீரும் ஜெர்மானியர், நானும் ஜெ[illegible]னியள். இருவர் நரம்பிலும் ஓடுவது ஜெர்மன் இரத்தம். கிழக்கு மேற்கு என்று நம்மைப் பிரித்தவர் சுயநல அரசியல்வாதிகள். இவர்கள் ஜெர்மனியைப் படைத்தார்களா? நம்மைப் பிரித்தவர் அந்நியர்; அன்னியருக்கு அடிவருடிப் பிழைக்கும் ஒற்றர்போலக்கேள்வி கேட்கிறீரே

வில்லியின் முகம் சிவந்தது. நான் அவனை அடக்கி முழுக்கதையும் கேட்போம் என்றேன். ஒரு பெண்ணின் உள்ளத்தைக் கிளறிவிட்டால் எல்லாவற்றையும் அருவி மாதிரிப் பொழிந்துதீர்ப்பாள். அல்லி நல்ல பேச்சுக்காரி. இனிய நடையில் அரிய விஷயங்களைச்சொன்னாள். நானே திகைத்துப்போனேன். ஒற்றனும் திகைத்தான்

அல்லி: என் பாட்டனார் ஒரு மருந்துவியாபாரி; அவர் அடிக்கடி லண்டன் சென்று வருவார். அவர் இந்திய விடுதிக்குச் சென்று அங்கேயிருந்த இந்திய வாலிபரிடம் நட்புக் கொண்டார். அவருள் சாமாஜி, காமா, சாவர்க்கார் ஐயர், ஷிங்கிரா, திருமலாசாரி ஆகியோர் எங்களுக்குப் பிரியமானவர்கள். 1909ல் பெர்லினில் உலக சோஷலிஸ மகாநாடு நடந்தது. அதற்கு இவர்கள் வந்திருந்தனர். பல நாட்டுப் பிரதிநிதிகள் அவரவர் நாட்டுக் கொடியைப் பிடித்தனர். சாவர்கார் இந்தியாவுக்கு மூவர்ணக் கொடியை ஆக்கினார். மாதாம்காமா தனது சேலைகளிலிருந்து மஞ்சள், சிவப்பு, பச்சை நிறத்துண்டுகளைக் கிழித்துத் தைத்து கோடுகட்டி சூரியன், சந்திரன், நட்சத்திரம், தாமரை ஆகிய உருவங்களை அழகாக வரைந்து கவர்ச்சியாகக் கொடியைத் தயாரித்தாள். அதை அவளே தூக்கிப் பிடிக்க, இந்தியப் பிரதிநிதிகள் மகாநாட்டில் கம்பீரமாக அமர்ந்தனர். இதைப் பாட்டனாரிடம் கேட்டபடி என் அப்பா சொல்லக்கேட்டிருக்கிறேன். என் அப்பா ஒரு குடிகாரர், முரட்டு ராணுவவீரர். அவரிடம் என் அம்மாளுக்குப் பயம். இருவருக்கும் மனம் பிடிக்காமல் தனியே வாழ்ந்தனர். என் தாயார் மாதாம் காமாவிடமும் சாமாஜீயிடமும் பணிவிடை செய்தாள்.

வில்லி: 1928-ல் உன் அம்மாள் பெர்லினில் இருந்தாள் அல்லவா? நீ எப்போது பிறந்தாய் தெரியுமா?

அல்லி: எனக்குத் தேதியும் வருஷமும் நினைவில்லை. பல ஆண்டுகள் சென்றபிறகு என் அம்மா அப்பாவிடம் வந்து ஓராண்டு இருந்தாளாம். அப்போது கெய்சர் செத்து, இட்லர் வந்து கொண்டிருந்தானாம். நான் பிறந்தபின் என் அம்மாள் ஐந்தாண்டுகளே உயிரோடிருந்தாள். என் அப்பா இரண்டாவது உலகப் போரில் கெஸ்டாபோ ஆகி எங்கோ சென்றுவிட்டார். நான் அனாதையாகத் தெருத்தூசியில் வளர்ந்தேன். ஓர் அனாதையில்லத்தில் சேர்ந்து கல்வி கற்றேன். ஒரு நாள் கெத்தே தோட்டத்தில் வீலரைக் கண்டேன். அன்றுமுதல் இருவரும் நண்பரானோம்.

0 0 0

வில்லி திடுக்கிட்டான். தலைகுனிந்தான். அவன் கண்களிலிருந்து இரண்டுசொட்டுக் கண்ணீர் வந்தது. மன எழுச்சியை அடக்கமுடியவில்லை. படகு ஸ்ப்ரே நதியில் வெகுதூரம் சென்று கோடக்ஸ் தொழிற்சாலையருகே வந்தது. கோடக்ஸ் போட்டோ கமீராக்கள் செய்யும் தொழிற்சாலை. ''இறங்குங்கள்இங்கே'' என்றான் வில்லி; நானும் அல்லியும் வீலரும் இறங்கினோம். தொழிற்சாலையைப் பார்க்க. படகும் நின்றது; நண்பர் எல்லாரும் இறங்கினர். வில்லி எங்களை உள்ளே அழைத்துச் சென்றான். படங்கள் நிரம்பிய ஒரு கூடத்திற்குள் இட்டுச் சென்றான். ஒரு பெரிய படத்தைக் காட்டினான். அதில் ஒரு தாய்தகப்பன், ஒரு குழந்தை நின்றனர். ''இவர்களைத் தெரியுமா'' என்று அல்லியிடம் காட்டினான் வில்லி...

அல்லி: ஆ... என் அம்மா இங்கே இருக்கிறாளே எவ்வளவு அழகாயிருக்கிறாள்- அம்மாவுடன் இருப்பது நீங்களா? ஆம். இரும்பு நெஞ்சம் இளகியது! ஒற்றன் உள்ளம் உருகியது.

வில்லி: என் கண்ணே நானே உன் அப்பா. உன் அம்மாளை நான் வெகுபாடு படுத்தினேன். நான் குடிவெறியனாயிருந்தேன் என் மனதில் இரக்கம் என்பதே கிடையாது. என் முகத்தில் புன்னகையே மலராது. என் கை இரும்புக்கை. அது எத்தனையோ பேருக்கு விலங்கு மாட்டி அடி கொடுத்துக் காய்த்துப்போனது. இன்று தான், உன்னைக் கண்டதும் அன்பு என்னுள் முகிழ்த்தது. பதினெட்டு வயதில் உன் அம்மா பிரிந்து முப்பத்தெட்டு வயதில் என்னிடம் வந்தாள். நீ பிறந்தாய்;

(4-ம் பக்கம் பார்க்க)

# உண்மை

— காரை செ. சுந்தரம்பிள்ளை —

உண்மை உலகில் தோற்காது
உலகம் பொய்யை ஏற்காது
மண்ணில் ஊழி காலம்வரை
மறையா உண்மை இதுவாகும்.

கொலையே செய்யும் பாதகரும்
குற்றஞ் சாட்டும் காதகரும்
நிலையே மாறி அழிவார்கள்
நிலத்தில் உண்மை மறையாது.

சண்டாளர்கள் புவிமீது
தம்மைக் காக்கப் பிறர்மீது
குண்டே போட முயன்றாலும்
கூறும் உண்மை மறையாது.

கள்ளச் சாட்சி சொல்வோரும்
காட்டிக் கொடுக்கும் தீயோரும்
கொள்ளி செருகும் கொடியோரும்
கூடினாலும் அழியாது.

உண்மை உரைப்போன் தேவனடா
ஊருக் குழைப்போன் தொண்டனடா
தின்மை செய்வோன் கயவனடா
தேசம் அறிந்த உண்மையடா.

# செய்யுளின் திறனாய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சம் உருகாது. கிழக்கு ஜெர்மனியில் நமது இந்திய வீரர் வாழ்ந்த இடம்உண்டு. அதைப்பார்க்க நான் விரும்பினேன். அதற்கேற்ற நண்பரைத் தேடிக்கொண்டிருந்தேன். ஜே. ஸி. குமரப்பாவும் என்னுடன் இருந்தார். இருவரும் போட்ஸ்டாம் மௌன மாளிகையைப் பார்க்கச்சென்றோம். அப்படியே முதலில் அந்த ஊரில் உள்ள கூட்டுப்பண்ணையைப் பார்த்தோம். அந்தப் பண்ணையில் விளையும் காய்கறிகளை வாங்கி விற்கும் பெண்களைக்கண்டோம். ஒரு இளம்பெண் என்னிடம் ஒரு பிளாஸ்டிக்கூடையில் இரத்தினக்கட்டிகள் போன்ற தக்காளிகளையும், உரத்துப் பெருத்த காரட்டுகளையும் போட்டுத்தந்தாள். நான் நன்றியுடன் ஏற்று விலையைக் கேட்டேன். ''ஊஹூம்! இதுஅன்பளிப்பு: நீர் இந்தியர்; இந்தியர் என்றால் எனக்குப் பிரியம்; இதோ என் காய்கறிகளை விற்றுவிட்டேன்; நானும் உங்களுடன் வருகிறேன், என்றாள். நாங்கள் மௌன மாளிகைக்குச் சென்றோம். புட்கள் விளையாடும் கனிமரச்சோலை நடுவே, ஒரு தாமரைப் பொய்கையருகே அந்த மௌனமாளிகையுள்ளது. அங்கேதான் முதல் ஃபிரடரிக்அமைதியாகவசித்தான். அங்கேதான் பிரான்சிலிருந்து துரத்தப்பட்ட வால்தேர் வசித்தான். அவனது மாபெரும் இலக்கியங்கள் அங்கே எழுதப்பெற்றன. இந்த மௌன மாளிகைக்குள் போவோர் தங்கள் காலணிகளை வெளியே விட்டு, அவர்கள் தரும்மிகப்

வரும் பாடினர், ஆடினர்; இன்னும் சில இளைஞரும் பாடி ஆடினர்.

சிட்டுக்குருவியைப்
போல்-ஒரு
சிக்கின்றி வாழேனே
பட்டுநிலாவினிலே
-ஜிவ்வெனப்
பறந்து போகேனே
கட்டுகளையுதறிக்
-குயிலுடன்
, காவினிற் கூடேனே
வட்டமிடும் பருந்தே
-உன்னுடன்
வானையளக்கேனே!

என்று பாடி அவர்கள் ஆடும் நேர்த்தியை மெச்சி எல்லோரும் சபாஷ்போட்டுக் கைதட்டினர். அல்லியும் வீலரும் காதலர் என்பதை அறிந்தேன். இருவரும் எங்களுடன் வந்துதவினர். அருகே ஒரு பெரிய அலங்கார மாளிகை. அங்கேதான் ஸ்டாலினும், ரூஸ்வெல்டும், சர்ச்சிலும். விஷின்ஸ்கீயும் கூடி இட்லரை ஒழிக்கத் தீர்மானித்தனர். இவர்கள் அமர்ந்த கூடத்தில் நாங்களும் அமர்ந்தோம். எங்களுக்குக் கனிகளால் ஆகிய சல்லாது கிடைத்தது; டொமெடோச்சாறு நிரம்பக் கிடைத்தது. அந்தக் கூடத்தில் ஒரு பெரிய பியானோ இருந்தது. ஒருவர் அதில் பெதோவனின் பாடல்களை வாசித்தார்; அது ஏழு ஸ்தாயி கீதம். அந்த இனிய கீதம், கேட்டதும் அடி எடுத்து, சாரிதிரிந்து ஆடத்தொடங்கினர் இசைக்காதலர். அல்லியும் வீலரும் பரவசமாக ஆடி முத்தமிட்டுக்கொண்டனர் எல்லாரும் குதூகலமாயிருந்தனர். அந்த ஒரு பேர் வழிமட்டும் உம்மென்றிருந்

ளவு மெல்லாடையணிந்து காதலர் உல்லாசப் படகூர்ந்தனர். ஆற்றுப் பாட்டுடன் ஆசைப்பாட்டுகளும் சேர்ந்தன.

டி[illegible]ன் இந்தியக் கொடியை உயர்த்தினுள். என் தந்தை அதைப்பற்றி பெருமையாகச் சொல்வதுண்[illegible] என் தந்தை லண்

ளியள். இருவர் நரம்பிலும் ஓடுவது ஜெர்மன் இரத்தம். கிழக்கு மேற்கு என்று

பிறந்தாய் தெரியுமா? அல்லி: எனக்குத் தேதி நம்பும் வருஷமும் நினைவில்லை.

யும் வீலரும் இறங்கினேம். தொழிற்சாலையைப் பார்க்க. படகும் நின்றது; நண்பர்

தெட்டு வயதில் என்னிடம் வந்தாள். நீ பிறந்தாய்;

(4-ம் பக்கம் பார்க்க)

—கவியோகி சுத்தானந்த பாரதியார்—

எங்கள் படகு மிக விசாலமானது. அது நீராவிப் படகு; அதில் ஐம்பதுபேர்கள் தாராளமாக அமர்ந்தோம். நாங்கள் பல நாட்டவர்கள். எல்லாரும் உலக அமைதிக்கூட்டத்திற்குவந்த பிரதிநிதிகளே. அவர்களுள் அல்லியும் வீலரும் என்னுடன் அமர்ந்தனர். வில்லி அவர்களையே உறுத்துப் பார்த்தான். படகில் ஆங்கிலர், பிரெஞ்சர், டச்சர், சுசர், இதாலியர், பாரசீகர் இந்தியர், சீனர், ஜப்பானியர் எல்லோடும் ஒத்திருந்தோம். அவரவர் நாட்டுப் பாடல்களை இனிமையாகப் பாடினர். ஒருவருக்கொருவர் அன்புறவு கொண்டு அளவளாவினர்.

இவருள் உம்மென்றிருந்த பேர்வழி ஒற்றன் வில்லியே. அவனை நான் ஐயுற்றேன் நான் அரசியல் வாழ்வில் எத்தனையோ ஒற்றரைப் பார்த்ததுண்டு; ஒற்றர் இயல்பு எனக்குத் தெரியும். ஆதலால் வில்லியின் உதடுகள் திறக்கப் பேச்சுக்கொடுத்தேன். என்னிடம் தன் உள்ளத்தையெல்லாம் அவன் சொல்லி விட்டான்.

0 0 0

டனில் இந்திய விடுதியில் இந்திய தேசாபிமானிகளைப் பார்த்திருக்கிறார். இந்திய விடுதலையில் அவருக்கு ஈடுபாடு உண்டு.

நான்: தங்கள் அலுவல் என்ன? தாங்கள் அந்த அல்லியையே பார்த்துக் கொண்டு உம்மென்றிருப்பதேன். அந்தரங்கத்தைச் சொல்லுங்கள்.

வில்லி: தனித்துச் சொல்லுகிறேன். இந்தச் சிறுமி அமெரிக்க பெர்லினிலிருந்து இங்கே வந்திருக்கிறாள். இவள் ஊர் ஃப்ராங்க்ஃபோர்ட். இவளைக் கண்காணிப்பது என்வேலை. நான் ஒற்றர்தலைவன். இந்தப் பெண் அந்த வாலிபனுடனே பலமுறை இப்படி வந்திருக்கிறாள். இவளை இன்று கைது செய்வேன்.

நான்: அந்த வாலிபன் வீலரைத் தெரியுமா?

வில்லி: ஆம் அவன் சோவியத் பெர்லினில் ஓர் அனாதை. நல்ல புலவன். அவன் அடிக்கடி மேற்கு பெர்லினுக்குத் துணிவாகச் செல்வான். இந்தப் பெண்ணுக்காக அவன் சட்டை, பாவாடை தைத்துப் புத்தகங்களுடன் மறைத்து வருவதுண்டு. இங்கே இருவரும் புத்தாடையணிந்து போட்ஸ்டாமில் நடனமாடுவது தெரியும்.

நான்: இருவரும் காதலரா? கணவன் மனைவியாக வாழ்கிறார்களா? அவள் பெற்றோர் யார்?

வில்லி- அதை அறியத்தான் இன்று இங்கு வந்தேன். அவளைப்பற்றிய பூர்வோத்திரங்களையெல்லாம் நான் அறியவேண்டும். நீங்கள் எனக்கு உதவி செய்யவேண்டும். ஏதாயினும் ஒளித்தால் இருவரையும் கைது செய்து சிறையிடுவேன். இனி நீங்கள் பேசவேண்டும். உங்களுக்காக நான் பொறுமையாயிருக்கிறேன். இன்றேல் இப்படியே இவர்களை விலங்கு மாட்டிச் செல்வேன். நான் இட்லரிடம் கெஸ்டாபோ வேலை செய்தவனுக்கும். என் கையும் இரும்பு, நெஞ்சும் இரும்பு.

நான்: இதேமாதிரி என்னைக்கூடக் கண்காணிக்கி


# தம்பி அன் கோ.,

284, K K S ரோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

நிரந்தர சேமிப்புக்கு கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 வருடத்திற்கு | — | வருடம் 8 சத வீதம் |
| 2 வருடத்திற்கு | — | வருடம் 9 சத வீதம் |
| 3 வருடத்திற்கு | — | வருடம் 10 சத வீதம் |
| ரூ. 10,000/-க்கு மேல் | — | வருடம் 12 சத வீதம் |

மேற்குறித்த நிரந்தர சேமிப்பை எப்பொழுதும் 30 நாள் அறிவித்தலில் வருடம் 8 சத வீத வட்டியுடன் எடுக்கலாம்.

இந்த மாதிரி 10 விளம்பரம் தருபவர்க்கு ஒரு சுவீப் ரிக்கற் இனமாகக் கொடுக்கப்படும்.


# செய்யுளின் திறனாய்வு

த. இராமநாதபிள்ளை
பி. ஏ. (லண்டன்)

மேனாட்டில் கவிநயம் யவனவாசிரியர் கலைஞர் பெருமான் அரித்தாத்தில் முதலாக அறிஞர் பெருந்தொகையினரால் ஆராயப்பட்டுவருகின்றது. பல நூற்றாண்டுகள் ஆராயப்பட்டபோதினும்செய்யுளின்திறன் யாதென ஐயமின்றி உரைக்கப்படவில்லை எனலாம். ஒரு செய்யுள் பிறிதொரு செய்யுளிலும்பார்க்க ஏன் திறமை வாய்ந்ததாகுமென கருத்துவேற்றுமையின்றிக் கூறப்படவில்லை. சிற்பம்,சித்திரம் இசை என்னும் கவின் கலைகள் போல் கவியிலும் திறமை வாய்ந்ததை எங்ஙனம் அறியலாம் என்பதற்கு விடையளித்தல் இலகுவன்று. ஓவியமெழுதல் சிற்பச்சிலையெழுதல் இராகமிசைத்தல் என்பவற்றின் திறமையை அறிதற்கு விதிகள் ஆராயப்படுதல்போல் செய்யுளின்திறமை யாதென அறிதற்கு விதிகள் உண்டோ என ஆராயப்படும். ஒருவர் திறமையானதென்பதை வேறொருவர் திறமையில்லாததெனக்கிளத்தல் உண்டு. கவியின் திறமை சுவைப்போரைப் பொறுத்ததோ என ஐயப்படுதல் உண்டு. ஆதலின் கவிநயம்பற்றிய அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்த்தல் அவசியமாகும்.

## செய்யுளின் வரைவிலக்கணம்

கவிநயம்பற்றிச்சில உத்தேசங்களும் சில குறிப்புகளும் சிலவெற்றுரைகளும் கிடைக்குமொழியப் பிரமாணங்கள் தெளிவாகின்றில. மேனாட்டு ஆய்வு வல்லோரின் உரைகளை நோக்குவோரின் செய்யுளின் திறமைபற்றியகொள்கைகள் வேற்றுமைப்படுதல் தெரியும். மேனாட்டுப்புலவர்கள் ஆய்வாளர் என்போரின் சில குறிப்புரைகளைத் தருதும். 'செய்யுள் பொதுவுண்மைகளைக்கூறும்'; 'கவியின்பம் ஒரு பைத்தியம் போன்றது. அது இயற்கையுலகைவிட்டு ஒரு கற்பனையுலகுக்குச் செல்வதாகும்'; 'செஞ்சொல்லால் சொல்வதே கவியின் இயல்பு'; 'செய்யுள் எளிதாகவும் ஒரு தனி நோக்கு உடையதாகவும் இருக்கும்'; 'நற்சிந்தனையே செய்யுளின் இலட்சியம்'; 'கவியியற்கை உரைத்தல் வேண்டும்'; 'மகிழ்வித்தலே கவியின் முக்கியநோக்கம், படிப்பினை தருதல் இரண்டாம்படி'; 'கற்பனையின்பம் அறிவின்பத்திலும் பார்க்கப்போற்றப்படும்'; 'கவியின் உணர்ச்சி சுயமாக எழும்'; 'செய்யுள் என்பது திறமையான சொற்களைத் திறமான முறையில் அடுக்குதலே'; 'மனிதனின் ஆன்மா முழுவதும் தொழிற்படுதலைக்காட்டுதலே கவி'; 'கவி கற்பனையின் மாந்திரீக வல்லமையைக் காட்டும்'; 'உள்ளத்தின் கண் சிறப்பினதாய்ப் பதிதலை உரைத்தலே செய்யுள்'; 'கவியின் நோக்கம் வாழ்க்கையை ஆய்வு செய்தலே'; 'கவி பொருட்சிறப்பும் சந்தச் சிறப்பும் உடையதாகும்.'

இவ்வுரைகளை நோக்கும் போது கவி நயம் பற்றிப் பல்வேறு அபிப்பிராயங்கள் உண்டென்பது புலப்படும். ஆகலின் கவி யாதெனத் தெரிகின்றிலது. இவ்வுரைகளைக் கவியின் வரைவிலக்கணங்கள் எனக்கொண்டால் இவை வரைவிலக்கணவழுக்களுக்கு நல்ல உதாரணங்களாகும். சொன்னயம் பொருணயம் சந்தநயம் என்பவற்றை ஆய்வு செய்தலே திறனாய்வு எனப் பொதுவாகக் கூறப்படுமெனின் அவை எத்தன்மையதென வினா எழும். இவ்வுரைகளின் கவின் கலையாகிய செய்யுளின் நயத்தை வரையறுக்க முயலுமென்பதில் ஐயமில்லை இவை கவி நயத்தை மதிப்பீடுசெய்து விளக்குதற்குத் துணைபுரியுமெனினும், இவை கவியின் பெறுமதி யாவை எனத் திட்டவட்டமாக உரைக்கவில்லை என்போம். புலமையின் சொரூபம்வரையறுக்கப்படவில்லை எனயாம் எண்ணுதல் பிழையாகாது. ஒரே வர்ணனையையே வேறுவேறான மக்கள் வேறு வேறான காரணங்கள் கூறிச் சுவைத்தலுண்டென்பதையும் ஒருவரே ஒரு செய்யுள் வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறான திறமை உடையதெனச் சாற்றுதல்கூடுமென்பதையும் அறிவேம். கவியின் திறன் இத்தன்மையதென உரைத்தல் இலகுவன்றாகலின், மெய்யியல்வல்லோரும் உளவியல்வல்லோரும் அழகியல்வல்லோரும் ஒழுக்கநூல்வல்லோரும் கவிஞரும் ஆய்வாளரும் கவியின் இயல்பை ஆராய்ந்து தெளிதல் விரும்பப்படும். தமிழ்மொழியின்கண் சிறந்த முறையில் ஆய்வுசெய்தற்கு தமிழ்க்கவிகளைக் கற்போர் பெருந் தொகையினராதல் நன்று. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழ்க் கவிகள் இசைக்கப்பட்டமையால் அவற்றின் இயலை ஆராய்தல் இலகுவன்று.

ஓர் இலக்கியம், வேறு வேறான காரணங்களால் இரசிக்கப்படுதல் கூடும் என்றும். ஒரு நாடகம் பார்ப்போருள் ஒரு சிலர் அந்நாடகத்தின் கதையை மாத்திரம் உணர்ந்து சுவைத்தல்கூடும். ஒருசிலர் அதன் இசைப்பாடல்களை 'மாத்திரம் சுவைத்தல் கூடும். ஒரு சிலர் நடிப்பை மாத்திரம் சுவைத்தல் கூடும். ஒரு நாடகம் உரைக்கும் இலட்சியத்தையும் அதை விளக்கும் கருத்துருவங்களையும் மெய்ப்பாடு எழும் வண்ணம் நடித்தலையும் சுவைப்போரே அந்நாடகம் திறமை வாய்ந்ததெனச் சொல்லுதற்கு உரியராவர். இராமாயணத்தைப் பாமரரும் பாடசாலை மாணவரும் 'கல்வியறிவுள்ளவரும் ஆய்வு வல்லோரும் இரசிப்பர். இவர்கள் வெவ்வேறு உணர்ச்சி யுடையோராவர். 'உணர்ச்சிவாயில் உணர்வோன் வலித்தே' என்பது தொல்காப்பியம். ஒரு பாடல் பெருந்தொகை மக்களால் சுவைக்கப்படுதலால் அது இலக்கியச் சிறப்புடைத்தெனக் கொள்ளப்பட வேண்டியதில்லை. இலக்கியத்திறனும் வல்லோரால் சுவைக்கப்படின் அது சிறப்புடையதாகும். கற்றோரே கல்வியாற் சிறந்த புலவர்களின் பாடல்களை உணர்வர். கல்வியறிவாற் சிறந்த புலவன் தன் கருத்தை புனைந்துரைத்தற்குப் புராணக்கதை முதலியவற்றைச் சுட்டுதல் உண்டு. புராணக்கதைகளைச் சுட்டி ஞாபக உணர்ச்சிகளை எழுப்புகின்ற பாடல் உரைக்கும் கருத்தை உணர்ச்சியோடு கிரகிப்போம். மணிவாசகப் பெருமான் திருவிளையாடல் பலவற்றைச் சுட்டி உணர்ச்சியைத் தூண்டுவர். கடல் கடைதல், திரிபுரமெரித்தல், யமனை உதைத்தல், தக்கன் வேள்வியைத் தகர்த்தல், இராவணன் இமயத்தை எடுத்தல் முதலிய கதைகளைச் சுட்டுதல் மூலம் ஒரு பாடலின் கண் வருணனைகளை உணர்ச்சியுடையவையாக் குதல் உண்டு

## அழகின் திறனை ஆயும் தத்துவம்

உண்மை ஒன்றைப் பகுத்தறிதற்குப் புத்தி தத்துவம் உபயோகப்படுதல்போல் ஓர் அழகை அறிதற்கு அழகாய்வு செய்யும் தத்துவம் என ஒன்று உண்டெனச் சிலர் கொள்வர். எமக்குப் புலனாகும் ஓர் அழகை நுகர்ந்து சுவைக்கும்போது அழகாய்வு தத்துவம் தொழிற்படும் என்பர். இவ் அழகாய்வு தத்துவம் துலங்காவிட்டால் கவின்கலைகள் சுவைக்கப்படா. இத்தத்துவம் இல்லாவிட்டால் கலைச் சுவையின் திறனை எங்ஙனம் தீர்க்கலாம் என்பர். நன்மை யாதென அறிதற்கும், உண்மையாதென உணர்தற்கும் அழகுயாதெனக் காண்பதற்கும் புறம்பான தத்துவங்கள் உண்டென்பது விநோதமாகும். செருமானிய தேயத்துத் தத்துவநூலறிஞர் கான்ற் என்பவர் அறியும் தத்துவமாகிய புத்தி, இன்பம் நுகரும் தத்துவமாகிய உணர்ச்சி,விரும்புதலைச் செய்யும் இச்சை என ஆன்ம தத்துவம் மூன்று உள என்பர். புத்தி மெய்யாதென அறியும்; இச்சை நன்மை யாதெனத்தெரியும்; இன்ப நுகரும் தத்துவம் கவின்கலையின் அழகைத்தீர்க்கும். அழகின் இன்றியமையாப்பண்புகளைத் தீர்த்தற்குப் புத்தி போதியதன்றோ என இன்று வினவப்படும். அழகின் இயல்பைத் தீர்த்தற்குப் புறம்பான ஒரு தத்துவம் தேவையில்லை என்பது இக்காலத்து உளவியலறிஞருடைய கொள்கை. எவ்வகை அநுபவத்தையும் புத்தி என்னும் தத்துவமே பகுத்தறியும் என்பது மெய்யியல் உண்மையாகும். செய்யுளு

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கவிஞர் வாலி கூறுகிறார்:

# சினிமாப்பாடல்களில் ஆபாசம் இருக்கிறது

## அண்ணா வசனம் எழுதிய படத்தில் முதலில் பாடல் எழுதினேன்

சினிமாப் படங்களில் ஆபாசம் இருப்பது உண்மைதான் என்றுசினிமாக்கவிஞர் வாலி கூறினார்.

திருச்சிக்கு கவிஞர் வாலி வந்திருந்தபோது பத்திரிகை நிருபர் அவரைச்சந்தித்துப் பேசினார். அப்போது நிருபரின் கேள்விகளுக்கு கவிஞர் பதிலளித்தார். வாலியின் கருத்துக்களை இங்கே தருகிறோம்.

கேள்வி: இதுவரை நீங்கள் எத்தனை பாடல்கள் எழுதி இருக்கிறீர்கள்?

பதில்: ஏறத்தாழ 800 பாடல்கள் வரை எழுதி இருப்பேன்.

கே: பாடல் எழுதுவதற்கு எவ்வளவு நேரம் ஒதுக்குகிறீர்கள்?

ப: நான் வீட்டில் வைத்து பாடல்கள் எழுதும் வழக்கம் இல்லை. இசை அமைப்பாளர்கள் பக்கத்தில் இருந்துகொண்டுதான் பாடல்கள் எழுதுவேன்.

ஏதாவது அவசரமாக பாடல்கள் எழுதும் சூழ்நிலை ஏற்பட்டால்தான் வீட்டில் வைத்து பாடல்கள் எழுதுவேன். மற்றப்படிவீட்டில் வைத்து பாடல்கள் எழுதுவதே கிடையாது.

நான் 10 நிமிடநேரத்தில் எழுதிய பாடல்களும் உண்டு. அந்த நேரத்தில் 10 நாட்கள் எழுதிய பாடல்களும் இருக்கின்றன.

கே: இதுவரை நீங்கள் எழுதிய பாடல்களில் உங்களுக்குப் பிடித்தமானபாடல் எது என்று கூறுங்களேன்?

ப: ''கொடுத்ததெல்லாம் கொடுத்தான் அவன் யாருக்காக கொடுத்தான்'' என்று நான் எழுதிய பாடல்தான் எனக்கு பிடித்தமானபாடல் ஆகும்.

ஒரு பாடல் வெகுகாலம் நிலையாக நிற்பது அந்தப் பாடலை பாடும் கதாநாயகனை பொறுத்தும் இருக்கிறது. அதோடு அந்தப்பாடல் கதையில் பொருத்தமான இடததில் அமைந்து இருக்க வேண்டும்!

இப்படிப்பட்ட தன்மைகள் அமையுமானால் அந்தப் பாடல் வெகு நாட்கள் மக்கள் மனதில் நிலையாக நிலைத்து நிற்கமுடியும்.

''நான் ஆணையிட்டால்'' என்ற பாடலை எம். ஜி. ஆர். பாடுகிறார். அதன் இசை அமைப்பு சிறப்பாக இருந்தது.

கதையில் அந்தப்பாட்டு பாடப்படும் இடம் பொருத்தமாக இருந்தது. மேலும் அந்தப் பாட்டு வரும்கட்டம் சிறப்பாக படமாக்கப்பட்டு இருந்தது.

எனவே அந்தப்பாடலைஇப் போதும் நம்மால் ரசிக்க முடிகிறது. ஒரு பாடல் நிலையாக இருக்க இது போன்ற சூழ்நிலைதான் காரணம் என்று நான் நினைக்கிறேன்.

**ஆபாசம் இருக்கிறது**

சினிமாப் பாடல்களில் ஆபாசம் இருப்பது உண்மைதான். ஆனால் அந்த ஆபாசம் நேரடியாக இல்லை. மறைமுகமாக இருக்கிறது.

இரண்டு பொருள்பட பாட்டு எழுதுவதுதான் கவிஞனின் திறமையாகும்.

எனவே ஒரு பாடலில் இரண்டு கருத்து இருந்தால் நல்ல கருத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் கெட்ட கருத்தை விட்டுவிடவேண்டும்.

இரண்டு பொருள்பட பாட்டு எழுதுவது தவறு இல்லை!

கவி என்று சொன்னால் கவிதை எழுதும் கவிஞனைக் குறிக்கும்.

அதே 'கவி' என்ற சொல்லுக்கு குரங்கு என்றபொருளும்உண்டு. ஒருவர்என்னைப் பார்த்து கவி என்று கூறினால் என்னை ''கவிஞன்'' என்றுதான் கூறுகிறார்என்றுதான் நினைக்க வேண்டும்.

'குரங்கு' என்று என்னைக் கூறுகிறார் என்று நாம்நினைக்கக்கூடாது எனவே பாடல்களில் உள்ள நமக்கு வேண்டிய கருத்துக்களை எடுத்துக் கொள்ளவேண்டும். கெட்டதை விட்டுவிடவேண்டும். இதுதான் நல்லது

காதல் பாட்டு எழுதும் போது கதாநாயகனும் கதாநாயகியும் எந்த நேரத்தில் அந்தக்காதல் பாட்டைபாடுகிறார்கள் என்பது பற்றி சிந்தித்துஅதைச்சுற்றி சுற்றி கற்பனை செய்வோம். அதன் பிறகுதான் பாடல்களை எழுதுவோம்.

சினிமாப்பாடல்களில் சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் இருந்து சில அடிகளை எடுத்து புகுத்தலாம்

இப்படிச் செய்வது தவறு அல்ல. முன்னால் கூறியதை சினிமாப்பாணிக்கு நல்லவிஷயத்தை எடுத்துக்கொள்வது தவறாகாது.

கே: சோகப் பாடல்கள் எழுதுவது கடினமா? காதல் பாடல்கள் எழுதுவது கடினமா?

ப: சோகப்பாடல்கள் எழுதுவதும், காதல்பாடல்கள் எழுதுவதும் எளிதானதாகும். ஆனால் நகைச்சுவை பாடல்கள் எழுதுவதுதான் கடினம். காதல்பாடல்கள் படங்களில்அடிக்கடி வருகின்றன. அதுபோல சோகப் பாடல்களும் படங்களில் அடிக்கடி வருகின்றன.

அண்ணாவின் ''வேலைக்காரி'' படம் வெளிவந்த காலத்தில் இருந்து அவருடன் ஈடுபாடு கொண்டிருந்தேன்

அண்ணாவின் அரசியல் கொள்கையிலும் நான் பற்றுக் கொண்டவன்.

அண்ணா கதை வசனம் எழுதிய இரண்டு படங்களுக்கு இரண்டு பாடல்களை இயற்றினேன். இந்தப்பாடல்கள்தான் முதன் முதலில் எழுதியபாடல்களாகும்.

இந்த சந்தர்ப்பம் எனக்கு கிடைத்திருக்காவிட்டால் நான் கவிஞன் ஆகி இருக்க முடியா... இவ்... கூறினார்.

'யோகி' தயாரித்து தரும்




## பணத்தைப் பறிகொடுத்தார் நாகேஷ்!



பாங்கில் பணத்தை கட்டச்சென்ற நாகேஷ் பரிதாபமான முறையில் அதைப் பறிகொடுத்தார்.

**பணம்கட்டச்சென்றார்**

கறிகாய் விற்றும் எடுப்புச் சாப்பாடு எடுத்தும் வாழ்க்கை நடத்திவந்தார் நாகேஷ். வாடிக்கையாக ராஜஸ்ரீ வீட்டிற்கும் சாய்கறி சப்ளை செய்துவந்தார்.

ஒரு நாள் ராஜஸ்ரீ பாங்கியில பணம் கட்டவேண்டும் என்று கூறினார். அவருக்கு உதவிசெய்ய விரும்பிய நாகேஷ் தானே பணத்தைச் சென்று கட்டுவதாகக் கூறி அருகிலுள்ள பாங்கிற்குச் சென்றார்.

எப்படி பணத்தை பாங்கில் கட்டுவதென்று விவரம் தெரியாது அங்குள்ள ஒரு பெட்டியில் அந்தப் பணத்தைப்போட்டார். இதைப் பார்த்துக்கொண்டேயிருந்த ஒரு பலேஆசாமி அப்பணத்தை எடுத்துக் கொண்டு கம்பி நீட்டினான்.

**ராஜஸ்ரீ கோபம்**

தான் பணம் கட்டிய விவரத்தை ராஜஸ்ரீயிடம் கூறினார் நாகேஷ். பணத்தை பாங்கியில் கட்டும்படி கூறினால் பெட்டியில் போட்டு விட்டு வந்துவிட்டாயே! பணம் பறிபோய்விட்டதே என்று கோபப்பட்டார் ராஜஸ்ரீ,

தான் செய்த தவறை உணர்ந்தார் நாகேஷ். பொலிஸ் இன்ஸ்பெக்டராக பணிபுரியும் அவருடைய நண்பர் ஜெமினி கணேசனிடம் விஷயத்தை எடுத்துக் கூறினார்.

**ஜெமினி உதவி**

நண்பனுக்கு உதவி செய்ய முன்வந்தார் ஜெமினி. ராஜஸ்ரீயிடம் புலன் விசாரிக்க அவரின் வீட்டிற்கு வந்தார்.

இக்காட்சி ஆலங்குடி மூவீசாரின் பத்தாம் பசலி' என்ற படத்திற்காக படமாக்கப்பட்டது கே. பாலச்சந்தர் கதவசனம் எழுதி டைரக்ட் செய்கிறார்.

## சினிமாவில் நடிக்கிறார் தொழிலதிபர்

தேவர் தயாரிக்கும் 'துணைவன்' என்னும் சினிமாப் படத்தில் திருமுருக கிருபானந்தவாரியார் கதா காலட்சேபம் செய்கிறாரல்லவா?

அவருடன் நாகர்கோவில் வெல்பேர் பிஸ்கட் கம்பெனி அதிபர் எம். பி. அய்யாவும் புல்புல் தாரா கச்சேரி செய்கிறார். இ... காட்சி படமாக்கப்பட்ட...

## மகிழ்ச்சி மிகுதியால் விஜயாவைத் தூக்கினார்!

மகிழ்ச்சி மிகுதியால் நடிகர் ஜெய்சங்கர் கே. ஆர். விஜயாவை தூக்கி சுற்றி விளையாடினார்.

ஜெய்சங்கரின் மனைவியான அமுதா வக்கீலுக்குப் படித்துக்கொண்டிருந்தார். மனைவி பெரிய சட்டமேதையாகவேண்டும் என்ற ஆசையால் அவரதுபடிப்புக்கு பாதியஊக்கம்அளித்தார் ஜெய்சங்கர். பரீட்சையும் வந்தது! அமுதா பரீட்சை எழுதினார்.

பரீட்சை முடிவு வந்ததும் ஜெய்சங்கர் ''அமுதா! அமுதா!'' என்று உற்சாகத்துடன் கூவிக்கொண்டே வீட்டுக்குள் ஓடிவந்து மனைவியை அப்படியே வாரி அணைத்து மூன்று முறை சுழற்றி விளையாடினார்!

''விடுங்க, விடுங்க! என்ன இது விளையாட்டு?'' என்று அமுதா செல்லமாகக் கணவனைக் கோபித்துக்கொண்டார்.

''அமுதா! நீ பாஸ் பண்ணிட்டே, என் அமுதா இனி ஒரு வக்கீல். உனக்காக ஒரு தனிஆபீசையேஅமைத்திருக்கிறேன். வா இப்போதே காண்பிக்கிறேன்!'' என்று கூறி அமுதாவின் கரங்களைப் பற்றிக் 'கரகர'வென்று இழுத்துக்கொண்டு ஆபீசுக்குள் ஓடினார் ஜெய்சங்கர்.

ஆபீசைக் கண்ட அமுதா ''இத்தனை பெரிய ஆபீஸ் எதுக்கு?'' என்று கேட்டார்.

''நீ பெரிய வக்கீல் உனக்கு இது வேண்டாமா?'' என்று ஜெய்சங்கர் தொடர்ந்து ''அமுதா! நீ முதல் கேஸ் எடுத்து நடத்துகிறநாளன்று பெரிய பார்ட்டிக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன். அதிலே நம்ம சிநேகிதர்கள், உறவினர்கள் எல்லோரும் வருவார்கள். பிரமாதமாக நடந்த உத்தேசம்!'' என்றார் உற்சாகமாக.

''அது சரி, இது ஆபீசுன்னு நம்ம வீட்டிலிருந்து ரொம்ப தூரம் இருக்கே!'' என்றார் அமுதா.

''அதனால் என்ன; இது பெரிய விஷயமா?'' என்றார் ஜெய்சங்கர்.

''நம்மவீட்டிலேயே ஆபீசையும்வைத்துக்கொண்டால் என்ன'' என்று அமுதா கேட்டார்.

''ஆபீசும் வீடும் ஒண்ணாயிருந்தால் ஆபீசும் உருப்படாது! வீடும் உருப்படாது'' என்று கூறி மனைவியின் யோசனையை ஜெய்சங்கர் கிண்டல் செய்தார்.

'பெண்ணை வாழவிடுங்கள்' என்ற படத்திற்காக இக்காட்சி கோல்டன் ஸ்டூடியோவில் படமாக்கப்பட்டது. ஜெய்சங்கர் மனைவி அமுதாவாக கே. ஆர். விஜயா நடித்தார். இப்படத்தின் கதை வசனம் டைரக்ஷன் பொறுப்புகளை ஏ. கே. சுப்பிரமணியம் ஏற்றிருக்கிறார்.

## எங்க அக்கா

நடிகர் ஏ. வி. எம். ராஜன் 'சோ', குலதெய்வம் ராஜகோபால் ஆகிய மூவரும் நண்பர்கள். ராஜனிடம் வைரம் கிருஷ்ணமூர்த்தி வாடகை பாக்கி கேட்க வந்தார். அதேசமயம் 'சோ' விடம் மற்றொருவர் வட்டி வசூலிக்க வந்தார். அப்போது குலதெய்வம் ராஜகோபாலிடம் டீக்கடை பாக்கி வசூலிக்க இன்னொருவர் அவ்வீட்டிற்குள் நுழைந்தார்.

இக்காட்சி ரேணுகா புரொடக்ஷன் ஸாரின் 'எங்க அக்கா' என்றபடத்திற்காகப் படமாக்கப்பட்டது.

இப்படத்தில் மற்றும் சவுகார் ஜானகி, மனோரமா, ரேணுகா, பாரதி, தேவி, சுந்தரராஜன், சிவகுமார் ஆகியோர் நடிக்கின்றனர்.

ரவீந்தர் கதை வசனம் எழுத, ராகவன் டைரக்ட் செய்கிறார்.

## சிறுகதை

(3ம்பக்கத் தொடர்ச்சி)

நானும் போருக்குச் சென்றேன். அவளும் காசநோயால் இறந்தாள். உன்னைத் தேடித்தேடி அலுத்தேன். இன்றே கண்டேன். கண்ணே, நீ இந்த வீலரைக் காதலிக்கிறாயா? வீலர் உன் கதை என்ன?

வீலர்: நானும் அனாதை; இவளுக்கு அன்னையைத் தெரியும். எனக்கு அதுவும் தெரியாது. நானும் அனாதை விடுதியில் வளர்ந்து படித்து பெர்லின் கழகப் பட்டம் பெற்றேன். இவள் என் உயிர்! இருவரும் ஆடுவோம் பாடுவோம் மேடையில் நடிப்போம்.

வில்லி: அப்படியானால் இருவரும் ஒன்றாயிருங்கள் நன்றாயிருங்கள். இதோ உங்களுக்கு ஒரு பெரிய காமிரா வாங்கியளிக்கிறேன்- பெர்லினில் எனது வீடுள்ளது.

நான்: உங்கள் வீட்டில் மேற்கு பெர்லின் பெண் இருக்கலாமா? நீரும் ஒற்றரல்லவா?

வில்லி: ஒற்றன் என்ன வேண்டுமென்றாலும் செய்வான். இதோ இவள் என் மகள், கிழக்குப் பெர்லின் காரி என்று பதிவு செய்துவிடுகிறேன்.

அல்லி: அது போதாது அப்பா. கிழக்கும் மேற்கும் ஒரே பெர்லினாக நாங்கள் இருவரும் போராடுவோம். அந்தப் போராட்டத்தில் அப்பாவும் சேரவேண்டும்.

வில்லி: கண்ணே, எனக்கும் அந்த எண்ணம் உண்டு. ஆனால் அதற்கேற்ற காலம் வரவில்லை. இப்போதுதான் போர்வெறி தணிந்து சமாதானமணியடித்துள்ளது. போர்க்குப்பைகளிலிருந்து நல்ல காலம் தலைநீட்டுகிறது. சுற்றிலும் பார், இட்லர் அரண்மனை தவிடுபொடி. அந்த இடிகுப்பையை அள்ளவே ஐந்தாண்டுகளாகும். டிரெஸ்டனைப் பார். அது மாபெரும் மின்சார நகரம். அமெரிக்க குண்டு, டிரெஸ்டனை அழித்தது. பெர்லினில் இடிந்து குவிந்த மாளிகைகளைப்பார், குண்டு வீச்சினால் குபேரபுரி குட்டிச்சுவரானது. மாளிகைச் செல்வம் மண்ணானது ஐரோப்பா இப்போதுதான் நாசவெறி தணிந்து, ஆசை முகம் காட்டிப் புன்னகைக்கிறது. இப்புறம் ரஷ்யா அப்புறம் அமெரிக்கா. பலமான சேனைவைத்து ஜெர்மனியை அடக்கியாளுகின்றன சுதேசமக்கள் உள்ளம் துடிக்கிறது.

அல்லி: என் உள்ளமும் குமுறுகிறது. ஒற்றப்பா நீ என்னைச் சிறையிலிட்டாலும் சரி, சித்திரவதை செய்தா...

## செய்யுளின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ணர்ச்சி என்பது தானே கண்டறிந்ததும் பிறர்க்குச் சொல்லொணாததுமான ஒரு தனிச்சிறப்புடைய அநுபூதி எனக்கொள்ளவேண்டியதில்லை. கவி மக்களுடைய மனசைக்கவரும் இயல்பினதாகலின், கவி பொதுவுண்மையை உரைக்கும் என்றார் அரித்தாத்தில். நித்தம் வேதம் பாடிக்கொண்டிருக்கும் என்பது போலக்கவி என்றும் இன்பந்தந்து கொண்டிருக்குமெனச் சிலர் புனைந்துரைப்பர். வேதவுண்மைகளை உரைத்தற்கு முனிவர்கள் தோற்றுதல்போல் கவியின்பத்தை அளித்தற்குப் புலவர்கள் தோற்றுவார்கள் எனப் புனைந்துரைத்தல் உண்டு.

# உங்கள் உடைகளை

நீங்கள் புத்தம் புதிய உடைகளை வாங்கி அணிவதாலோ அல்லது மற்றவர்களது உடைகளைப் பார்த்து ... துணியில் நீண்ட கைகள் அமைத்து ரவுக்கைகளோ அல்லது கவுண்களோ தயாரித்து அணிந்தால் அழகாக இருக்கும். இவர்களின் உடல் ...

மறியற்சாலை என்று சொன்னவுடனேயே மனதில் ஒருவித வெறுப்பு, பயம், அருவருப்பு எல்லாம் ஏற்படுகின்றன. ஆனால் இவைகளுக்கு மாறாக மகிழ்ச்சியையும் விருப்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் உடைகளை

நீங்கள் புத்தம் புதிய உடைகளை வாங்கி அணிவதாலோ அல்லது மற்றவர்களது உடைகளைப் பார்த்து அவைகளைப்போல் அணிவதோ நாகரீகமல்ல. உங்கள் உடலமைப்புக்கும் நிறத்திற்கும் தக்கவாறு உடைகளைத் தேர்ந்தெடுங்கள். இவ்வாறு தேர்ந்தெடுத்து உடுத்துவதே இன்றைய நாகரீகம் எனக் கொள்ளப்படுகிறது.

ஒவ்வொருவரும் அவரவர் உடல் அமைப்பில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து அவ்வுடலமைப்புகளுக்கேற்ப உடைகளைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். இதுவே உடைக்கலையின் முக்கிய அம்சமாகும். ஒரு நிலைக்கண்ணாடிமுன் நின்று கீழ்க்காணும் உடலமைப்புகளில் உங்கள் உடலமைப்பு எந்தவகையைச் சேர்ந்தது எனக் கண்டுகொள்ளுங்கள்.

- நீண்ட கழுத்தோடு சரிந்த தோளும் உடைய உடலமைப்பு.

## எடுப்பாக

- அகலமானஇடுப்போடு கூடிய உடலமைப்பு.
- உயரமான மெலிந்த உடலமைப்பு.
- அகலமான மார்பு பரந்த தோள் ஆகியனவுடைய உடலமைப்பு.
- குறுகிய கழுத்துடைய உடலமைப்பு.
- குட்டையான உடலமைப்பு.

இந்த உடலமைப்புகளுள் எவ்வகையைச் சேர்ந்தவரும் தங்களுக்கான உடைகளைத் தயாரிப்பதில் கவனிக்க வேண்டியவை:

நீண்ட கழுத்தோடு சரிந்த தோளுடைய உடலமைப்பு உடையவர்களுக்கு;-

இவர்கள் தைக்கும் ரவுக்கைகள் கவுண்கள் ஆகியவற்றிற்கு தோள் பக்கம் சுருக்கு வைத்தும், கொலர்கள் வைத்தும் தைத்தணிவது சிறந்தது. இவர்களுக்கு கட்டம் போடப்பட்ட துணிகள் மற்றவைகளிலும்பார்க்கக் கூடப் பொருத்தமாக இருக்கும்.

அகலமான இடுப்போடு கூடிய உடலமைப்புடையவர்களுக்கு:-

இந்தவகை உடலமைப்புடையவர்களுக்கு பெரிய பூக்கள் போட்ட ஆடைகள் பொருத்தமாக அமையாது. சிறு சிறு பூக்கள் போட்ட துணியில் நீண்ட கைகள் அமைத்து ரவுக்கைகளோ அல்லது கவுண்களோ தயாரித்து அணிந்தால் அழகாக இருக்கும். இவர்களின் உடல் நிறத்துக்கேற்ப புடவையும் பொருந்தியிருப்பது நல்லது.

உயரமான மெலிந்த உடலமைப்புடையவர்களுக்கு:-

இவர்கள் உடைகளை அணியும்போது இடுப்புக்குச் சற்று மேலே அணிதல்வேண்டும். கோடுகள் போடப்பட்ட துணிகளை இவர்கள் விரும்பினுல் கோடுகள் உடலுக்குக் குறுக்காக அமைந்த உடைகளை வாங்கியணிந்தால் கூடுதலான உயரத்தைக் கட்டுப்படுத்தலாம். பூப்போட்ட துணிகள் இவர்களுக்குச் சிறப்பாக அமையும். ரவுக்கைகளின் கழுத்துக்கு பட்டிவைத்துத் தைத்தால் நல்லது.

அகலமான மார்பு பரந்த தோள் ஆகியனவுடைய உடலமைப்புடையவர்களுக்கு:-

அகலமான கரையோடு கூடியதும் பெரிய பூக்கள் உடையனவுமான ஆடைகளை இவர்கள் அணியக்கூடாது. ரவுக்கை, கவுண் ஆகியவற்றின் கழுத்துகள் பெரிதாக இருத்தல நல்லது.

குறுகிய கழுத்துடைய உடலமைப்புடையவர்களுக்கு:-

இவர்களுக்குக் கொலரோ அல்லது கழுத்துப் பட்டியோ சிறிதும் பொருந்தாது. ரவுக்கைகளின் கைவெட்டு தோள் அளவில் சரிவர அமையத் தக்கவாறு அமையவேண்டும். பூப்போட்ட துணிகளும் இவர்களுக்கு அவ்வளவாகப் பொருந்தாது.

குட்டையான உடலமைப்புடையவர்களுக்கு:-

இவர்கள் பெரிய பூப்போட்ட துணிகளைத் தவிர்க்கவேண்டும். ரவுக்கைகளின் கை நீளமாகவிருப்பதோடு ரவுக்கையும் இடுப்பளவுக்கு நீண்டதாகவிருப்பின் இவர்கள் உயரமாகத் தோற்றமளிப்பார்கள். சேலையினது நிறத்திலேயே ரவுக்கையையும் இவர்கள் அணிந்தால் நல்லது. கோடுகள் போடப்பட்ட சேலையணிய விரும்பினுல் கோடுகள் உடலுக்குக் குறுக்காகவன்றி உடலுக்கு நீளவாட்டில் அமைந்த சேலைகளைத் தேர்ந்தெடுத்து அணிவது இவர்களுக்கு பொருத்தமாக இருப்பதோடு இவர்களை உயரமாகவும் எடுத்துக் காட்டும்.

## அணியுங்கள்

---

மறியற்சாலை என்று சொன்னவுடனேயே மனதில் ஒருவித வெறுப்பு, பயம், அருவருப்பு எல்லாம் ஏற்படுகின்றன. ஆனுல் இவைகளுக்கு மாருக மகிழ்ச்சியையும் விருப்பத்தையும் மனக்கவர்ச்சியையும் தரத்தக்கவகையில் அவுஸ்திரேலியாவில் ஒரு மறியற்சாலை அமைந்திருக்கிறது. சிட்னி நகரிலுள்ள 'லோங்பே' என்னும் இச்சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டிருக்கும் 80க்கும் மேலான பெண்கள் எந்தவிதமான மனத் துன்பத்தையோ உடற்துன்பத்

# உல்லாசமான வாழ்க்கைக்கு இதோ ஒரு மறியற்சாலை!

தையோ அனுபவிப்பதில்லையாம்.

அவர்களுக்கு உல்லாசமாகப் பொழுதுபோக்குவதற்கேற்ற உணவு உடை வசதிகள் யாவும் தாராளமாகக் கிடைக்கின்றன. இன்னும் இவர்கள் உணவருந்தும்போது ஏனைய சிறைச்சாலைகளில் உள்ளதுபோல தாங்கள் தனித்தனியாக உட்கார்ந்து உண்ணவேண்டியதில்லை. மாருக எல்லோருமாகச் சேர்ந்து மறியற்சாலைக் கன்ரீனில் சுடச்சுடப் பரிமாறப்படும் உணவை ஒருவரோடொருவர் அளவளாவிக் கொண்டபடி ஆனந்தமாக உண்கின்றனர். இவர்கள் மத்தியில் நோயாளர்கள் கர்ப்பிணிகள் இருப்பின் அவர்களுக்கு விசேஷ உணவு அளிக்கப்படுகிறது. இம் மறியற்சாலையில் சமையலறையை அடுத்துத் தையல் அறை அமைந்துள்ளது. இவ்வறையில் நீண்டகாலக் கைதிகளுக்கே தையற்கலை கற்பிக்கப்படுகிறது. இங்கு தையல் பழகும் பெண்மணிகளே இச் சிறைச்சாலையிலுள்ள அனைவருக்கும் தேவையான உடைகளைத் தயாரித்துக் கொடுக்கிறார்கள்.

ஏனைய சிறைக் கைதிகளிலும் பார்க்க இவர்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் வாழ்கிருர்கள். அலங்காரமாகத் தைக்கப்பட்ட இரவு உடுப்புகளை உடுக்கிருர்கள். கண்ணைக் கவரும் இளஞ்சிவப்பு, பச்சை, மஞ்சள் வண்ணக் கவுண்களை அணிகிருர்கள். இவர்களுடைய படுக்கைகள், மெத்தை, தலையணைகளோடு கூடியவைகளாக உறங்குவதற்கேற்ற எல்லா வசதிகளும் உள்ளனவாக இருக்கின்றன. அறைகளிலுள்ள பொருட்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டு எந்தநேரமும் அழகுடன் காட்சியளிக்கின்றன.


இன்னும் இச்சிறைச்சாலையில் அறிவு வளர்ச்சிக்கென ஒரு நூல் நிலையமும் அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்த நூல் நிலையத்தில் வாரந்தோறும் ஒவ்வொரு கைதியும் 3 புத்தகங்களை எடுத்துப் படிப்பதற்கு வசதியும் செய்யப்பட்டிருக்கிறது. மற்றும் மனையியல் ஒப்பனைக்கலை, தொடர்பான விரிவுரைகளும் வழங்கப்படுகின்றன.

இவர்கள் விளையாடிப் பொழுது போக்குவதற்கேற்ற வசதிகளையும் அவுஸ்திரேலிய அரசாங்கம் இங்கு செய்து கொடுத்திருக்கிறது.

1962ம் ஆண்டு திறக்கப்பட்ட இச் சிறைச்சாலையில் எல்லா வசதிகளும் இருப்பதனுல் கைதிகளிடையே நட்பு மனப்பான்மையும் காணப்படுகிறது எனவும், இதுவரை காலமும் பிணக்குகளோ, கலவரங்களோ ஏற்படவில்லை எனவும் சிறைச்சாலை சுப்ரிண்டன் செல்வி வின்ஸ்மில் தெரிவிக்கிருர்.

---

குடும்பச் சுடர்



தயாரிப்பு

குணம்

மேலே கூறப்பட்ட குறிப்புகளை ஒவ்வொருவரும் கவனித்து உடையணிந்தீர்களாஞல் நிச்சயமாக உங்கள் இயற்கைத் தோற்றத்தைக் காட்டிலும் அழகாகத் தோற்றமளிப்பீர்கள்.

---

எழுதியபாடல்களாகும்.

இந்த சந்தர்ப்பம் எனக்கு கிடைத்திருக்காவிட்டால் நான் கவிஞன் ஆகி இருக்க முடியா[...]

இவ்[...]று வாலி கூறினுர்.

---

அவருடன் நாகர்கோவி[...] வெல்பேர் பிஸ்கட் [...]கம்பெனி அதிபர் எம். பி. அய்யாவும் புல்புல் தாரா கச்சேரி செய்கிருர். இ[...] காட்சி படமாக்கப்பட்ட[...]

''ஆபீசும் வீடும் ஒன்றுயிருந்தால் ஆபீசும் உருப்படாது! வீடும் உருப்படாது'' என்று கூறி மனைவி[...]யின் யோசனையை ஜெய்சங்கர் கிண்டல் செய்தார்.

---

## பூவையரே!

பூவோடும் பொட்டோடும் விளங்கவேண்டுமென பெரியோர்கள் வாழ்த்துவர். இந்தப் பூவுக்குச் சில சோம்பேறி மகளிர் படும்பாடோ பெரிது. எல்லோர் வீட்டிலும் பூந்தோட்டம் இல்லாததால் விஷேச காலங்களில் தேவைக்கு சில மாதர் வீடு வீடாக அலைவர் அல்லது பணத்தைச் செலவுசெய்து பூக்கடைகளிலே பழைய மலர்களையோ புதுமலர்களையோ ஒருவாறு வாங்கிவிடுவார்கள். சில வேளைகளில் இப்படிப் பணம் செலவழித்தாலும் கிடைக்காத நிலைவரமுண்டு.

## பூ

பூவையரே! பூவுக்காக ஏன் இந்த அவஸ்தை? நீங்களோ உங்கள் தேவையைப் பூர்த்திசெய்யவியலாதா? தூங்கி வழிந்து வீணுகத் தேய்க்கும் ஓய்வுநேரத்தைப் பயன்படுத்தி வீட்டின் முன்புறமுள்ள சிறு நிலப்பரப்பில் மல்லிகை, முல்லை, ரோஜா, செவ்வந்திபோன்ற நம் நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் உண்டாக்கக்கூடிய இந்த நறுமணச் செடிகளை நட்டுத் தினமும் நீரூற்றி பசளையிட்டு ஒழுங்காகக் கத்தரித்து [illegible] ஞல் இச்[illegible] விரும்புமளவுக்குப் பூவைச் சொரிந்து உங்களையும் உங்கள் இல்லத்தையும் கவர்ச்சியாகக் காட்சியளிக்கச்செய்யும்.

இம்மலர்களுக்காக நீங்கள் பூக்கடைக்காரரையும், பிறரையும் நாடத்தேவையில்லை. இம்மலர்களைக் கொய்து நீங்களே மாலை தொடுத்து உங்கள் கூந்தலில் நாளாந்தம் அணிந்து மகிழலாம். அத்துடன் காலை, மாலை தெய்வவழிபாட்டுக்கும் பயன்படுத்தலாமல்லவா?

எங்கும் வளரத்தக்க இந்த நறுமண மலர் செடிகளைத் தவிர 'அன்தூறியம்', 'பாபட்டன்ஸ்', 'கனுடியா' 'டெயிலியாஸ்', 'டெய்சி', 'ஒகிட்ஸ்' போன்ற பல குளிர் பிரதேசங்களில் வளரக்கூடிய அழகான பூச்செடிகளையும் சாடிகளிலும், நிலத்திலும் நட்டு நாமும் வளர்க்கலாம். மலைநாட்டிலுள்ளவர்கள் இந்தப் பூவினங்களைப் பயிர்செய்து

## வேண்டுமா?

அதன்மூலம் நல்ல பணவருவாய் அடைகிருர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பூந்தோட்டம்தானே பூச்செடிகள்தானே என நாம் அலட்சியமாக எண்ணக் [illegible] இந்த நறுமண[...]ள் வீட்டின்முன் கண்ணுக்குக் கவின் மிகு காட்சியாகமட்டுமன்றி பன்னீர், முகப்பவுடர், அத்தர் போன்ற பல வாசனைப் பொருட்களைத் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. பிரான்ஸ் தேசத்தின் பொருளாதாரத்துக்கு இத்தகைய உயர்ந்த வாசனைத் திரவியங்களை மலர்களைமூலப்பொருளாகக்கொண்டு தயாரித்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில் உதவியளித்துள்ளதை அறிந்தவர்களுக்கு மலரின் முக்கியத்துவம் விளங்கும். எனவே மகளிராகிய நீங்களும் மணமுள்ள மலர்களைமலர்விக்கும் செடிகளைச் செழிக்கச் செய்யுங்கள்.

---

[...]கொண்டிருக்குமெனச் சிலர் புனைந்துரைப்பர். வேதவுண்மைகளை உரைத்தற்கு முனிவர்கள் தோற்றுதல்போல் கவியின்பத்தை அளித்தற்குப் புலவர்கள் தோற்றுவார்கள் எனப் புனைந்துரைத்தல் உண்டு. ஒரு கவியின் அழகை உள்ளமே ஆராய்ந்து நுகரும். இசை செய்யுள் சித்திரம் என்பவற்றின் இனிமை கவிநயம் அழகு என்பவை பூதப்பொருள்களுக்கு உரிய பூதகுணங்கள் என எண்ணுதல் தவறு. அவை பூதகுணங்களன்றி உள்ளம் உணரும் குணங்களாகும். சித்திரத்தை அடிமட்டத்தாலும் பாடலை யாப்பாலும் அளந்து நுகரவியலாது. கவியின் திறமை அதன் கருத்தின் பெறுமதியைப்பொறுத்ததாகும். ஒரு செய்யுள் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருட்களின் திறனை வடுணிக்குமாயின் அது பெறுமதி உடையதாகும். சந்தத்திற்காகச் செய்யுளைச் சுவைத்தல் பெருந்தவருகும். பாடலின் பண்ணை மாத்திரம் சுவைக்கவிரும்புவோர் வீணையைத்தடவிக் கொண்டிருக்கலாம்.

(தொடரும்)

---

[...] அமெரிக்கா, பலமான சேனைவைத்து ஜெர்மனியை அடக்கியாளுகின்றன சுதேசமக்கள் உள்ளம் துடிக்கிறது.


அல்லி: என் உள்ளமும் குமுறுகிறது. ஒற்றப்பா நீ என்னைச் சிறையிலிட்டாலும் சரி, சித்திரவதை செய்தாலும் சரி பெர்லின் நமதாக வேண்டும். அங்கே நமது கொடியே பறக்கவேண்டும்- நீயும் நாட்டுக்குதவிச் சிறக்கவேண்டும்.

வில்லி: கண்ணே, இரத்த பாசம் நம்மைச் சேர்த்தது. இருவர் உள்ளமும் ஒன்றே எனினும் நான் இந்த உடுப்பில் உள்ளமட்டும், உள்ளத்தையும் இரும்பாக்கிக் கொள்ளவேண்டும். அடுத்த ஆண்டு எனக்குப் பென்ஷனுடன் விடுதலை கிடைக்கும். உடனே ''ஒரே பெர்லின், ஒரே ஜெர்மனி, ''ஒரே உலகம், ஒரே மனிதசமுதாயம்'' என்ற பல்லவியுடன் ஒருமைப் பணி செய்வேன். அதுகாறும் நீயும் வீலரும் காதல் வனத்தில் களித்து, உலாவுங்கள்.

அல்லியும், வீலரும் வில்லியும் படம் பிடித்துக்கொண்டனர். மூவரும் எனக்கு அரிய துணைசெய்தனர்- அல்லியும் வீலரும் காதலும் கலையுமாக வாழ்ந்தனர்.

---


மங்கையர் அங்கங்களுக்கு அதீத அழகைக்கொடுப்பது
நவ நாகரிக அமைப்பு வாய்ந்தது.
உத்தரவாதமுள்ளது
தெய்வா நகை மாளிகையின்
தங்க வைர நகைகள்.
இன்றே விஜயஞ்செய்யுங்கள்
தெய்வா நகை மாளிகை
(முட்டாஸ்கடைச் சந்திக்கு அருகாமை)
173, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.



"லீடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ காலமேஸ்
(Nylon & Cotton)
லீடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் தமிழ்

# தெய்வம்

— வே. குமாரசாமி —

தெய்வம் உலகில் ஒன்றே
தெரிந்து கொள்ளல் நன்றே
வைய மீதில் அன்பே
வடிவம் ஆகி வருவான்

அறிவில் உறையும் இறைவன்
அறிவ தற்கோ அரியன்
பெறுதற் கெளிது அடியார்
பெயருள் உலவும் கலைஞன்

சக்தி என்றும் சொல்வார்
தருமம் என்றும் கொள்வார்
திக்குத் தோறும் அவனே
தெரிவான் அன்பர்க் கெல்லாம்

உண்மை பேசி வாழ்ந்தால்
உள்ளம் தூய்மை யானல்
கண்ணுக் கெட்டாத் தெய்வம்
கண்ணில் தெரியும் தானே.

# இறைவனுக்கே நாமென்று சத்தியமேற்றபின் முற்றிலும் நமக்காகவே வாழ்கின்றேமே

## உலகம் இறைத்தொண்டுக்கான ஒரு சிறிய இடம்

கடந்த இதழில் இஸ்லாத்தின் ஏக தத்துவக்கொள்கையை நிலைநாட்டும்போது ஏற்பட்ட இன்னல்பற்றியும், பின்னர் அபிசீனியாவிலே நஜ்ஜாஸி மன்னன் இஸ்லாத்தைத் தழுவியதால் சிறிது ஆதரவுகிடைத்தமை பற்றியும், அதேவேளையில் மக்காவின் சூழ்நிலை ஏகதத்துவத்திற்குப் பாதகமாயிருந்ததோடு முகம்மது நபி (ஸல்) அவர்களைக்கொன்றுவிடவும் முயற்சிகள் ஏற்படுவதையறிந்து முஹம்மது நபி (ஸல்) அவர்களும் தோழர் அபூபக்கர் சித்தீக் (றழி) அவர்களும் மதீனை நகர் சென்று அங்கு தங்கியமைபற்றியும் வாசித் முதல் குத்பா (சமய வழிபாடு) பிரசங்கம் வாதீஸாலிம்' எனும் இடத்தில் அண்ணல் நபியவர்களால் நடத்தப்பட்டது. அங்கு தங்கள் தோழரான ஸஹாப்பாக்களோடு தொழுகையைநிறைவேற்றினர்கள். மதீனுவிலுள்ளோர் நபி நாயகம் (ஸல்) அவர்களை எதிர்கொண்டு வரவேற்று ''தல அலபற்று'' எனும் அறபுக்கீதம் பாடிப்புகழ்ந்தார்கள். இங்கு இஸ்லாம் பரவுவது யூதருக்கு ஆச்சரியமாகவிருந்தது.

### யூதரின் பொருமை

மதீனுவில இஸ்லாம் பரவுவதைச் சகியாத யூதர் கோபம் பொருமை ஆகிய


## இஸ்லாத்தின் ஏக தத்துவக்கொள்கை

தோம். அவ்வாறு சென்றதையே முஸ்லிம்கள் (''ஹித்றத்'') யாத்தினர் என்று கூறுவர். அதுமட்டுமன்று. முஸ்லிம்களின் இதிகாசங்களும் வைபவங்களும் (ஹிஜ்றத்) யாத்திரை செய்தவருடத்திலிருந்தே கணக்கிடப்படுகின்றன. எனவே ஹிஜ்ரி ஆயிரத்து முன்னூற்றிஎண்பத்தொன்பதாம் வருடத்திலே வாழ்ந்துகொண்டிருக்கும் முஸ்லிம்களாகிய நாம் சில சிறந்த அம்சங்களை எம் மனத்திருத்தி வாழமுயலவேண்டும். நாம் வாழ்வதோடமையாது நம் சகோதர முஸ்லிம்களும் அவ்வண்ணம் வாழ ஒத்தாஸ்சை புரியவும் வேண்டும்

அகிலம் போற்றும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மதீனு நகரில் அன்சாரீன்களின் உபசார உதவியுடன் தங்கள் எளியவாழ்க்கையை வற்ருலுந்தப்பட்டு அப்துல்லர் இப்னு உபை என்பவர் தலைமையில ஒரு கூட்டத்தைத் திரட்டி இஸ்லாமியர்களையும் நபிபெருமானுர் (ஸல்) அவர்களையும்ஏளனஞ்செய்து நிந்தித்தனர். இதன் பயனுக ஒரு சமாதான ஒப்பந்தமும் செய்யப்பட்டது. எனினும் அவ்வொப்பந்தம் பயன் தரவில்லை.

### தற்காப்பு யுத்தம்

நபிப்பட்டம் கிடைத்து 13 வருடங்கள் வரை சொல்லொணுக் கொடுமைகள் நிகழ்ந்தபோதும் பொறுமையுடனும் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைந்தும் வந்த முஸ்லிம்கள் ஈற்றில் வேறுவழியின்றி வாளேந்தித் தற்காப்புயுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. எனவே பெருமானுர் நபி



இறைவன் மீதுள்ள அசையாத நம்பிக்கையை மென்மேலும் உறுதிப்படுத்துவதாகும். அவ்வாறறிதல் இன்றைய முஸ்லிம்களின் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தையும் உண்டுபண்ணுமாகையாற் சுருக்கமாக விளக்குதல் மிகப்பொருத்தமுடையதாகும். இன்றைய முஸ்லிம்கள் இறைவன் மீதுள்ள நம்பிக்கையை இழந்தவர்களாகவும் உலகையும் அவற்றிலுள்ள அழியும் பொருட்களை நம்பியும் வாழ்கின்றனர். அதன் காரணமாக வாழ்வில் வளமற்று வரண்டுகாணப்படுகின்றனர். இலட்சியப் பாதையிலிருந்து வெகுதூரம் விலகிவிட்டனர். இஸ்லாமிய உலகிலே தோல்வியுற்றவர்களாயும் விளங்குகின்றனர். மீண்டும் முன்னர் போன்று வெற்றி வீரர்களாகவும், ஜெயசீலர்களாகவும் ஆகுதற்கு, [illegible] பத்றுயுத்தம் உணர்ச்சியூட்டுமெனவுன்னியே இதைக் குறிப்பிடுகின்

வர்கள் குறிப்பிட்ட பணத்தைக் கொடுத்து மீண்டும் தம் இடம் செல்ல அனுமதிக்கப்பட்டன. ஏழைகள் மதீனுவிலுள்ள முஸ்லிம் குழந்தைகளுக்கு அறிவுபுகட்ட (எழுத, வாசிக்க ஒழுங்கு செய்யப்பட்டனர். இந்த நேர்மையான கொள்கையும், இரக்க சிந்தையும் இவ்விருபதாம் நூற்றண்டில் வாழும் மேல்நாட்டவர்களிடத்திலும்இல்லாமை கண்டு வருந்துவதாக இதிகாச ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இங்கு சிந்தனைக் கெடுத்துக்கொள்ளும் விடயம் யாதெனில், இறைவன்மீது பலமான நம்பிக்கையுடன் வாழ்பவன் எப்போதும் வெற்றியாளனுக விளங்குவான் என்பதேயாகும். இவ்வாறு வாழும் மனித மாணிக்கங்கள் இன்றும் இல்லாமலில்லை என்பதை

நாம்மறந்துவிடுதல் கூடாது. இப்பொழுது நாம் சிந்தித்துப் பார்ப்போம். எமது ஜீவியம். வாழ்க்கை, வணக்கம் யாவும் இறைவனுக்கே என்று விசுவாசப் பிரமாணம் செய்துள்ளோம். ஆனுல் நம்முடைய ஜீவியம், வாழ்க்கை அனைத்தும் நமக்கே என்று இன்று வாழ்கின்றேம். உணவின்றி உறக்கமின்றி உற்ற மனைவியின்றி ஓடியோடி உழைத்துக்கொள்வதே நமது நோக்கமாய் இருக்கின்றது. ஒழிவின்றி. ஓய்வின்றித் தேடிய திரவியம் நாம் இறக்கும்போது என்ன உதவியைத்தான் செய்திடுமோ? சிந்தனை செய்து சீர் பெறுக.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், இவ்வுலகம் அவ்வுலகுக்குத் தேவையான-இறைவனுக்கு இணக்கமான நல்ல காரியங்கள் (நல்லமல்கள) செய்யுஞ்சிறிய இடமேதான். ஜெயசீலர், வெற்றி விறல் வேந்தர், சுவர்க்கத்தின் (மோட்சம்) அதி உன்னத பீடங்களில் நிலத்திருப்பவர் ஆகியோர் அழியும் இந்தச் சிறிய மாயவுலகத்தின் இச்சைகளுக்கு இடங்கொடாது, நல்லவை செய்து நல்லவராய் வாழ்வதற்குமட்டுமே இந்த உலகைப் பயன்படுத்திக்கொள்வர்.

எனவே சென்றது சென்றதே இனியாவது நல்ல காரியங்களைச் சீர்தூக்கிப்பார்த்துச் சிந்தனையோடு செயலாற்றி இறைவன் அருளையும் திருப்பொருத்தத்தையும் பெற்றுய்ய எல்லாவகையாலும் இணைந்துசெயல்படுவோமாக.

— எம். எச். எம். அப்துற்றஸ்ஸாக் —

அதிபர், வண்ணை அரசினர் முஸ்லிம் வித்தியாலயம்

ஆரம்பித்தார்கள். அவர்களுடனே சென்ற அபூபக்கர், உமர், உதுமான் அலி, அபூகுறைறு, அபூதர்இபாரி (றழி) அன்ஹும் ஆதியோர்களுக்கும் மதீனு நகரத்து

(ஸல்) அவர்கள் பிரசன்னமாயிருந்து 27 யுத்தங்களை நடத்தினுர்கள். அவை யாவன: 1. [illegible] தான்), [illegible] 4. முதல் பத்று. 5. பெரிய பத்று. 6. பனீஸலீம். 7.

# பயணம்

இரட்டை வெறிநாயின்
இருட்டுக் குரல் ஓலம்-

எட்டுக் கட்டை சுருதியிலே
முட்டுக் கட்டை போடுதற்கு
தொத்தத் தொடர்ந்து வரும்
சத்த ஆர்ப்பாட்டம்-

பாவம்,
பழி.

சனியன்....

எதிர்க்க மனம் இல்லை,
எறி கற்கள் தேவையில்லை,
பயணவழி நீளுமட்டும்
பயமில்லை,

ஆதலினுல்-

இடறுகின்ற உள்ளத்தை
இரு கையால் உள்ளழுத்தி
காதைக் குடைய விட்டு,
கண்பொத்திச் செல்லுகிறேன்
-கவலையில்லை.

—பண்ணுமத்தான்.

## 'ஈழநாடு'

# பொது அறிவுப்போட்டி-3

சென்றவார கேள்விகளுக்கு சரியான விடைகள் பின்வருமாறு: 1 பரிதாபாத். 2. டிகோல். 3. லிம்பியங். 4. ஹிரோஷிற்ரேு. 5. மடகாஸ்கர், 6. 70. 7. தகநாயகா. 8. பகைவர் உறவும் உறவோ. 9. நக்கீரர். 10. 3 நிமிடங்கள்.

### வெற்றி பெற்றவர்கள்

இரண்டே இரண்டு நேயர்கள் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி மற்றவர்கள் எல்லோரையும் தோற்கடித்துவிட்டார்கள். முதலில் திறக்கப்பட்ட சரியான விடையை அனுப்பி முதல் பரிசான பத்து ரூபாயைப் பெறுபவர்: வ. நடராசா, சிவபவனம், துன்னலை வடக்கு, கரவெட்டி இரண்டாம் பரிசான ஐந்து ரூபாயைப் பெறுபவர்: செல்வன் செ கனகராசா, மூத்த விநாயகர் கோவில் ஒழுங்கை, ஆனைக்கோட்டை.

## இந்த வார கேள்விகள்

1. டாக்டர் ஜாகிர் ஹுசேனின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்ட பாகிஸ்தான் பிரதிநிதியார்? 2. மலேசியாவின் தலைநகரம் எது? 3. சங்கீத திரிமூர்த்திகள் யாவர்? 4. திரு. எஸ் தொண்டமான் எந்த நாடாளுமன்ற தொகுதியின் பிரதிநிதி? 5. பாரதிதாசனின் சொந்த பெயர் என்ன? 6. பராக்கிரம சமுத்திரம் எங்கே இருக்கிறது? 7. இந்தியாவின் உணவு மந்திரி யார்? 8. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல' என்று கூறியவர் யார்? 9. மேடம், மிதுனம், கன்னி, பூரம், மகரம்-இந்த வரிசையில் சேராத சொல் எது? 10. இலங்கையில் காகிதத் தொழிற்சாலை எங்கே இருக்கிறது?

## விகட கவிதைப் போட்டி- 3

இப்போட்டியில் நேயர்களுக்கு வரவர ஆவல் அதிகரிக்கிறது. கிண்டலும் நையாண்டியும் நிறைந்த சுவையான கவிதைகள் பல வந்தன. போட்டிக் குழு பின்வரும் கவிதையைச் சிறந்ததென்று தெரிவுசெய்துள்ளது.

THE JAFFNA ACADEMY
&
School of Technology
Chundikuli, Jaffna.
Phone: No. 617
Re-opens on 3-5-69
Theory Classes for School Students preparing for the University Entrance December 1969 Examination Medicine and Engineering.
Classes after 4-30 p. M.
Director
29-4-69.
1554

தேவை

நெசவு செய்வதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். கருணு நெசவு நிலயம், ''கண்ணகிரி'', இடந்தரை ஒழுங்கை காங்கேசன்துறை. 974

விற்பனைக்கு

புதிய நிலையிலுள்ள டில்லருடன் கூடிய 25 சிறி 3426 இலக்க ப்யட் (Fiat) ட்ராக்டர். விபரங்களுக்கு 21, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போட்டியில் நேயர்களுக்கு வரவர ஆவல் அதிகரிக்கிறது. கிண்டலும் நையாண்டியும் நிறைந்த சுவையான கவிதைகள் பல வந்தன. போட்டிக் குழு பின்வரும் கவிதையைச் சிறந்த தென்று தெரிவுசெய்துள்ளது.

மினியுடை அணிந்து மினி டோப்பும் இட்டு
மினிக்குடை எடுத்து மினி பாக்குடன்-மினி மங்கை
மினி மான முடையவளாய் வீதி வழி வந்தால்
இனி உய்யுமோ உலகம் தன்.

## பரிசு பெறுபவர்

இதை எழுதியவர்: ப. சிவானந்தசர்மா, கோப்பாய் வடக்கு, கோப்பாய். இவருக்கு பத்து ரூபாய் பரிசு கிடைக்கும்.

பாராட்டுதலுக்குரிய வேறு பல கவிதைகளில் சி. கேதீஸ்வரன், சாந்தி தோட்டம், இணுவில் எழுதிய பின்வரும் கவிதையை மட்டும் கீழ்த் தருகிறோம்.

பட்டப் பகலினிலே பஸ் நிலைய சூழலிலே
பகிரங்கமாய்த் திரியும் பாவையரைப் பார்த்து
பல்லிளித்து பகிடிவிட்டு செருப்பின் பதமறிந்து
பள்ளிக்குச் சென்றுவிடும் மாணவரைக் காணீரோ!

## அடுத்த போட்டி

3-வது போட்டிக்கு நேயர்கள் 'வட்டிக்கடை முதலாளி'யைப்பற்றி ஒரு விகட கவிதை எழுதி அனுப்பவேண்டும் எங்கே பார்க்கலாம் உங்கள் பேனு வன்மையை!

### நிபந்தனைகள்

ஒவ்வொரு போட்டிக்குரிய விடையும் அதற்குரிய கூப்பனுடன் இணைத்து அனுப்பப்படவேண்டும். விடைகள் 12-5-69க்கு முன் பொதுஅறிவுப் போட்டி (3), 'ஈழநாடு', த. பெ. இலக்கம் 49 யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு வந்துசேர வேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனல் ஒவ்வொன்றுடனும் கூப்பன் இருக்கவேண்டும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது.

கூப்பன்

'ஈழநாடு' விகடகவிதைப் போட்டி-(3)

பெயர்.............................................

விலாசம்.............................................

.............................................

...திகதி .........................

கூப்பன்

'ஈழநாடு' பொது அறிவுப்போட்டி-(3)

பெயர்.............................................

விலாசம்.............................................

.............................................

திகதி.....................

ஆரம்பித்தார்கள். அவர்களுடனே சென்ற அபூபக்கர், உமர், உதுமான் அலி, அபூகுறைறு, அபூதர்இபாரி (றழி) அன்ஹும் ஆதியோர்களுக்கும் மதீனு நகரத்து வள்ளல்கள் தத்தம் இல்லங்களிலும், தோட்டங்களிலும் முறையே சரி பாதியைக் கொடுத்துதவினர். வரவேற்ற மதீனத்து வள்ளல்களை அன்ஸாரீன்கள் என்றும் இன்னல் விளைத்த மக்கத்துக் குறைஷிகளை (முஹாஜிர்கள்) வெறுத்தவர்கள் என்று இன்றும் அழைக்கப்படுகின்றனர்.

இவ்வாருக மதீனவை மத்தியதானமாக வைத்து இஸ்லாத்தின் ஏகத்துவக் கொள்கையை இதமாகவும் விளக்கமாகவும் அருளிவந்தார்கள் அண்ணல் நபி(ஸல்) அவர்கள். இஸ்லாத்தின் (ஸல்) அவர்கள் பிரசன்னமாயிருந்து 27 யுத்தங்களை நடத்தினார்கள். அவையாவன: 1. அப்வாஹ் (வத்தான்), 2. [illegible]வாத், 3. அஷ்ரா 4. முதல் பத்று, 5. பெரிய பத்று, 6. பனீஸலீம், 7. ஸவீக், 8. கத்பான், 9. நஜ்ரான், 10. உஹுது, 11. ஹம்ருஉல்அஸத், 12. பனீநுனைர், 13. தாதுர்ரிகாஃ, 14. கடைசிபத்று, 15. தூமதுல் ஜுந்துல், 16. கந்தக், 17 பனீகுறைளா, 18. பனீலஃயான், 19. தீகிறத், 20. பனில்முஸ்தலக், 21. ஹுதைபிய்யா, 22. கைபர், 23. உம்றதுல்கழா, 24. மக்காவைக் கைப்பற்றுதல், 25. ஹுனையின், 26. தாயிப் 27. தபூக் என்பவைகளாகும்.

இவற்றுள் முக்கியம் வாய்ந்த பெரியபத்று யுத்தத்தைப் பற்றி நாம் அறிவது முன்னர் போன்று வெற்றி வீரர்களாகவும், ஜெயசீலர்களாகவும் ஆகுதற்கு, பெரிய பத்றுயுத்தம் உணர்ச்சியூட்டுமெனவுன்னியே இதைக் குறிப்பிடுகின்றேன்.

### பெரிய பத்துறுயுத்தம்

பத்துறு என்பது மக்காவுக்கும் மதீனுவுக்கும் இடையிலுள்ள ஒருசிற்றூர். ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு றம்ழான் மாதம் 17-ம் தேதி நடந்தது இந்த யுத்தம் மிஸ்லிம்கள் 313 பேர் எதிரிகள் (குறைஷிகள்) 1000பேர். முஸ்லிம்கள் சரியானயுத்தப் பயிற்சியற்றிருந்தனர். அன்றியும் உற்றூர், உறவினர், மனைவி மக்கள் அத்தனையையும் இழந்து நிற்கும் நிலை. போதிய வாளாயுதங்கூட இல்லை. யுத்தத்தில் எதிரிகள் 70 பேர் கொல்லப்பட்டனர். முஸ்லிம்கள் 12 பேர் ஷஹீதானர்கள் (இறந்தனர்). இந்த யுத்தத்திலே தான் குறைஷிகளிலே மிகப் பிரசித்திபெற்ற அபூஜஹல், உத்பா, உமையா, வலீத் ஆகியோரும் கொல்லப்பட்டனரென்றுல் நாம் சற்றே சிந்திக்கத்தானே வேண்டும். ஆம்; இங்கே உண்மைக்கும் பொய்மைக்குமிடையிலே தான் யுத்தம் நடந்தது அதாவது அல்லாஹ்வுக்கும் அல்லாஹ் அல்லாதவைகளுக்குமிடையேதான் யுத்தம் நடைபெற்றது.

313 முஸ்லிம்களும் ஒரே கொள்கையினராய்த் தத்தம் ஜீவியத்தை அல்லாஹ்வின் பாதையில் அர்ப்பணிக்க உறுதி பெற்றுக் கொண்டனர். ஒருவர்கூடப் பின்னே திரும்புவதில்லையெனச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர். எவ்வித அச்சமோ கோழை நெஞ்சமோ கொள்ளவில்லை. ஒரே மூச்சிலே அல்லாஹ் அக்பர் என்ற கோஷத்துடன் இறை துணையோடு எதிரிகளைத் தாக்கினர்.

எதிரிகளின்நிலை பெருமானரையும் அவர்களின் தோழர்களான ஸஹாப்பாக்களையும் கொல்வதே நோக்கமாக இருந்தது. இறைவனைப்பற்றிய சிந்தனையோ அல்லது உண்மை, நேர்மையைப் பற்றிய சிந்தனையோ அவர்களது (குறைஷிகள்) நெஞ்சத்தில் உரம் பெறவில்லை. எனவே உலக சம்பிரதாய முறையிலே எண்ணங்கொண்டு சூழ்ச்சிகளும் நயவஞ்சகங்களும் கையாளப்படலாயிற்து. இறுதியிலே எதிரிகள் மக்காவை நோக்கி ஓடலாயினர். (குறைஷிசள்) வெற்றி பெற்ற தம் கைவசப்பட்ட கைதிகளை எதுவும் செய்யவில்லை. பணம் படைத்த

இவ்வாறு வாழும் மனித படுத்திக்கொள்வர். மாணிக்கங்கள் இன்றும் எனவே சென்றது சென் இல்லாமலில்லை என்பதை [illegible]றதே இனியாவது நல்ல காரி

இலக்க பியட் (Fiat) [illegible]டர். விபரங்களுக்கு 21, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 994

## இம்மைக்கும் மறுமைக்கும்..

(2-ம்பக்கத்தொடர்ச்சி)

வரது வேண்டுகோளின்படி எழுந்தருளியிருந்து சிவலிங்கம் தாபித்துப் பூஜை செய்து இக்கேதார விரதத்தை அநுட்டித்தார். அதனுல் மகிழ்வடைந்த இறைவன் சாந்நித்தியமாகி அருள் புரிந்தார். இறைவனை ஒருபோதும் விட்டுப் பிரியாத பெரும்பேற்றை அருளும்படி தேவி வேண்டுதல்செய்யஇறைவன்அதற்கு இணங்கித்தமதுஇடப்பாதித் திருமேனியை அன்னைக்கு அருளினர். இந்த விரதத்தை அநுட்டிக்கும் மக்கள் யாவருக்கும் போக மோட்சம் இரண்டையும் அருளவேண்டுமென உமையம்மையார் வேண்ட இறைவனும் அப்படியேயாகுக என அருள் புரிந்தார். அர்த்த நாரீசுவரத்திருத் தோற்றங்குறித்த அப்பர்தேவாரம் வருமாறு:-

"புதுவிரி பொன்செ
யோலை யொருகாதொர்
காது சுரிசங்க நின்று
புரள
விதிவிதி வேதகீதமொரு
பாடுமோத மொருபாடு
மெல்ல நகுமால்
மதுவிரி கொன்றைதுன்று
சடைபாக மாதர் குழல்
பாகமாக வருவார்
இதுஇவர் வண்ண வண்ண
மிவள் வண்ணவண்ண
மெழில் வண்ண
வண்ண மியல்பே."

இவ்விரதத்தை அநுட்டிக்கும் முறைமை:-

"கேதாரகௌரிநோன்பு" என்ற விரதம் ஐப்பசி மாசத்து அபரபக்கச் சதுர்த்தசியில் அநுட்டிப்பது. புரட்டாதி மாசத்துப் பூர்வபக்க அட்டமியில் தொடங்கி ஐப்பசி மாச அபரபக்கச் சதுர்த்தசி ஈருன 21 நாட்களில் இந்த விரதத்தை அநுட்டிப்பது உத்தமமாகும். விரதம் அநுட்டிப்பவர்கள் தொடக்க தினத்தில் ஆசாரசீலராய்ச் சங்கற்பஞ் செய்துகொண்டு, 21 இழை கொண்டு முறுக்கிய நூலினுல் காப்புக்கட்டிக் கொண்டு இறைவனை வழிபட்டு ஒவ்வொருநாளும் சூரியாஸ்த்தமனத்தின் பின் போசனம்செய்து தருப்பையில் சயனிக்கவேண்டும். இறுதி நாளாகிய சதுர்த்தசியில் உபவாசமாக இருந்து அடுத்த நாள் அமாவாசைத் தினத்தில் பாரணஞ்செய்க. இயலாதவர் அபரபக்கப் பிரதமை முதல் சதுர்த்தசி ஈருன பதினான்கு நாட்களாவது, அதுவும் இயலாதவர் அபரபக்க அட்டமி முதல் சதுர்த்தசி ஈருன 7 நாட்களாவது, இன்றேல் ஒரே நாளான ஐப்பசி அபர சதுர்த்தசியிலாவது இதனை அநுட்டிக்கவேண்டும்.

இந்த 21 தினங்களிலும் சிவாலயங்களில் விசேட அபிஷேகம், ஆராதனை' உற்சவம் முதலிய சிறப்புக்கள் செய்து, இறைவனை இறைவிவழிபாடு செய்தமையை விளக்கி மக்கள் இறைவன் திருவருளைப்பெற வாய்ப்பு அளிக்கவேண்டும்.

எமது ஈழத்திருநாட்டிலே இந்த விரத அநுட்டானம், பூஜை வழிபாட்டுச்சிறப்புக்கள் திருக்கேதீசுவர ஆலயத்தில் ஆரம்பிக்கப்படவேண்டும். திருக்கேதீசுவர ஆலய நிர்வாக அமைப்புச் சபையார் இதற்கு ஆவன செய்வார்களாக.


ஷெல் களைப்புற்கொல்லிகள் "எம்-50", "டி"
ஏக்கருக்கு ரூ. 5/-க்கும் குறைந்த செலவில்
விளைச்சல் 30%
ஏற்றமடையச் செய்கின்றன.

உங்கள் நெல் விளைச்சல் சராசரிக்கும் குறைவாக இருக்கிறதா? ரூ. 5/-க்கும் குறைவான அல்லது ஆக மூன்றில் ஒரு புசல் நெல்லின் விலை அளவு செலவில் ஒவ்வோர் ஏக்கரிலும் விளைச்சல் பெருகச் செய்ய விரும்புகிறீர்களா? அப்படியானுல் உங்கள் நெற்பயிர் 3-4 வாரப் பருவமுடையதாயிருக்கும் கட்டத்தில் அதற்கு ஷெல் களைப்புற்கொல்லி "எம்-50" அல்லது ஷெல் களைப்புற்கொல்லி "டி" தெளித்தால் போதும். இந்த நடைமுறை உங்கள் வேளாண்மையில 30% வீதம் வரை சூறையாடும் சந்தனக் கோரை, சிறு கோரை, மும்முட்டுக் கோரை, கிடச்சி போன்ற அகன்ற இலைக் களைகளைப் பூண்டோடு அழிக்கும்.




ஷெல் ரசாயனப் பொருட்கள்
SHELL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# அரசாங்க ஊழியர், ஆசிரியர்கள் போல அமைச்சர்களுக்கும் வயதுக் கட்டுப்பாடு

ஆசிரியர்கள் அரசாங்க ஊழியர்கள் ஐம்பத்தைந்து வயதை அடைந்ததும் ஓய்வுபெற வேண்டுமென்பது நம் நாட்டிலுள்ள சட்டவிதிகளில் ஒன்று. வேறுபல காரணங்களால் 60வயது வரையும் சேவையிலிருக்க இவர்கள் அனுமதிக்கப்படுவதுமுண்டு.

அரசாங்க ஊழியர், ஆசிரியர்கள்போன்று அமைச்சர்களும் ஒரு குறிப்பிட்ட வயது வந்ததும் ஓய்வு பெறவேண்டும் என்று நமது அமைச்சர்களில் ஒருவரான மொண்டேகு ஜயவிக்கிரம சமீபத்தில் ஓர் அருமையான யோசனையைத் தெரிவித்திருந்தார். இது நமது நாட்டில் செயல்படுமா என்பது சந்தேகம்தான்.

ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்களைப்போல பரீட்சை எழுதி நேர்முகப் பரீட்சைக்குத்தோற்றி பதவிக்கு வருபவர்களல்லர் அமைச்சர்கள். அவர்கள் நிரந்தரமாக இப்பதவியிலிருப்பவர்களுமல்லர். ஆனாலும் அமைச்சர் பதவி வகிப்பதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கலாம். ஒருவர் ஐந்து அல்லது பத்து வருடங்களுக்குமேல் அமைச்சர் பதவி வகிக்கக்கூடாதென்றோ ஒரு குறிப்பிட்ட அதாவது அறுபது வயதுக்கு மேல் உள்ளவர் அமைச்சர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட கூடாதென்றோ ஒரு விதியை ஏற்படுத்தலாம். ஒரு சிலரே மீண்டும் மீண்டும் அமைச்சர்களாகப் பதவி வகிப்பதால் அவர்களுக்கு அப்பதவியில் அலுப்பும் சலிப்பும் ஏற்படும். புதிய உற்சாகத்துடன் வேலை செய்ய முடியாமலிருக்கும். இதனால் அமைச்சர்களைவிட அதிகார வர்க்கத்தினரின் கைதான் ஓங்கி நிற்கும். அதிகாரவர்க்க ஆட்சி நிலவுவதற்கும் இதுதான் காரணம். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குமேல் அல்லது குறிப்பிட்ட வயதுக்குமேல் ஒருவர் அமைச்சர் பதவி வகிக்கக்கூடாதென்ற விதி [illegible]

போட்டியும் குறையும் ஊழல் புகார்களுக்கும் இடமேற்படாது. இந்தக் கட்டுப்பாடு அமைச்சர்களுக்கு மட்டுமல்லாது பிரதம மந்திரிப்பதவிக்கும் ஆட்சிமன்றப் பிரதிநிதிகளுக்கும் கொண்டுவரப்பட்டால் பதவிப் போட்டி அரசியல் ஆதிக்கப்போட்டிகளுக்காக குறுகியவழிகளைக் கையாள இடமிருக்காது; தேசிய ஐக்கியமும் குலைய இடமிருக்காது. இதே சமயம் இளம் தலைமுறையினர் நாட்டுக்குத் தலைமைதாங்கி வழிநடத்த வாய்ப்பேற்படும்.

அமெரிக்காவில் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுபவர் தமது நான்குவருடபதவிக்காலம் முடிந்ததும் மீண்டும் ஜனாதிபதி தேர்தலுக்குப் போட்டியிடலாம். ஒருவர் இரண்டு நான்குவருடங்களுக்குத்தான் ஜனாதிபதியாகப் பதவிவகிக்கலாம். அதன்பின் அவர் அப்பதவிக்குப் போட்டியிடமுடியாது.

# வெறும் வார்த்தைகளால் தேசிய ஐக்கியம் வளராது; செயல் வேண்டும்

அறுபது வயதுக்குமேல் அரசாங்கசேவையிலோ ஆசிரிய சேவையிலோ எவரும் தொடர்ந்திருக்க அனுமதிக்கக்கூடாதென்று நிபந்தனை விதிப்பவர்களும் சட்டம் கொண்டு வருபவர்களும் அறுபது வயதுக்குமேல் ஆட்சி மன்றத்திலிருப்பவர்கள்தான் என்பதை நினைக்கும்போது வேடிக்கையாக அல்லவா இருக்கிறது. அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆற்றலும், அனுபவமும், நிதானமும் உடையவர்கள் என்று கூறுவதில் உண்மை இல்லாமலில்லை. ஆனால் எல்லோரும் ஆற்றலும் அனுபவமும் நிதானமும் உடையவர்கள் என்று சொல்லமுடியுமா?

பிரதமமந்திரி, அமைச்சர்கள், ஆட்சிமன்றப்பிரதிநிதிகள் பத்து வருடங்களுக்குத் [illegible]

என்ற ஒரு விதிமுறை கொண்டுவரப்பட்டால் அரசியலில் ஓரளவாவது தூய்மை ஏற்படலாம். உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இதே விதியை ஏற்படுத்திவிட்டால் பதவிப் போட்டிக்கு அதிகஇடமிருக்காது.

இதைச் செய்வதற்கு யார் முன்வருவர். பூனைக்கு மணி கட்டுவது யார்?

## வெறுங் கை முழம்போடுமா?

''வெறுங்கை முழம் போடாது'' என்பது தமிழிலுள்ள ஒரு பழமொழி. ''தேசிய ஐக்கியம், தேசிய ஐக்கியம்'' என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டி விடமுடியாது. சமஷ்டிக்கட்சியினர் அரசாங்கத்தில் சேர்ந்திருந்தாலும் சரி அரசாங்கத்தை விட்டு விலகினாலும் சரி தேசியஅரசாங்கம், இங்கு தேசிய ஐக்கியத்தைத் தொடர்ந்து பேணிப் பாதுகாத்துவரும் என்றும் சீர்குலைந்துபோன இன, மத ஒற்றுமையை மீண்டும் உருவாக்குவதற்காக எந்தக் கட்சியுடனும், சமஷ்டிக்கட்சியுடனும் கூட தாங்கள் இரகசிய ஒப்பந்தம் எதுவும்செய்துகொள்ளவில்லையென்றும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா யு. என். பி. ஆட்சிக்குழுக் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார். எவ்விதபாகுபாடுமின்றி எல்லோரையும் நியாயமாக அரசாங்கம் நடத்திவருமென்றும் பிரதமர் கூறியிருக்கிறார் ''ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக'' அப்போது எதிர்க்கட்சியினராக இருந்த ஐக்கிய தேசியக்கட்சியினருடன் ஒத்துழைத்த (அவர்களது ஒத்துழைப்பைப் பெற்ற) [illegible]

ஐக்கியத்தை 'நிலைநாட்டுவதற்காக' தேசியஅரசாங்கம் அமைக்க திரு. டட்லி சேனநாயகாவுக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளித்தனர். அரசாங்கத்திலிருந்து சமஷ்டியினர் விலகியதால் (அவர்கள் விலகியதே இன்னும்பலருக்கு நம்ப முடியாமலிருக்கிறது. ஆட்சிமன்றத்தில் கூட இருவர் நம்பிக்கையீனம் தெரிவித்துள்ளனர்.) ஜனநாயகத்துக்கு ஆபத்து வந்துவிடவில்லையென்றும் தேசிய ஐக்கியம் சீர்குலைந்துவிடாது என்றும் பிரதமர்கூறுகிறார்.

தேசிய அரசாங்கம் அமைத்தபின் கல்முனையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் பதினேழாவது மகாநாட்டின் இறுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய பிரதமர் சிறுபான்மையினரின் உரிமைகளைக் காப்பாற்ற முடியாது போனால் பதவியைத் துறப்பதாகக் கூறினார். தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின் சிறுபான்மையினர் சற்று நிம்மதியாக வாழ முடிகிறதென்பது உண்மைதான். ஆயினும் தேர்தல் காலம் நெருங்க நெருங்க 'தி. மு. க' 'நாம் தமிழர்' பூச்சாண்டியும் எம். ஜி. ஆர். படஎதிர்ப்பு தமிழ்ப்பட எதிர்ப்பாகவும் துவேஷமாகவும் மாறிவருகிறதென்பதைப் பிரதமர் அறிந்தும் இன்னும் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை. வடபகுதியில் இராணுவம் இன்னமும் இருக்கத்தான் செய்கிறது. பொலிஸ் கெடுபிடி [illegible]ங்கவில்லை. தமிழ்ப் பகு[illegible]ளிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழில் வாக்கு மூலம் பதிவதற்கான வழி இன்னும் சரியா[illegible] ஏற்படவில்லை. தமிழர் அரசாங்க உத்தியோகத்தைக் காப்பாற்றிக் [illegible]

புதிதாக நியமனம் பெறும் வாய்ப்பும் குறைந்துள்ளது. தமிழ்மக்கள் பல்கலைக் கழகப் படிப்புப் பெறும் வாய்ப்பும் வரவரக் குறைந்து வருகிறது. தமிழ் மக்களைச் சந்தேகப்பிரஜைகளாகக் கருதும் நிலை இன்னும் நீடித்துவருகிறது. திருக்கோணேஸ்வர ஆலயப் பிரதேசப் பகுதியை புனித இடமாகப் பிரகடனப் படுத்த முடியவில்லை.

இந் நிலையில் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டுவோம் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் என்ன அர்த்தம்.

இதனால்தான் ஒற்றையாட்சியிலும் நம்பிக்கை கெட்டு, சமஷ்டிஆட்சியிலும் நம்பிக்கை வைக்க முடியாது 'சுயாட்சி' கோரும் மனப்பான்மை தமிழ் மக்கள் மத்தியில் வளரத் தொடங்குகிறது. தேசிய ஐக்கியம்பற்றி வாயால் சொல்லிக்கொண்டிருப்பதைவிட, செயலில் காட்டும் காலம் வரவேண்டும். அப்போதுதான் உண்மையான ஐக்கியம் நிலவும், நாடும் முன்னேறும்.

## அரசியல் தலையீடு

பொலிஸ் விசாரணைகளில் அரசியல் தலையீடுபற்றி டாக்டர் பந்துல பெரேரா படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து மரண விசாரணை நடத்திய கொழும்பு நகர திடீர் மரண விசாரணை அதிகாரி சரியாகக் குறிப்பிட்டிருந்தார். மே தினத்தன்று பீகிங் [illegible]யூனிஸ்ட் கட்சியினர் பே[illegible]ணிக் கூட்டம் நடத்துவதைத் தவிர்ப்பதற்காக கட்சித் தலைவர் திரு. என் சண்முகதாஸனுக்கு உத்தர[illegible] கோரி கொ[illegible]ம்பு பிரதம நீதிமன்றத்தில் பொலிசார் ஒரு மனு தாக்கல் [illegible] முடிந்தபின் திரு. சண்முகதாஸன் நீதிமன்றத்தில் ஆஜரானார். அந்த மனுவை வாபஸ் பெறுவதாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். ''பொலிஸ் உயர் அதிகாரிகள்மீது நிர்ப்பந்தம் பிரயோகிக்கப்பட்டதும் வழக்குகள் வாபஸ் பெறப்படுகின்றன'' என்று பிரதம நீதவான் திரு. பி. ஜி. எஸ். டேவிட் குறிப்பிட்டார். பொலிஸ் இலாகாவில்மட்டுமல்ல இதர அரசாங்க இலாகாக்களிலும் அரசியல் தலையீடுகளும் நிர்ப்பந்தங்களும் எந்த அளவுக்கு அதிகரித்திருக்கின்றன என்பதற்கு இது ஓர் உதாரணம். நிர்வாக சேவையில் அரசியல் தலையீடு இருக்கும்வரை சீரான நிர்வாகத்தை எதிர்பார்க்க முடியுமா?

# 'தி. மு. கவை தடைசெய்க'

## காலி மாநகரசபை தீர்மானம்

காலி, புதன்

காலி மாநகரசபையின் மாதாந்த கூட்டத்தில் இலங்கையில் தி. மு. க நாம் தமிழர் இயக்கம் ஆகிய இரண்டையும் தடைசெய்ய வேண்டுமெனப் பிரதமர் டட்லி சேனநாயக்காவைக்கேட்பது என்றதீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

காலிமேயர் திரு டபிள்யூ டி எஸ். அபேகுணவர்த்தன தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேற்படி தீர்மானத்தைக் கொண்டுவந்த மாநகரசபை அங்கத்தவருள் ஒருவரான திரு. ரி. டி. டிசில்வா இலங்கையில் தி. மு. க. நாம் தமிழர் இயக்கம் ஆகிய இரண்டினதும் நடவடிக்கைகள் நாட்டின் ஒற்றுமைக்குத் தீங்கு விளைவிக்கத்தக்கதாக இருப்பதாகவும் தோட்டப் பகுதிகளிலேயே இவ்வியக்கங்கள் பரவிவருவதால் அப்பகுதிகள் கண்காணிக்கப்படவேண்டுமெனவும் குறிப்பிட்டார் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

# பொலிஸ் ஜீப்-வான்மோதல் ஜீப்சாரதி ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், வியாழன்

பொலிஸ் ஜீப் ஒன்றும், பீடி வான் ஒன்றும் நடுச் சந்தியில் ஒன்றோடொன்று மோதுண்டன. இதனால் இரண்டு வாகனங்களும் சேதமடைந்ததோடு ஜீப் சாரதியும் காயத்திற்குள்ளானார்.

இந்தவிபத்து நேற்று முன் தினம் மாலை யாழ்ப்பாணம் பீச் வீதிச்சந்தியில் நடைபெற்றது.

காயத்திற்குள்ளான ஜீப் சாரதியான சில்வா யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பந்தப்பட்ட வானின் சாரதியான சுப்பையா முத்துராசா நேற்று பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். வானும் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பொலிசார் மேல் விசாரணை நடத்தி வருகின்றனர்.

(கா. நி)

## பாரதம் இணக்கம்

புதுடில்லி, மே 7

பாகிஸ்தானுடன் வழமையான நல்லுறவை வளர்ப்பதற்கு இயன்றஅனைத்தையும் செய்ய பாரதம் இணக்கம் தெரிவித்துள்ளது. மறைந்த ராஷ்டிரபதி சாகிர் ஹுசேனின் இறுதிச்சடங்கில் பாகிஸ்தான் சார்பில் கலந்து கொள்ள வந்த எயர் மார்ஷலுடன்பாரதப் பிரதமமந்திரிதிருமதி இந்திராகாந்தி நல்லுறவு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த போதே இதைத் தெரிவித்தார்சுமார் அரைமணிநேரம் நடந்த இப்பேச்சுவார்த்தையின் போது இருதரப்பினரும் நன்மையளிக்கத்தக்க கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர்.

## மே. பாக். அதிகாரிகள் பதவி நீக்கம்

ராவல்பிண்டி, மே 7

பாகிஸ்தானில் கடமையிலிருந்த 'சிரேஷ்ட அதிகாரிகளும், செல்வாக்குள்ளவர்களும் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய இடங்களில கிழக்குப் பாகிஸ்தானைச் சேர்ந்த 7 அதிகாரிகள் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கு பாகிஸ்தானியரே உயர் பதவிகளில் இருக்கி [illegible]


விற்பனைக்கு

மோட்டார் உப உறுப்புகளும் தளபாடங்களும். ஓர் ஸ்தாபனத்தின் மோட்டார் உப உறுப்புக்கள் கையிருப்பும் அதற்குரிய தளபாடங்களும் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1105 C/o 'ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம்.

1105

REGAL at JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya, Pre-Poya 10-30 A.M.
WALT DISNEY'S
THE INCREDIBLE JOURNEY
(Color)

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெமினி - விஜயகுமாரி
நடித்த
பெண் என்றால் பெண்

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
முத்துராமன் - ராஜ்ஸ்ரீ
நடித்த
அம்மா எங்கே?

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 P.M.
Pre-Poya Poya, 10-30 a. m
Mickey Hargitay
in
SHIREFF WON'T SHOOT

ராஜா 115வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3காட்சிகள்]
ஜீவனம்சம
ஜெய்சங்கர்
விஜயகுமாரி
நடித்த


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அதிகாரவர்க்க ஆட்சி நிலவுவதற்கும் இதுதான் காரணம். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குமேல் அல்லது குறிப்பிட்ட வயதுக்குமேல் ஒருவர் அமைச்சர் பதவி வகிக்கக்கூடாதென்ற விதியிருந்தால இளம் தலைமுறையினருக்கும் அமைச்சர் பதவி வகிக்கும் வாய்ப்புக் கிடைக்கும். அமைச்சரவையில் சுறுசுறுப்பும் புதிய விறுவிறுப்பும் ஏற்படும். எந்தத் திட்டங்களையும் காலம் தாழ்த்தாது செய்து முடிப்பார்கள். இதற்கு உதாரணமாக திரு. ஆர். பிரேமதாசாவைச் சொல்லலாம். ஒருவரே மீண்டும் மீண்டும் அமைச்சர் பதவிக்கு வரமுடியாதென்ற கட்டுப்பாடு இருக்குமானால் பதவிப் பூசலும் அதிகாரப்

ஆனால் எல்லோரும் ஆற்றலும் அனுபவமும் நிதானமும் உடையவர்கள் என்று சொல்லமுடியுமா?

பிரதமமந்திரி, அமைச்சர்கள், ஆட்சிமன்றப்பிரதிநிதிகள் பத்து வருடங்களுக்குத்தான் பதவியிலிருக்கலாம்

மர் கூறியிருக்கிறார் ''ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக'' அப்போது எதிர்க்கட்சியினராக இருந்த ஐக்கிய தேசியக்கட்சியினருடன் ஒத்துழைத்த (அவர்களது ஒத்துழைப்பைப் பெற்ற) சமஷ்டிக்கட்சியினர், தேசிய

பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழில் வாக்கு மூலம் பதிவதற்கான வழி இன்னும் சரியாக ஏற்படவில்லை. தமிழர் அரசாங்க உத்தியோகத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் முடியவில்லை

கூட்டம் நடத்துவதைத் தவிர்ப்பதற்காக கட்சித் தலைவர் திரு. என் சண்முகதாஸனுக்கு உத்தரவிடும்படி கோரி கொழும்பு பிரதம நீதிமன்றத்தில் பொலிசார் ஒரு மனுதாக்கல் செய்திருந்தனர். மே தினம்

# இந்தியாவின் அடுத்த ஜனாதிபதி யார்?

மின்னல் முழங்காமல் இடி விழுந்ததென் பார்கள். இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஸாகிர் ஹுசேனின் மறைவும் இப்படித்தான் நேர்ந்திருக்கிறது. திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் அவருக்கு மரணம் ஏற்பட்டது. என்றாலும் ராஷ்டிரபதி பவன் அலுவலாளர்கள் டாக்டர் ஸாகிர் ஹுசேன் நோய்வாய்ப்பட்டதும் அறிவிக்கவில்லையென்றும், சரியான கவனம் எடுக்கவில்லையென்றும் சில புகார்கள் கிளம்பியிருக்கின்றன. எப்படியோ சிறந்த அறிவாளியும், பண்பும், அன்பும் நிறைந்த டாக்டர் ஹுசேன் மறைந்து விட்டார். அவர்மீது மக்கள் கொண்டிருந்த அன்பும் மதிப்பும் அவரது இறுதி யாத்திரையின் போது காணக்கூடியதாக இருந்தது.

டாக்டர் ஸாகிர் ஹுசேனின் பூதவுடல் ராஷ்டிரபதி பவன் தர்பார் மண்டபத்தில் பொதுமக்கள் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்துவதற்காக வைக்கப்பட்டிருந்தபோதே அதாவது அவரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படுவதற்கு முன்னதாகவே ஜனாதிபதி பதவிக்கு யாரை நிறுத்தலாம் என்ற பேச்சு சில வட்டாரங்களில் அடிபடத் தொடங்கி விட்டது.

இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. அதிபர் பதவிக்காகவும் ஆட்சி பீடத்திலமர்வதற்காகவும் கொலைகளும் பலாத்காரச் செயல்களும் உலகநாடுகள் பலவற்றிலும் நடந்திருக்கின்றன. சில குடும்பங்களில்கூட 'கிழவி எப்போது கண்ணை மூடும் சொத்துக்களைப் பங்கு போட்டுக் கொள்ளலாம்' என்று காத்திருப்பவர்களும் ''கண்ணை மூடியதும் சொத்துக்காக அடிபிடிப்படுவதும் காணமுடியாத காட்சிகளல்ல. இந்தியக் குடியரசின் அடுத்த தலைவர் யார் என்ற பேச்சு

## உலக மேடை

எஸ். எம். ஜி.

புதுடில்லியில் எழுந்தபோது சிலர், ''இப்போது அதற்கென்ன அவசரம். மறைந்த தலைவரின் பூதவுடல் நல்லடக்கம்செய்யப்படுவதற்கு முன்னரே அதைப்பற்றி என்ன பேச்சு'' என்று மட்டந்தட்டிவிட்டனர்.

ஆனாலும் ''இந்திவெறியர்'' என்றுபெயர்பெற்ற காங்கிரசைச்சேர்ந்த சேத் கோவிந்த தாஸ், இந்தியக் குடியரசின் அடுத்த தலைவராக திரு. ஜகஜீவன்ராம் தெரிவுசெய்யப்படவேண்டுமென்று தமது விருப்பத்தைப் பகிரங்கமாகத் தெரிவித்து 'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்து'வைத்திருக்கிறார்.

திரு. ஜகஜீவன்ராமின் பெயருடன் வேறுபல பெயர்களும் இந்தியக் குடியரசின் அடுத்த தலைவர் பதவிக்கு அடிபடத் தொடங்கியிருக்கின்றன. ஆனால் மூவருடைய பெயர்கள்தான் பல வட்டாரங்களிலும் பலமாக அடிபடுகின்றன. திரு. ஜகஜீவன்ராம், சர்வோதயத்தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ்நாராயண், திரு கு. காமராஜ் ஆகியோர்தான் அந்த மூவரும். திரு. ஜகஜீவன்ராம் தீவிரமாக அரசியலில் ஈடுபட்டுள்ளவர். திரு. காமராஜர் காங்கிரஸ்தூண்களில் முக்கியமானவர். காங்கிரஸின் வளர்ச்சியில் அதிக அக்கறை உடையவர். இவர்களிருவரும்ராஷ்டிரபதிபவனில் அமைதியாக அடங்கிஒடுங்கியிருக்க விரும்புவார்களா என்பது கேள்வி. காமராஜரை வற்புறுத்தினாலும் அவர் 'நாடி பிடித்துப்பார்க்காமல்' இதற்கு ஒப்புக்கொள்ள மாட்டார். போட்டியின்றி இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவதானால் காமராஜர் ஒப்புக்கொள்ளக்கூடுமென்று கூறப்படுகிறது. இதற்கு ராஜாஜியின் சுதந்திரக்கட்சி ஒப்புக்கொள்ளுமா? திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் ஒரு கட்சி அபேட்சகராக குடியரசுத் தலைவர் பதவிக்கு நியமிக்க ஒப்புக்கொள்ளுவாரா என்பது சந்தேகம். அதேசமயம் அவரைக் குடியரசுத்தலைவர் பதவியேற்கமுன்வரவேண்டுமென்று காங்கிரஸார் கேட்பார்களா என்பதும் சந்தேகமே.

டாக்டர் ஹுசேனின் மறைவைத்தொடர்ந்து தற்காலிக ஜனாதிபதியாக இருக்கும் டாக்டர் வி. வி. கிரியை இதுவரை பின்பற்றிவந்த வழக்கத்தின்படி ஜனாதிபதி பதவிக்குத் தெரிவு செய்ய காங்கிரஸில் ஒருபகுதியினர் விரும்பவில்லை. என்றாலும் ஜனாதிபதி தேர்தலை சுமுகமாக அமைதியாக நடத்தி முடிக்க பிரதமர் இந்திரா தமது முயற்சிகளை மேற்கொள்வாரென எதிர்பார்க்கலாம். டாக்டர் ஸாகிர் ஹுசேனுடன் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டுத் தோல்வியடைந்த முன்னாள் இந்திய பிரதம நீதியரசர் டாக்டர் சுப்பாராவின் பெயரும் மற்றொரு முன்னாள் பிரதம நீதியரசர் திரு. பி. பி. கஜேந்திர கட்கரின் பெயரும் அடிபடுகின்றன. இதே சமயம் இந்துக்களும் ஒரு முஸ்லிமும் ஜனாதிபதி பதவி வகித்துள்ளதால் சீக்கியர் ஒருவரை அப்பதவிக்குத் தெரிவு செய்ய வேண்டுமென்ற குரலும் எழுந்துள்ளது. பிராந்தியம், மொழி, மத அடிப்படையில் ஜனாதிபதி தெரிவு நடைபெறத் தொடங்குமானால் புதிதாகப் பல பிரச்னைகளை அங்கு தோற்றுவிக்கக் கூடும்.

ஆறுமாதத்துக்குள் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படவேண்டும். திரு. ஜகஜீவன்ராம் ஹரிஜனத் தலைவர். ஹரிஜன வாக்குகளே டாக்டர் ஸாகிர் ஹுசேன் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்குப் பெரிதும் உதவின. மாநிலங்களில் காங்கிரஸ் பலஹீனமான நிலையிலுள்ள இச்சமயத்தில் புதிய ஜனாதிபதி தேர்தல் இந்திய காங்கிரசுக்கு ஒரு சோதனைதான்.

கிழக்குப் பாகிஸ்தானைச் சேர்ந்த 7 அதிகாரிகள் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கு பாகிஸ்தானியரே உயர் பதவிகளில் இருக்கிறார்கள் என்ற கிழக்குப் பாகிஸ்தானியரின் பலத்த எதிர்ப்பைத் தொடர்ந்தே அதிபர் யாஹ்யகான் இவ்வித மாறுதல்களைச் செய்துள்ளதாகத் தெரிகிறது. மேற்கு பாகிஸ்தானைச் சேர்ந்தபொருளாதார அமைச்சர் ஜனாப் அகமட், வெளிநாட்டு அமைச்சுக்காரியதரிசி ஜனாப் யூசுப் ஆகிய இருவரும் பதவி நீக்கம் செய்யப்பட்ட சிரேஷ்ட அதிகாரிகளுட் சிலராவர்.

......

## சீனாவு கலந்துகொண்டது

புதுடில்லி, மே. 7

சீன தூதரகப் பொறுப்பதிகாரி திரு. சென்-சே யுவானும் டாக்டர் சாகிர் ஹுசேனின் சடலம் நல்லடக்கம் செய்யப்பட்ட ஜமியா மிலியாவில் பிரசன்னமாயிருந்தார் இதற்கு முன்னர் திரு. சென்-சோ-யுவான் ராஷ்டிரபதி பவனத்திற்குச் சென்று டாக்டர் சாகிர் ஹுசேனின் சடலத்தின்மீது மலர் வளையம் வைத்து மரியாதை செய்தார். சீனத் தூதரகத்தில் சீனக்கொடி தாழ்வாகப் பறக்கிறது.

......

காந்தியின் பேரன்

## திருமண நிகழ்ச்சி இருதடவைகள்

எங்ஸ்டவுன், மே. 7

மகாத்மா காந்தியின் பேரன் டாக்டர் சாந்திகுமார் காந்தியின் திருமணம் சமீபத்தில் அமெரிக்காவில் நடைபெற்றது. 'எங்ஸ்டவு'னில் உள்ள ஆஸ்பத்திரியொன்றில் டாக்டராகக் கடமையாற்றி வரும் இவர் அமெரிக்கப் பெண்ணான லாபோர்ஸ் என்பவரைத் திருமணம் செய்துள்ளார். இவரின் திருமண நிகழ்ச்சி இந்து முறைப்படியும் கிறிஸ்தவ முறைப்படியும் இருமுறை நடந்தது.

## கண்காட்சி

யாழ்ப்பாணம், வியாழன்

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் கலை, விஞ்ஞான, கைப்பணிக் காட்சி ஒன்றை இன்று மாலை ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் திறந்து வைப்பார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 8—5—69**

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6 35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 பௌத்த நற்சிந்தனை 6-50 துதிப்பாடல்கள், 7-30 படப்பாட்டு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவு, 8-15 ஞானாமிர்தம், 8-30 சைவநீதி, 9-00 செய்திச் சுருக்கம், 10-00 செய்திச் சுருக்கம், 10-03 மத்தாப்பு, 10-30 படத்திலிருந்து, 11-00 செய்திச்சுருக்கம், 11-03 படத்திலிருந்து, 11-15 சிறுவர் மலர்.

344 மீ அன் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 எங்கள் அதிதிகள், 1-00 குங்குமம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன் 61 மீ

மாலை 4-30 செய்திச்சுருக்கம், 4-35 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர்மலர். இரவு 6-15 பாமாலை, 6-30 பஜனை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 தாளவாத்தியக்கச்சேரி, 7-35 பேச்சு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 நிகழ்ச்சித்தொகுப்பு 9-40 கர்னாடக இசை, 10-30 செய்திச்சுருக்கம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மே மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

[தினசரி 3காட்சிகள்] நடித்த

ஜீவனாம்சம்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் ★ ஜெயலலிதா
ஏ. வி. எம். ராஜன், ஜோதிலக்ஷ்மி
சோ, நாகேஷ்
நடித்த
ராம்குமார் பிக்சர்ஸ்
கலாட்டா கல்யாணம்

இப்பொழுது திரையிடப்படுகிறது!
யாழ் வெலிங்டன் திரையில்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-00 இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம் போயா தினம்,
விடுமுறை நாட்களில் காலை 10-00 மணிக்கு



பத்மஸ்ரீ குணசித்திர நடிகர்
பானுமதி — எஸ் வி. ரங்கராவ்
ஏ. வி. எம். ராஜன் – பண்டரிபாய்
முத்துராமன் — பாரதி — நாகேஷ்
நடிக்கும்
வாசு பிலிம்ஸ் அளிக்கும்
பூவும் பொட்டும்
டைரக்ஷன்
தாதாமிராசி

கிங்ஸ்லி பிளாஸா ஸ்ரீ கிருஷ்ணா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (திருமலை)
ரவிச்சந்திரன் - காஞ்சனா - நாகேஷ்
நடிந்த
அதே கண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org